
காதல்
கொண்டது
மனது
ரமணிசந்திரன்

# காதல் கொண்டது மனது

**ரமணிசந்திரன்**

தமிழன் நிலையம்
5, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

# நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| நூலின் பெயர் | : காதல் கொண்டது மனது |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| ஏழாம் பதிப்பு | : அக்டோபர், 2013 |
| தாளின் தன்மை | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| பக்கங்கள் | : 184 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : தமிழன் நிலையம்<br>5, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.80.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் ✆:94441-01753 |
| அச்சிட்டோர் | : குமரன் பிரிண்டர்ஸ்,<br>போன் : 9840464862 |



# காதல்
# கொண்டது
# மனது

# காதல் கொண்டது மனது



1

அத்தனை பேர் கூட்டத்திலும், அவனது நாசி, அவளது வாசனையை வெகு எளிதாக உணர்ந்தது! மனதை மயக்கும் மனோகரமான வாசனை!

எங்கே என்று அவசரமாக அலசிய விழிகளுக்கு விருந்தாக, அந்த விசாலமான கூட அறையின் வாயிலை ஒட்டி, அவன் அமர்ந்திருந்த வரிசைக்கு ஓரளவு சமீபமாகத்தான் நின்று கொண்டிருந்தாள் அவள்.

வெறுமனே நிற்பதிலேதான் என்ன ஒயில்! பார்க்கும்போதே, மனம் பரவசமாகி விட்டதே!

பார்க்கும்போதே இப்படி என்றால் தொடும்போது... பூக்குவியலை அள்ளினாற் போல, முந்தைய நாள் நேர்ந்த அந்த அனுபவம், அப்போதும், அவனை மெய் சிலிர்க்க வைத்தது.

ஆனால், அவனுக்கு ஆனந்தத்தை அள்ளித் தந்தது தான் என்றாலும், அந்த அனுபவத்தின் காரணத்தை எண்ணும்போது அவனுக்கு ஆத்திரமாகவே இருந்தது.

அழகான பெண்களைக் கண்டாலே, சில ஆண் களுக்கு இப்படி ஒரு மட்டரக ஆசை! அத்து மீறி, அவர்களைச் சீண்டுவது!

அசிங்கமாக உரச வந்த தடிமாடு, உத்தமப் பெண் களின் உள்ளுணர்வோடு, அவள் அவசரமாக நகர்ந்து விடவே, ஆத்திரத்தில், காலைத் தட்டி விட்டு விட்டான்.

எவ்வளவோ சமாளித்துப் பார்த்தும் முடியாமல், அந்தப் பூக்குவியல் அவன்மீது சாய்ந்துவிட்டது.

அவள் விழுந்துவிடாமல் தாங்கி நிறுத்துமுன், அவள் எப்படிப் பதறிப் போனாள்! ''சாரி, சாரி, சாரி! மன்னித்து விடுங்கள்! ஒருவன் தட்டி விட்டதில்... சாரி, சாரி!'' என்று எத்தனை முறை மன்னிப்புக் கேட்டுவிட்டாள்!

அப்போதுதான் அவன் அவளைச் சரியாகப் பார்த் ததே! இந்தப் பூமேனியை, ஒருவன் விழத் தட்டுவதா?''

வந்த கோபத்தில், அவனைப் பிடித்துத் துவைத்து எடுத்துவிட வேண்டும் என்று ஆத்திரத்துடன், கோழை யாய் ஓடி மறைந்து கொண்டிருந்தவனைத் தொடரக் காலடி எடுத்து வைத்தால், அவள் விடவில்லை.

சட்டென அவன் கையைப் பிடித்து நிறுத்தி, ''வேண் டாம், வேண்டாம். அவன் யாராவது முக்கியமான ஆளாக இருக்கக் கூடும்! அப்புறம் உங்களுக்கு ஆபத் தாகி விடும்!'' என்று அவனுக்காக அல்லவோ கவலைப் பட்டாள்.

ஆனாலும், அந்த ராஸ்கலை விடக் கூடாது என்று தான் அவன் நினைத்தான். ஆனால், பற்றியிருந்த அந்தப் பூங்கரத்தை உதறிவிட்டுப் போக, அவனுக்கு மனம் வரவில்லை.

அடி ஒன்றும் படவில்லை என்று வாயால் உறுதி சொன்னபோதும், அவள் காலைச் சாய்த்து நடப்பதைக் கவனித்து, அவளைத் தாங்கியவாறு கூட்டிச் சென்று டாக்சியில் ஏற்றி விட்டுவிட்டு வந்தான்.

பேசும் கண்கள்! எப்படிப் பார்வையாலேயே நன்றி தெரிவித்தாள்!

மீண்டும் ஒரு தரம் அந்தக் காந்தக் கண்களை நேருக்கு நேர் பார்க்க வேண்டும்போல, அவன் மனம் துடித்தது.

அருகில்தானே நிற்கிறாள்! மேடையில் பேசியவரின் பேச்சும் ரசிக்கவில்லை. அப்படியே, பேச்சாளர் ஏதாவது முக்கியமான கருத்தைச் சொன்னாலும், யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொண்டால் போயிற்று.

இப்போது, இந்தப் பூக்குவியலை விட்டுவிடக் கூடாது. முன் தினமே யார், என்ன என்று அவளிடம் விசாரித்திருக்க வேண்டும். இன்றும் அந்த வாய்ப்பை விட்டுவிடக் கூடாது.

அவசரமாக அவன் எழும்போதே, அந்த அழகியும் நகர்வது, அவன் கண்ணில் பட்டது.

பெயர் தெரியாததால், அவளைக் கூப்பிடக்கூட முடியாது.

அவள் எங்கேனும் போய்விடுமுன் பிடிக்கவேண்டுமே என்று, அவள் மீது ஒரு கண்ணை வைத்தபடி விரைந்தவன், அந்த வரிசையில் ஓரமாக அமர்ந்திருந்த ஒருவரின் காலை மிதித்து விட்டான்.

'ஒரு கூட்டம் நடக்கிறபோது, இப்படித்தான் சொந்த வீட்டில் அமர்வது போலக் காலை நீட்டிக்கொண்டு உட்காருவதா?' என்று ஆத்திரத்தோடு கேட்கத்

திரும்பினால், மனிதர், பாவம், வயதானவர். ஒரே மாதிரி உட்கார்ந்திருக்க முடியாமல், காலை நீட்டினார் போலும்!

ஆனாலும்.... என்று அவன் ஆத்திரமாக எண்ணும் போதே, "அவசரமா, தம்பி?" என்று, காலை லேசாகத் தேய்த்துவிட்டபடியே அவர் வினவினார்.

இல்லை. உன்னுடன் உட்கார்ந்து, ஓர் ஆட்டம் செஸ் விளையாடுகிற அளவு அவகாசத்தை வைத்துக்கொண்டு தான், இவ்வளவு வேகமாக வந்தேன் என்று, துடுக்கான வார்த்தைகள், அவனது தொண்டையுள் துடிக்கையில், பெரியவரே பேசினார்.

"வாதம், தம்பி! காலை நீட்டி மடக்குவது சற்று சிரமம்! அதனால்தான், ஓரமாக வந்து உட்கார்ந்தேன். அவசரமாகப் போகிறவனைத் தடுத்து நிறுத்தி விட்டேனே, சாரிம்மா!" என்று பெரியவர் வருத்தம் தெரிவிக்கவும்தான், அவரது காலை மிதித்ததற்குத் தான் இன்னமும் மன்னிப்புக் கேட்கவில்லை என்பது, அவனுக்கு நினைவு வந்தது.

லேசாகத் திரும்பி அமர்ந்துகொண்டு, "நீங்கள் போங் கள், தம்பி!" என்றார், பெரியவரே தொடர்ந்து.

உள்ளூர வெட்கி, "சாரி, சார்! கவனிக்காமல் மிதித்து விட்டேன்! மன்னித்துக் கொள்ளுங்கள்! ரொம்பவும் வலிக்கிறதோ?" என்று, மெய்யான கவலையுடனேயே கேட்டான், அவன்.

"வலி என்ன, பெரிய வலி! பழகிப் போனதுதானே! உங்கள் அவசர வேலை கெட்டுவிட வேண்டாம். கிளம்புங்கள்!" என்று, அவர் சொல்லிக் கொண்டிருக் கும்போதே, தன் அவசரம் நினைவு வந்து, அவள் நின்ற

இடத்தைப் பார்த்தால், அந்த இடமே இருட்டாகி விட்டது போல, அங்கே அவளைக் காணோம்.

அவள் நகர்ந்த திசையைப் பார்வையால் சலித்தவனின் முகத்தில் நிராசை பரவியது, அவளைக் காணவே காணோம்.

எல்லாம், இந்தக் கிழவரால் நேர்ந்தது. இவர் மட்டும் பாதையில் காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திரா விட்டால், இப்போது அந்த எழிலரசியுடன் பேசிக் கொண்டு இருந்திருக்கலாம்.

அவன் முகத்தையே பார்த்திருந்தார் போலும். ''அடடா! உங்கள் ஆளைக் காணோமா, தம்பி? சீக்கிரமாகப் போய்த் தேடிப் பாருங்கள்! எதற்கும், போகிற பாதையிலும் கவனம் செலுத்திப் போங்கள். என்னை மாதிரி, இன்னும் எத்தனையோ! எது, எதற்காக நடக்கிறது என்று, நமக்கு என்ன புரிகிறது?''

வேலை வெட்டி கிடையாது போலும்! வேளை தெரியாமல் மனிதர் வேதாந்தம் பேச வந்து விட்டார். கை வலி, கால் வலியோடு இங்கே வந்து, அவன் கழுத்தை ஏன் அறுக்க வேண்டும்? வயதானால், அவன் அப்பா மாதிரி வீட்டில் இருப்பதுதானே! நெஞ்சில் லேசான வலி தோன்றியதுமே, இது போன்ற வெளியூர் வேலைகளை எல்லாம், மகனிடம் கொடுத்து விட்டு, ஒதுங்கி விடவில்லை?

அப்படியும் பிறகு ஸ்ட்ரோக் வந்தது, வேறு விஷயம்.

ஆனால், இந்த மாதிரி, முடியாத வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்கிறேன் பேர்வழி என்று, மற்றவர்களுக்குத் தொல்லை கொடுப்பதா?

ஆத்திரத்தோடு எண்ணமிட்டவன், அவருக்குப் பதில் சொல்லாமலே, அவ்விடம் விட்டு விரைந்தான்.

தென்னிந்தியத் தொழில் மற்றும் வர்த்தக சங்கம், இந்தக் கூட்டத்துக்காக ஏற்பாடு செய்திருந்த ஹால், அளவில் பெரியது. பெரிய அளவில் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்காகக் கட்டப்பட்டது. ரசிகர்களை வெளியிலிருந்தே பிரித்து உள்ளே அனுப்பி, கட்டணங்களுக்கு ஏற்றபடி, அமர வைக்க வசதியாக, அங்கங்கே பெரிய கதவுகள் இருந்தன.

அவைகளில், அவன் அமர்ந்திருந்த இடத்துக்கு நேரே இருந்த கதவின் அருகில்தான், அந்த அழகி நின்று கொண்டிருந்தாள்.

அதற்குள் எங்கே போயிருப்பாள்?

உள்ளும் புறமுமாகச் சென்று, அவளைத் தேடித் தேடி அலைந்து, அவன் மிகவும் அலுத்துப் போனான்.

சுமார் நூற்றைம்பது பேருக்கு மேலாகக் கூட்டத்துக்கு வந்திருந்தபடியால், வந்தவர்களுக்கு உதவுவதற்காகப் பலரை அமர்த்தியிருந்தார்கள்.

அவர்களிடம் கேட்டால், ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு, அவளைத் தேடிக் கண்டுபிடித்து, அவள் இருக்கும் இடத்தைச் சொல்லி விடுவார்கள்தான்.

ஆனால், அவளது பெயரே தெரியாதபோது, என்னவென்று சொல்லிக் கேட்பது?

இன்ன மாதிரி அழகி என்றா? எவ்வளவு தப்பாகத் தோன்றும்!

அவனை எவ்வளவு கேவலமாக எடை போட்டு விடுவார்கள்!

சே! எவன் கால் மிதிபட்டால் எனக்கென்ன என்று, நில்லாமல் சென்றிருக்க வேண்டும். பாவம் என்று நின்றது, சுத்த மடத்தனம்.

நிராசையின் விளைவாகத் தன்னையே நிந்தித்த வண்ணம், உலகையே வெறுத்து அவன் நிற்கையில், யாரோ பூவால் அவ்னை வருடினார்கள்.

திரும்பிப் பார்த்தால், அவள்!



2

சற்று நேரம் அவனுக்குத் தன் கண் களையே நம்ப முடியவில்லை.

இவளை இவ்வளவு நேரம் தேடின தென்ன! காணவில்லையே என்று பரிதவித்த தென்ன!

கடைசியில், அவளாக, ஒரு தேவதை மாதிரித் திடுமெனத் தோன்றித், தன் மெல்லிய விரல்களால், அவனது தோளை வேறு, தொட்டுக் கொண்டிருக்கிறாளே!

இமை தட்டாமல் பார்த்தபடி, அவன் பிரமித்து நிற்கையில், ''சாரி சார்! உங்கள் பெயர் தெரியாததால், தொட்டுக் கூப்பிடும்படி ஆயிற்று. மன்னித்துக் கொள் ளுங்கள்!'' என்று கிளிக் குரலில் மிழற்றினாள் அவள்.

மன்னிப்பதா? அவளையா? தன் பூங்கரத்தால் தொட்டு, அவனைச் சொர்க்கத்துக்கு அழைத்துச் சென்றதற்கு, அவளுக்கு நன்றியல்லவா சொல்ல வேண்டும்!

ஆனால், இன்றையப் பொய்ப் பூச்சு உலகத்தில், அப்படி வெளிப்படையாகப் பேசுவது அநாகரீகமாகத் தோன்றும் என்பதால், ''மன்னிப்பதா? அதெல்லாம் எதற்கு?'' என்று அசடு வழிந்தான் அவன்.

உடனேயே, அவள் கூப்பிட்டதாகச் சொன்னது நினைவு வர, லேசாகத் தொண்டையைச் செருமிக் கொண்டு, "என்னைத் தேடினீர்களா? ஏதாவது உதவி தேவையா? அந்த ஆள் ஏதாவது வம்பு செய்தானா? செய்திருந்தால் சொல்லுங்கள். அவனைப் புரட்டி எடுத்து விடுகிறேன்!" என்றான் வீராவேசமாக.

"ஐயோ, அதெல்லாம் இல்லை. நேற்று உங்களுக்கு நன்றி சொல்லாமலே போய்விட்டேனா? அதை நினைத்து இரவெல்லாம் தூக்கமே வரவில்லை. நீங்கள் என்னைத் தப்பாக எண்ணியிருப்பீர்களோ என்று தவித்துப் போனேன்!" என்று தன் தேன் குரலில் மொழிந்தாள், அவள்.

சூடும் குளிர்ச்சியுமாக உணர்ந்தான் அவன்.

இரவு முழுவதும், அவள் தன்னை நினைத்துக் கொண் டிருந்தாள் என்பதில் பரவசம்! அதே சமயம், அவள் வேதனைப்பட்டிருக்கிறாளே என்பதில் மிக வருத்தம்!

"என்ன நீங்கள், இதற்காகப் போய்த் தூங்காமல் உடம்பைக் கெடுத்துக் கொள்வார்களா? உப்புப் பெறாத விஷயம்!" என்றான் ஆறுதலாக.

"உங்கள் உயர்ந்த குணம், உப்புப் பெறாத விஷயம் என்கிறீர்கள். ஆனால், நான் அப்படி அலட்சியப்படுத்த முடியுமா? மன்னிப்புக் கேட்பதற்காகத்தான், உங்கள் பின்னே அரை மணி நேரமாக ஓடி ஓடி வந்து கொண்டிருந்தேன். காலே ஓய்ந்து போயிற்று. பெயர் தெரியாததால், கூப்பிடவும் முடியாமல்... அதனால் தான் தொட்டு... சாரி!" என்று குழைந்தாள் அவள்.

அவனுக்கு ஆச்சரியம் தாளவில்லை.

அரை மணி நேரமாக, அவளும் அவனிடம் பேசத் தான் முயன்றிருக்கிறாள்! பெயர் தெரியாத பிரச் சினையால்தான், அவளும் திண்டாடியிருக்கிறாள்.

எல்லாம், அவனைப் போலவே.

என்ன பொருத்தம்!

அவள் இவ்வளவு சொன்ன பிறகு, தன் நிலையைச் சொல்வதில், அவனுக்குக் கூச்சம் இருக்கவில்லை.

விவரம் அறிந்ததும், அவள் கிண்கிணியாக நகைத் தாள்.

சூழ இருந்தவர்கள் திரும்பிப் பார்த்தபோதுகூட, அவனுக்குப் பெருமையாகத்தான் இருந்தது. இந்தப் பேரழகி அவனோடுதானே இணைந்து நிற்கிறாள்!

இருவரும் ஒருவருக்கொருவர் பெயர்களைப் பரி மாறிக் கொண்டதும், அதைக் கொண்டாடச் சேர்ந்து காபி ஷாப்புக்குச் சென்றார்கள். கேக், கட்லட், எக் பஃப், டிரம்ஸ்டிக் என்று, ஏதேதோ வரவழைத்து, உரையாடிய வாறே உண்டார்கள்.

பில் வந்ததும், ''நான்தான் பணம் கொடுப்பேன்!'' என்று நீதா கைப்பையைத் திறக்க முயற்சிக்க, அவன் அதைப் பிடுங்கி, மூடிவிட்டுத் தானே கொடுத்தான்.

மெல்ல நடந்தவாறே, அந்த வளாகத்தில் இருந்த ஷாப்பிங் காம்ப்ளக்சுக்குள் நுழைந்தார்கள்.

இரவு கணக்குப் பார்க்கும்போது, அன்று மட்டும் பதினைந்தாயிரம் ரூபாய் செலவாகியிருந்தது, அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது!

நல்ல வேளையாகக் கிரடிட் கார்டு இருந்தது.

ஆனால் பணமா பெரிது? நீதா மறுக்க மறுக்க, அவள் பார்த்து ரசித்த பொருட்களைப் பிடிவாதமாக வாங்கி, அவளது கரங்களைத் தொட்டுத் திணிக்கையில் எவ்வளவு ஆனந்தமாக இருந்தது! அது போதாதா?

நீதா யார்? யாருடைய பிரதிநிதியாக இந்தக் கூட்டத் துக்கு வந்திருக்கிறாள்? அல்லது, அவளே ஏதேனும் நிறுவனத்தின் சொந்தக்காரியா?

மற்ற உறுப்பினர்களோடு ஒப்பிடும்போது, அவனே மிகவும் சிறு வயதினனாகத் தோன்றும். நீதா அவனை விடவும் சின்னவள். ஒருவேளை, அவளும் அவனைப் போலவே, வேறு வழியின்றித்தான் வர நேர்ந்ததா?

இதையெல்லாம் ஒன்றும் தெரிந்து கொள்ளாமல், நாள் முழுவதும் அவளோடு சுற்றியதை நினைக்கையில், அவனுக்குச் சற்று வெட்கமாகக்கூட இருந்தது.

ஆனால், அவளைப் பார்க்கையில், இத்தகைய வினாக்கள் எதுவுமே நினைவு வருவதில்லை!

'பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையைப் பார்த்த மாதிரி' என்று ஒரு பழைய சொற்றொடர் படித்திருக் கிறான். அதைப் போல, நீதாவை விட்டுக் கண்ணை அகற்ற முடிவதில்லை அவனுக்கு. கிண்கிணி நாதம் போல, அவளது குரலைக் கேட்பதும், பூவால் ஒற்றுவது போல, அவளோடு செல்லும்போது, அவ்வப்போது ஏற்படும் லேசான உரசல்களும், அவனை வேறு எதையுமே நினைக்கக் கூட விடுவதில்லை போலும்.

ஆனால், இப்படி ஒரு தேவலோகக் கன்னி அருகில் நின்று சிரித்துப் பேசுகையில், வேறு எதுதான் நினைவு வரும்? ஏதோ, பெயரையாவது கேட்கத் தோன்றியதே!

அந்த அளவுக்குச் சுய நினைவோடுதான் இருக்கிறோம் என்று எண்ணும்போதே, சுய நினைவோடு இருப்பதே பெரிய காரியம் போலத் தோன்றுகிறதே என்று அவனுக்குத் தன்னை எண்ணியே சிரிப்பும் வந்தது.

அந்த அளவுக்கு நீதாவிடம் பைத்தியம் பிடித்து விட்டது போல என்று எண்ணும்போதும், அவனுக்குச் சிரிப்புதான்.

அந்தப் புன்னகையுடனேயே தூங்கிப் போனான் அவன்.

மறுநாள் கூட்டத்துக்குப் போனபோதும், அவனது கண்கள் நீதாவைத்தான் தேடின!

ஆனால், பூவைக்குப் பதிலாக, பூஜை வேளைக் கரடி போல, அவன் அருகே வந்து அமர்ந்து, "தம்பீ!" என்று கரகரத்த குரலில் அழைத்தது, அந்தப் பெரியவர்.

அவனிடம் அன்று மிதிபட்டவர்!



3

நீதாவின் அழகிய திரு உருவத்தைத் தேடிக்கொண்டு இருக்கையில், பெரிய நரை மீசையுடன் அந்தப் பெரியவரைப் பார்க்கையில், அவனுக்குக் கரடியின் நினைவுதான் வந்தது.

சரியான பூஜை வேளைக் கரடி!

ஆனால், பெரியவர்களிடம் மரியாதை காட்டும் பழக்கம் உடையவன் ஆதலால், அவனால் முகம் திருப்பவும் முடியவில்லை.

வேறு வழியின்றி, "வணக்கம், சார்! காலில் மேற்கொண்டு பிரச்சினை எதுவும் இல்லையே?" என்று விசாரித்தான்.

''ஐயோ, அதெல்லாம் ஒன்றும் இல்லை, தம்பி! நான் வந்தது, வேறு காரியமாக. நேற்றுக் கொஞ்சம் உடல் நிலை சரியில்லை. பேசாமல், அறையில் படுத்துத் தூங்கி விட்டேன்! எனக்கு நேற்று மாலைக் குறிப்புகள் வேண் டும். வர்த்தகத் துறைக்கு அரசு மொத்தமாக ஏதாவது செய்வதாக இருக்கிறார்களா? அல்லது, வழக்கம் போல, ஒன்றிரண்டு அயிட்டங்களுக்கு மட்டும் சலுகை கொடுத்து உட்பிளவைத் தூண்டிவிட்டுச் சமாளிப்பதாகத் தெரிகிறதா? இந்த மூன்று நாட்களாகப் பார்த்ததில், நீங்கள் வேலையில் முனைப்பாக இருப்பது தெரிந்தது. அதனால்தான் உங்களிடம் கேட்க வந்தேன்.''

'நேற்று நானும் கவனிக்கவில்லை!' என்று, அந்தப் பெரியவரிடம் சொல்ல, அவனுக்கு ஒரு மாதிரி இருந்தது. அதை விடவும் கவனியாததின் காரணத்தை வாய் விட்டுச் சொல்ல ரொம்பவும் கூச்சமாக உணர்ந்தான்.

ஒரு பெண்ணின் மயக்கத்தில், வந்த வேலையை விட்டு விட்டேன் என்று சொல்வது... ஊகூம்! தனக்குத் தானே நினைத்துப் பார்க்கக்கூட வெட்கம்தான். ஆனால்...

எங்கோ பார்த்தபடி, ''நேற்று எனக்கும்கூட ஒரே தலைவலி, சார்! அதனால்...'' என்று சமாளித்தவன். அதற்கு மேல் பொய்யைத் தொடர மனமற்று, ''நீங்கள் வேறு யாரையேனும் கேளுங்கள். உதவ முடியவில்லை. சாரி. வரட்டுமா?'' என்று அங்கிருந்து அவசரமாக அகன்று சென்று விட்டான்.

சே! இந்த ஒரு சின்ன விஷயத்துக்குப் போய், பொய் சொல்லும்படி ஆயிற்றே என்று கூசியபடி சென்றவனின்

நாசியில் வழக்கமான வாசனை வீசவும், ஆவலோடு திரும்பிப் பார்த்தான்.

அவனது ஆவல் கொண்ட கண்களைச் சிறிதும் ஏமாற்றாமல், எழிலே உருவாக, அங்கே நின்று சிரித்தவள் நீதாதான்!

அவளோடு ஊரெங்கும் சுற்றிவிட்டுத் திரும்புகையில், உணவுக்குத் தவிரக் கைப்பணம் அப்படியே இருந்தது. அவனுக்குச் சற்று வருத்தம்தான். அவளுக்கு ஒன்றும் வாங்கிக் கொடுக்க முடியவில்லையே!

ஏனோ, பிடிவாதமாக எதைப் பெற்றுக் கொள்ளவும், அன்று அவள் மறுத்துவிட்டாள்.

''இந்த மாதிரிச் சில்லறை வருமானத்துக்காக உங்களோடு சுற்ற வரும் மட்டமான பெண் என்றா என்னை எண்ணினீர்கள்?'' என்று தன் பெரிய விழிகளை விரித்து அவள் கேட்டபோது, அவனுக்கு நெஞ்சை என்னமோ பண்ணிவிட்டது.

அவளது கையைப் பற்றி அழுத்தி, ''அப்படி இல்லை, நீதா. நீ விரும்புவதைத் தர வேண்டும் என்று ஆசை. அவ்வளவுதான்!'' என்றான் அவன்.

''தருவீர்கள் என்று எனக்கும் நிச்சயம்தான்,'' என்றாள் அவள் புன்னகையோடு.

அன்று பிரிகையில், ''இது அச்சாரம்!'' என்று, சற்று எம்பி, அவனது கன்னத்தில் முத்தமிட்டு விட்டுப் போனாள் நீதா.

அச்சாரம் என்றால்..?

அதையே நினைத்தபடி, உல்லாசமாக ஒரு திரைப் படப் பாடலை விசிலடித்தவாறு அறைக்குள் அவன் ஒரு

பரபரப்புடன் வளைய வந்தபோது, கதவைத் தட்டி அனுமதி கேட்டுக் கொண்டு உள்ளே வந்தவர், அதே பழைய கரடி மீசைப் பெரியவர்தான்.

இவரிடமிருந்து எனக்கு விடுதலையே இல்லையா என்று சிணுங்கியது அவனது உள்ளம். சந்தோஷத்தை நிம்மதியாக அசை போடக்கூட விடமாட்டேன் என் கிறாரே என்று எரிச்சல் வேறு.

ஆனால், நாகரீகம் என்று ஒன்று இருக்கிறதே!

அதனால், ''உட்காருங்கள்,'' என்று உபசரித்து, ''உங் களுக்கு நான் என்ன செய்யக் கூடும்?'' என்று பொறுமையை இழுத்துப் பிடித்து வைத்துக் கொண்டு விசாரித்தான் அவன்.

ஆனால், துணிந்து வந்து விட்டாலும், பெரியவர் இப்போது பேசத் தயங்கினார்.

''என்ன சார்? என்ன பிரச்சினை? விவரம் தெரிவித் தீர்களானால், என்னால் ஆன உதவியைச் செய்கிறேன்,'' என்று சற்று இதமான குரலில் கூறினான் அவன்.

மெல்லத் தலையை அசைத்த அவர், அவனைச் சற்று நேரம் கூர்ந்து பார்த்தார்.

பிறகு, ''தம்பி, இதை நீங்கள் எப்படி எடுத்துக் கொள்வீர்களோ என்று கொஞ்சம் கலக்கமாகத்தான் இருக்கிறது! ஆனால்.. ஆனால், நன்கு வளர்ந்து பெரும் தொழில் அதிபராக உருவெடுக்கக் கூடிய ஒரு நல்ல கெட்டிக்காரப் பையன் ஒன்றையும் சாதிக்காமல் அழிந்து போவதை, நமக்கென்ன என்று சும்மா கையைக் கட்டிக்கொண்டு பார்த்திருக்க என்னால் முடியாது. நான் சொல்வதை ஏற்பதும், ஏற்காததும் உங்கள் விருப்பம்.

ஆனால், தயவு பண்ணி, நான் சொல்வதை முழுமை யாகக் கேட்டுவிடுங்கள்!'' என்றவர் ஒரு பெரிய மூச்சை எடுத்துக் கொண்டு தொடர்ந்து கூறலானார்.

''பாருங்கள், தம்பி. அந்தப் பெண் நீதா நல்லவள் அல்ல! நெருங்கிப் பழகுவதும், பிறகு அதைக் கொண்டு மிரட்டிப் பணம் பறிப்பதும், அவளது கூட்டத்தினரின் பழக்கம். இதற்கு நிரூபணம் எங்கே என்று என்னைக் கேளாதீர்கள். என்னிடம் இல்லை. ஆனால், நீங்கள் கெட்டிக்காரர். முயன்றால், நீங்களே கண்டு பிடிக்க முடியும். கண்டு பிடிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது... உங்களுக்கு மிகவும் சிறு வயது, தம்பி! மதி மயங்குவது இயல்புதான். ஆனால்... எச்சரிக்கை யோடு இருங்கள். இதற்கு மேல் நான் வேறு என்ன சொல்லட்டும்?'' என்று அவன் முகத்தைப் பார்த்தார்.

அவன் அசைவற்று அமர்ந்திருக்கவும், கவலையும் நிராசையும் கூடிய ஒரு சிறு கையசைவுடன் எழுந்து சென்றார், பெரியவர்.

அவர் சொன்னது போலவே, அவன் முட்டாள் அல்ல தான். பெற்றவராலேயே கெட்டிக்காரன் என்று போற்றப் பட்டவனும்கூட.

மெனக்கெட்டு வந்து சொன்ன மனிதருக்கு, இதனால் எந்த லாபமும் கிடையாது என்பதோ, அவனிடம் அவமானப்படும் வாய்ப்பும் உண்டு என்பதோ அவனை யோசிக்க வைத்தது.

ஒரு வாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செமினார் அது. அன்றோடு ஐந்து தினங்கள் முடிவடைந்திருந்தன. மொட்டையடிக்கப்பட வேண்டிய ஆளை இனம் கண்டு,

சுற்றி வளைத்துப் பிடிக்க ஐந்து நாட்கள். அடியோடு அமுக்க மற்ற இரண்டு நாட்களா?

அவளது அச்சாரமும் மற்றப் பேச்சுகளும், யோசித்துப் பார்த்தால், அவளது அலங்காரங்களும், உரசல்களும் கூட வேறுபாடாகத்தான் தோன்றின.

ஆனால், இதில் எதுவுமே தவறானதாக இல்லாமலும், அவனைப் போலவே, அவளுக்கும் அவன் மீது உண்மை யான ஆர்வமே உண்டாகியிருக்கலாம்.

ஆயினும் அதை நிச்சயமாகத் தெரிந்து கொள்வது அவசியம் அல்லவா?

நீதா நல்லவள் என்றால், பிடிவாதமாகத் தந்தையைத் தன் வழிக்குக் கொணர்ந்து, அவரது சம்மதத்தைப் பெற்று, அவளை மணந்து கொள்ள அவன் தயாராகத் தான் இருந்தான்.

ஆனால், பெரியவர் கூறியது போல, அவள் மோச மானவளாக இருந்து, அவளிடம் அவன் மாட்டிக் கொள்ள நேர்ந்தால், அப்புறமாகப் பெற்றவரை நிமிர்ந்து பார்த்துப் பேசக்கூட அவனால் இயலாது. அப்புறம் தொழிலாவது, இன்னொன்றாவது!

எனவே, இதை ஆராய்ந்து பார்ப்பது அவசியம்.

நீதாவும் அவளது கும்பலும் என்று பெரியவர் குறிப்பிட்டார்.

எனவே, அவன் அறியாத இன்னும் சிலரும், அவனைக் கண்காணித்துக் கொண்டிருக்கலாம். முதல் நாள் அவனது காலை இடறி விட்டவனின் முகம் நினைவு வந்தது. அவனும், அந்தக் கும்பலில் ஒருவனோ?

இரவின் பெரும் பகுதியை யோசனையில் கழித்தவன், மறுநாள் நீதாவை வழக்கமான உற்சாகத்துடனேயே எதிர்கொண்டான்.

கூடவே வேறு யாரையோ ஆவலாக எதிர்பார்ப்பது போலவும் காட்டிக் கொண்டான்.

அவனது கவனம் சிதறுவது கண்டு, அவளாகவே விசாரிக்கவும், விவரம் சொன்னான். "என் நண்பர் ஒருவர், காவல் துறையில் பெரிய அதிகாரி. இந்த மாதிரி செமினார்கள் நடக்கும்போது, குடும்பத்தை விட்டுத் தனித்து வரும் ஆண்களில் கொழுத்த மீன் பார்த்துப் பிடித்துப் பணம் கறக்கிற கூட்டம் இங்கே செயல்படுவ தாகத் தகவல் கிடைத்தது. அதை விசாரிக்கவென்று சாதாரண உடையில் வருகிறார். காக்கி உடை அணிந்து வந்தால், இந்தக் கும்பல் உஷாராகி ஓடி விடுவார்கள் அல்லவா? அவரைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறேன். வந்ததும், உன்னை அவருக்கு அறிமுகப் படுத்தி வைக்க எனக்கு ஆசை!" என்றான் அவன்.

சொல்லும்போதே, அவளது மாற்றங்களைப் பதிவு செய்தது அவனது மூளை.

ஒப்பனைப் பூச்சை மீறி வெளுத்த முகம், உள்ளங் கையில் நகங்கள் குத்தும் அளவுக்கு இறுக மூடிய விரல்கள், உதடுகளில் உறைந்த புன்னகை, கண்களில் எட்டிப் பார்த்த பயம்...

சில வினாடி மவுனத்தின் பின், "ஓ! உங்கள் நண்பருக்கு என்னை அறிமுகப்படுத்தப் போகிறீர்களா? எவ்வளவு சந்தோஷமான விஷயம்! இதை முன்பே சொல்லியிருக்கக் கூடாதா? சேலை, சுரிதார் என்று வேறு

மாதிரி உடையில் வந்திருப்பேனே! இப்போது, முகத்தை யாவது சீர் செய்து கொண்டு வருகிறேன். என்ன? இதோ, இரண்டே நிமிஷங்களில் வந்து விடுகிறேன்!'' என்று எழுந்து ஓடினாள், நீதா.

டாய்லெட் பக்கம் ஓடியவள், சுற்றிக் கொண்டு வாயி லுக்கு விரைந்ததை, இதை எதிர்பார்த்து வாயிற் புறமாகச் சென்று மறைந்து நின்று கவனித்த அவனால் காண முடிந்தது.

செல்லில் பேசியவாறே அவள் விரைய, வாயில் அருகே வந்து அவளோடு சேர்ந்து கொண்டவனைப் பார்த்ததும், அவனுக்குக் கொஞ்ச நஞ்சம் இருந்த ஐயமும் தீர்ந்து போயிற்று. முதல் நாள் அவளது காலைத் தட்டி விட்ட அல்லது தட்டி விட்டதுபோலப் பாவனை செய்தவன்!

இருவருமாகப் பரக்கப் பரக்க ஓட்டமும் நடையுமாகச் சென்று, வெளியே நின்று கொண்டிருந்த ஆட்டோவில் அவசரமாக ஏறிச் சென்றதைப் பார்க்கச் சிரிப்புதான் வந்தது.

அறைக்குத் திரும்பிச் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டு, விழுந்து விழுந்து சிரித்தபோதுதான், நீதா பொய்த்துப் போனது குறித்துத் தனக்கு வருத்தம் ஏதும் இல்லை என்பதை வியப்புடன் அவன் உணர்ந்தான்.

பெரியவர் சொன்னது போலச் சிறு வயதின் மதி மயக்கம்.

அந்த வயதில் அசிங்கப்பட்டு விடாமல், என்ன மாதிரி, அவனைக் காப்பாற்றி இருக்கிறார்!

இதற்குக் கைம்மாறாக, அவன் என்ன செய்யப் போகிறான்?

செய்ந்நன்றி செலுத்தும் ஆவல், அவனது நெஞ்சு முட்ட இருந்தபோதும், அதற்கான முதல் வாய்ப்பு, ஏழு ஆண்டுகள் கழித்துத்தான் அவனுக்குக் கிடைத்தது.



4

அன்று நடந்தது அனைத்தையும், பெரியவரைத் தேடிக் கண்டு பிடித்து, அவரிடம் தெரிவித்தவனை மகிழ்ச்சியுடன் பார்த்துச் சிரித்தார் அவர்.

''எனக்குத் தெரியும் தம்பி, உங்களுக்குக் கற்பூர புத்தி. ஒரு வார்த்தையில் புரிந்து கொள்வீர்கள் என்று நம்பித்தான் உங்களுக்கு எச்சரிக்கை செய்யத் துணிந்து வந்தேன். நல்லவேளை, தப்பினீர்கள். ஆண்டவனுக்கு நன்றி!'' என்றார் அவர்.

''சரியான சமயத்தில், ஆண்டவனாக வந்து என்னைக் காப்பாற்றியவர் நீங்கள்தான். இந்த நன்றியை எப்படிச் செலுத்துவது என்று தெரியாமல், நான் தவித்துக் கொண்டிருக்கிறேன். சொல்லுங்கள், உங்களுக்கு நான் என்ன செய்யக் கூடும்?'' என்று உண்மையான ஆர்வத்தோடு கேட்டான் அவன்.

அவனது துடிப்பைப் பார்த்து, மென்மையாக முறுவலித்தார் அவர்.

''எனக்கு என்ன தம்பி, வேண்டும்? கெட்டிக்காரப் பையன், நீங்கள். தொழிலைப் பிரமாதமாக நடத்திப் பேரும் புகழும், பெரும் செல்வமும் பெற வேண்டும். அதுதான், நீங்கள் எனக்குச் செய்யும் கைம்மாறு!'' என்றார் பெருந்தன்மையாக.

அவனுடைய தந்தை அளவுக்கு இல்லாவிட்டாலும், பெரியவரும் ஒரு தொழிலை இலாபகரமாக நடத்தி

வருகிறவர். இதை அறிந்திருந்ததால், பெரியவரின் பதில் அவனுக்குச் சற்றும் வியப்பளிக்கவில்லை.

ஆனால், அவருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆவல் மட்டும் அவனுள் எப்போதும் நிலைத் திருந்தது.

அப்போதைக்குப் பெரியவரின் பெயர், முகவரியைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

அதன் பிறகு, ஆண்டுதோறும், வருடப் பிறப்பு, வியாபாரிகள் தினம், ஆயுத பூஜை போன்ற நாட்களில், அவனது வாழ்த்து, அவருக்குத் தவறாமல் கிடைக்கும்.

கூடவே, "உங்களுக்கு நான் செய்யக் கூடியது ஏதேனும் இருந்தால், தயங்காது தெரிவியுங்கள். செய்யக் காத்துக் கொண்டு இருக்கிறேன்!" என்று கடிதத் துணுக்கும் இருக்கும்!

உதவி என்று அவர் கேட்காமலே, முழுவதாக ஏழு ஆண்டுகள் கழிந்து போயின.

ஏழு ஆண்டுகளுக்குப் பிறகும், அவராக எதுவும் கேட்கவில்லை.

ஆனால், அவருக்கு உதவும் வாய்ப்பு தனக்குக் கிடைத்திருப்பதாக உணர்ந்து, தன் வேலைகளை ஒதுக்கிக் கொண்டு, அவரிடம் விரைந்து சென்றான் அவன்.

திடீர்ச் சமையல் தயாரிப்புகளில், பெரியவர் தர்ம ராஜனின் 'தர்மா' முத்திரைக்குத் தனி மதிப்பு இருந்தது.

அதே மாதிரிப் பொருட்கள் எத்தனையோ தயாரிக்கப் பட்ட போதும், அதுவரை 'தர்மா'வை யாராலும் மிஞ்ச முடியவில்லை.

அந்தச் சமயத்தில், குறைவான விலையில், குழந்தைகளுக்கான பால் பவுடர் தயாரிப்பைத் தர்மராஜன் தொடங்கினார்.

அதுவும் பெரிய அளவில்.

தர்மாவின் போட்டித் தயாரிப்பாளர்களுக்கு, இப்போது தர்மராஜனை வீழ்த்த வாய்ப்புக் கிடைத்தது.

தொடக்கத்தில் இருந்தே ஒவ்வொரு கட்டத்திலும் அவருக்கு இடைஞ்சல் செய்து, அவரது தயாரிப்புச் செலவை அதிகரிக்கச் செய்தார்கள். எப்படியும் பால் பவுடரின் விற்பனை தொடங்கி விட்டால் சமாளித்து விடலாம் என்று எண்ணியிருந்தவருக்குப் பெரிய இடியாக, அவரது பால் பவுடரின் தரம் மோசம் என்று எதிராளிகள் ஒரு பெரிய வதந்தியைக் கிளப்பி விட்டு விட்டனர்.

கறுப்பாக வாந்தி எடுத்தது, காக்காய் காக்காயாக வாந்தி எடுத்ததாக ஆனது போல, பவுடர் தரம் தாழ்ந்தது என்று தொடங்கி, அதைச் சாப்பிட்டுப் பேதியில் நாலு பிள்ளைகள் செத்ததாகப் பரப்பப்பட்டது!

தர்மராஜனின் மறுப்பு அறிக்கைகளுக்கு எந்தவிதப் பலனும் இல்லாததோடு, தர்மா பால் பவுடரைத் தொடர்ந்து, அவரது தர்மா சமையல் தயாரிப்புகளின் விற்பனையும் படுத்து விட்டது.

அவருக்கு உதவிக்கரம் நீட்ட, தயானந்தன் அங்கே வந்தபோது, தர்மராஜனின் கடன் ஒரு கோடியைத் தாண்டியிருந்தது.

கடன் கொடுத்த பாங்க், அவரது தொழிற்சாலையை சீல் வைக்கப் போவதாக மிரட்டிக் கொண்டிருந்தது. அந்த

மாத வட்டியைக் கட்டக்கூட வழியின்றி, வருமானம் இன்றித் திகைத்த நிலை.

அப்போதும், அவனைக் கண்டதும், அவரது முகம் மலர்ந்து விகசிக்க, ''நன்றாக இருக்கிறீர்களா, தம்பி?'' என்று அவனைத்தான் குசலம் விசாரித்தார் அவர்.

''உங்கள் உதவியால், எல்லா விதத்திலும் நல்ல சுகம், சார்!'' என்று மிக்க மரியாதையுடன் பதிலிறுத்தான் தயானந்தன்.

கூடவே, அவராக உதவி கேட்கப் போவதில்லை என்பதும் புரிந்துவிட, அவனாகவே அந்தப் பேச்செடுத் தான்.

அப்போதும், 'பெரிய தொகை, தம்பி! எப்போதோ வெறும் வாய் வார்த்தையாகச் செய்த சிறு உதவியைக் காரணம் காட்டி, இதை உங்களிடம் நான் எப்படிக் கேட்பேன்?' என்று அவருக்குத் தயக்கம்தான்.

''அப்படி இல்லை, சார், இது வெறும் பணம் மட்டும் தான். நீங்கள் எனக்குக் காப்பாற்றித் தந்தது, என் எதிர்காலம் முழுவதையும். இன்று நான், இவ்வளவு வளர்ந்து, தலை நிமிர்ந்து வாழ்கிறேன் என்றால், அது உங்களால்தானே! இந்த நிலையில் நான் இருந்து கொண்டு, உங்களுக்கு உதவவில்லை என்றால், அப்புறம் என் வளர்ச்சிக்கே அர்த்தம் இல்லை, ஓரளவு விவரம் கேட்டுக் கொண்டுதான் வந்தேன், சார். முதலில், இந்த பாங்க் கடனை, நான் என் நிறுவனத்திற்கு மாற்றிக் கொள்ளுகிறேன். அதைச் சுலபத் தவணைகளில் கொடுப்பதற்கும், கூடுமானவரை கடனைக் குறைப்பதற் கும், மேற்கொண்டு ஏற்பாடு பண்ணுகிறேன். நீங்கள் கவலையற்று இருங்கள்!'' என்றான் இளையவன்.

சிறு மௌனத்தின் பின், ''கவலையற்று இருக்க வேண்டுமானால், இன்னொரு காரியம் பண்ண வேண்டும்!'' என்றார் தர்மராஜன்.

''என்ன பண்ண வேண்டும், சார்? சொல்லுங்க...'' என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, அவசரமான காலடிகளுடன் கதவைத் திறந்துகொண்டு, ஓர் இளம் பெண் உள்ளே வந்தாள்.

''தாத்தா, இந்தச் சுந்தரி மேடம் சுத்த மோசம். உங்களைப் பார்ப்பதற்கு, நான் மற்றவர்களைப் போல முன் அனுமதி பெற வேண்டுமாம். அவர்களை ஒரு மிரட்டு மிரட்டி வையுங்கள். தாத்தா, நான் சுரேஷ் அம்மாவை வெளியே கூட்டிப் போக வேண்டியிருக்கிறது. அதனால், உங்கள் எஸ்டீமை எடுத்துக் கொண்டு போகிறேன். அதைச் சொல்லத்தான் வந்தேன். வந்து, உங்கள் பேச்சில் குறுக்கிட்டதற்கு சாரி!'' என்றவள், தயானந்தன் புறம் திரும்பி, ஓர் அரை முறுவலோடு, அவனிடமும், ''சாரி சார்!'' என்று அவனது முகத்தைச் சரிவரப் பாராமலே மன்னிப்பை வேண்டி விட்டு, அடுத்த வினாடியில் காணாமலும் போனாள்.

பெண் சென்று மறைவதைப் பார்த்திருந்த பெரியவரின் முகம் பெருமிதமாய் மலர்ந்தது. ''என் பேத்தி. இந்துமதி. பெயருக்கேற்றபடி எப்போதும் குளிர்ச்சியாகத்தான் இருப்பாள். இன்றுதான் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது!'' என்று தயானந்தனிடம் சொல்லிச் சிரித்தார் தர்மராஜன்.

பெரியவருக்குப் பேத்தியிடம் அபாரப் பிரியம் என்பது தெளிவாகத் தெரிந்தது.

'இந்துவும் மதியுமாகச் சேர்ந்த அந்த முகத்தில், எள்ளும் கொள்ளும் வெடிக்க வாய்ப்பே இல்லையே, சார்!'' என்றான் அவருக்கு இதமாக.

அவன் மனதிற்குமே அப்படித்தான் தோன்றியது. அவள் கோபமாகப் படபடத்த போதும்கூட, குரலும் முகமும் இனிமையாகத்தான் இருந்தன.

தர்மராஜனுக்கு முகம் பூரித்துப் போயிற்று.

'உண்மைதான், தயானந்தன். நாட்டியப் பயிற்சியின் போது கோபமாக அபிநயம் பிடி என்றால், அந்த பாவனை வரவில்லையே என்பாள். நடன ஆசிரியை யோடு, எப்போதும் இது ஒரு போராட்டம்தான். இப்போதுகூட சுரேஷுடைய அம்மாவுக்குத் தாமதம் ஆகிவிடக் கூடாதே என்றுதான் கோபமாக இருக்கும். வருங்கால மாமியார் அல்லவா?'' என்று மீண்டும் சிரித்தார் அவர்.

''ஓ! திருமணம் நிச்சயம் ஆகிவிட்டதா?'' என்று இயல்பாகக் கேட்டவன், அதற்கு மேல், அவளைப் பற்றிய பேச்சை விடுத்து, வந்த விஷயம் பேசினான்.

பெரியவருக்கு மறுக்க வழியில்லை. ஆனால், என்றோ ஒரு நாள், சும்மா வாய் வார்த்தையாக மட்டுமே செய்த சிறு உதவிக்கு, இவ்வளவு பெரிய பலனைப் பெற்றுக் கொள்வது, அவருக்கு உள்ளூரக் கூச்சமாக இருந்தது.

ஆனால் என்ன செய்வது? மறுக்கும் நிலையில் அவர் இல்லையே. ஆனால், இது பிச்சையாக இல்லாத அள வுக்குப் பக்காவாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மனதினுள் உறுதி செய்து கொண்டார் தர்மராஜன்.

எனவே, சின்னவன் சொல்லுக்குத் தலையாட்டிவிட்டு, அவனது தொழில் பற்றி விசாரித்தார்.

''இந்தியா முழுக்கக் கிளைகள் இருக்கின்றன, சார். தென் கிழக்கு நாடுகளிலும் சிறப்பாகச் செய்வதாகப் பெயர் கிடைத்திருக்கிறது. இந்த ஏழு ஆண்டுகளில், தொழில் மும்மடங்காகப் பெருகியிருக்கிறது. பெருக்கம் பண வீக்கத்தால் வந்தது அல்ல!''

கண்ணில் சிறு கேலியுடன் தலையசைத்தார் அவர்.

''என்ன சார்?''

''இப்போது, எனக்குச் செய்கிறீர்களே, அது எப்படித் தொழிலைச் சிறப்பாகச் செய்வதாகும்? பெரும் இழப்பாகி விடக்கூடும் அல்லவா? அதிலும் கடனைக் குறைப்பது, நிச்சயம் நஷ்டம்தானே?''

பெரியவரின் மனம் புரிந்து, ''அது நஷ்டக் கணக்கில் சேராது, சார்! எங்கள் நிதி நிறுவனத்தின் பல்வேறு கிளைகளிலுமாக, ஆண்டு தோறும், ஏதோ ஓரளவு கடன் தொகை வசூல் ஆகாமல் நிற்பதுதான். அதில் பெரு மளவை வருமான வரியில் கழித்துக் கொள்ளலாம். இதையும் அந்தக் கணக்கில் எழுதினால், சரியாகிப் போகுமே! அத்தோடு, அன்று எனக்கு எவ்வளவு பெரிய புத்திக் கொள்முதல் ஆயிற்று! பணம் கொடுத்துக் கொள் முதல் செய்ததாக எண்ணிக் கொள்கிறேன். அவ்வளவு தானே?'' என்று தயானந்தன் இலகுவாகக் கூறவும், தர்மராஜன் தன்னை மீறிச் சிரித்தார்.

''பரவாயில்லை, தம்பி. தொழிலில் நான் முன்னே பின்னே இருந்தாலும், உங்களைக் கெட்டிக்காரன் என்று கணித்ததில் தவறு செய்யவில்லை. மறுக்க முடியாமல் பேசுகிறீர்கள்!'' என்று மனமாரப் பாராட்டினார்.

எல்லாவற்றையும் முறைப்படி செய்வதற்கு ஏற்பாடு செய்துவிட்டுத் தயானந்தன், தன் வேலையைப் பார்க்கக் கிளம்பினான்.

ஒரே ஒரு சின்ன வருத்தம் மட்டும் அவனுக்கு இருந்தது.

பெயருக்கு ஒரு சிறு வீட்டையோ, நிலத்தையோ அடமானப் பொருளாக வைத்தால் போதும் என்று அவன் எவ்வளவோ சொன்ன போதும், அவரது தொழிலோடு, முழுச் சொத்தையும், தர்மராஜன் ஈடு காட்டி எழுதிவிட்டார்.

''எனக்கு என் எதிர்காலத்தையே காப்பாற்றித் தந்திருக்கிறீர்கள். அதற்கு ஈடு காட்டுவது என்றால், நான் செய்வது, பொன் வைக்கும் இடத்தில் பூதான். நீங்கள் இப்படி அனைத்தையும் காட்ட வேண்டுமா?'' என்று வருத்தத்துடன் கேட்டான்.

ஆனால், ''சும்மா எழுத்துத்தானே, தம்பி! அப்படி என்ன, நீங்கள் என் சொத்துக்களைப் பிடுங்கி விடுவீர்களா, என்ன? யாரும் கேள்வி கேட்க முடியாமல் கணக்கிலேனும் சரியாகவே இருக்கட்டுமே!'' என்று அவர் சொன்னபோது, தயானந்தனால் மறுக்கவும் முடியவில்லை!

கூடவே, அவரது மனதையும் அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

சரியான ஈடு காட்டும்போது, அவரால் நிமிர்ந்து நிற்க முடியும். ஒன்றுமில்லாத தாழ்ந்த நிலையில் நின்று, தர்மம் வாங்குவது போல இராது.

தேவையானவற்றைச் செய்து கொடுத்துவிட்டு, அவசியம் ஏற்பட்டால், மேற்கொண்டு பணம் கொடுக்கவும் ஏற்பாடு செய்துவிட்டு, மேற்கொண்டு எது வேண்டும் என்றாலும் தயங்காமல் கேட்க வேண்டும் என்ற வாக்குறுதியையும் பெற்றுக் கொண்டு, தயானந்தன் கிளம்பிச் சென்றான்.

ஆனால், தர்மராஜன் கருதியது போல, அந்த வதந்தி ஒரு சில மாதங்களில் அடங்குவதாக இல்லை.

மேலும் மேலும் விறகைப் போட்டு, எண்ணெயையும் ஊற்றிக் கொண்டே இருந்தால், தீ எப்படி அணையும்?

தர்மராஜனின் பிரச்சினையிலும், அதுவேதான் நடந்தது. அவருடைய தொழில் எதிரிகள், அந்த வதந்'தீ'யை அணைய விடுவதாகவே இல்லை.

எனவே, அவராலும் தயானந்தனின் கடன் தொகையைத் திருப்பித் தர முடியாமலே போயிற்று.

இந்நிலையில், அவருடைய குடும்பத்துக்கு இன்னொரு வருத்தமும் உண்டாயிற்று.



5

ஏற்கெனவே, சொந்த வாழ்வில் பெரிதும் நொந்திருந்தவர்தான் தர்மராஜன்.

ஆசை ஆசையாகப் பெற்றெடுத்த ஒரே மகள் பத்மாவைப் பிரிய மனமற்று, வீட்டோடு மாப்பிள்ளையாக விசுவத்தைத் தேடிப் பிடித்துத் திருமணம் செய்து வைத்தார். வீட்டோடு மாப்பிள்ளை என்று அவர் உணராத வண்ணம், பார்த்துப் பார்த்துச் செய்தார்.

விசுவமும் நல்லவனே.

கணவன் மனைவி இருவரும் சந்தோஷமாகத்தான் இருந்தார்கள். இந்துமதி பிறந்த பின், அந்த மகிழ்ச்சி இன்னமும் பெருகியது.

விசுவத்துக்கு அந்த வீட்டின் மீது ஒரு தனிப் பிரியம்.

புது மாதிரியான பூக்கிண்ணம், சிலை, படம் என்று எதையாவது வாங்கி வந்து பொருத்தமான இடத்தில் வைத்து அழகு பார்ப்பான். அதே போலத் தோட்டக் காரனிடமும் எதையாவது கொடுத்து மாற்றி மாற்றி வைக்கச் சொல்லுவான்.

அழகூட்டும் வண்ணம் ஒளி விளக்குகளை மாட்டுவான்.

அவனது இந்த வேலைதான், ஒரு நாள் அவனது உயிரையே குடித்துவிட்டது.

அவனே கைப்படச் செய்த வேலையில், ஏதோ சிறு கவனப் பிசகினால் மின்சாரம் கசிந்து பெரிதாக ஷாக் அடித்துவிட்டது. மருமகன் அலறி விழுவதைப் பார்த்து, அவனைத் தாங்க வந்த மாமியாரும் சேர்ந்து ஒரே நேரத்தில் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

கண் முன்னே நேர்ந்த இந்தக் கொடூரத்தைப் பார்த்து மயங்கி விழுந்த பத்மாவுக்குப் பிறகு பழைய தெளிவு வரவே இல்லை. பைத்தியம் என்று ஆகவில்லை என் றாலும், அந்த வீட்டுக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வருவாள்.

சிறு தூசைக் கண்டாலும், 'அவருக்குப் பிடிக்காது!' என்று துடைத்துத் துடைத்து வைப்பாள். அது தவிர, வாழ்வில் வேறு எதிலும் அவளுக்குப் பிடிப்பற்றுப் போயிற்று. சுற்று மதில் சுவரைத் தாண்டி, வெளியே காலடி எடுத்து வைக்க மாட்டாள்.

மகளைப் போற்றவில்லை என்று சொல்ல முடியாது. பிரியமாகத்தான் இருந்தாள். ஆனால், தன்னையே பேணாதவளுக்கு, மகள் நினைவு எப்படி வரும்? பார்த்துப் பார்த்து ஊட்டியது, ரசித்தது எல்லாம் நின்று போயிற்று. அவ்வப்போது, வெளியை வெறித்தபடி உட்கார்ந்து விடுவாள்.

தர்மராஜன் எதற்கென்று அழுவார்? அவருக்கே பைத்தியம் பிடிக்காத குறைதான்.

அப்போதுதான், கதவுகளை எல்லாம் இறுக மூடிய கடவுள், ஒரு சிறு ஜன்னலைத் திறந்துவிட்டார்.

விசுவத்துடைய ஒன்றுவிட்ட தமக்கை ஒருத்தி, திருமணத்தை வெறுத்துத் தர்ம நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். துக்கத்துக்கு வந்தவள், வீட்டு நிலைமையைப் பார்த்து, இங்கேயே தங்கி வீட்டுப் பொறுப்பை ஏற்றுச் செய்தாள்.

சேவையைத் தர்ம நிறுவனத்தில் மட்டும்தான் செய்ய வேண்டுமா?

தேவகியின் உதவியால், மகள், பேத்தி பற்றிய கவலையின்றித் தர்மராஜன் மீண்டும் தொழிலைக் கவனிக்க முடிந்தது.

அவ்வப்போது அபாய அறிவிப்பாய் வந்த லேசான நெஞ்சு வலி, பேத்திக்கு ஒரு பாதுகாப்பைத் தேட வைத்தது.

கொஞ்சம் தாழ்ந்த நிலையே என்றாலும், சிறு வயதில் இருந்து சேர்ந்து வளர்ந்த பையன், அவனோடு, அவனுடைய குடும்பத்தில் வாழ்க்கை நடத்துவதற்கு, பேத்திக்கு இலகுவாக இருக்கும் என்று எண்ணியே,

இந்துமதியின் திருமணத்தைச் சுரேசனோடு நிச்சயித்தார், தர்மராஜன்.

சுரேசனுடைய குடும்பமும் மகிழ்ச்சியோடு இந்த ஏற்பாட்டுக்கு ஒப்பியது. அதிலும், சுரேஷுடைய தாயார், எப்போதுமே இந்துமதியை, ''என் பிரிய மருமகளே!'' என்றுதான் அழைப்பாள். அவ்வப்போது, இந்துமதியை வெளியே அழைத்துப் போவாள். ஏதாவது பலகாரம் செய்தால், இந்துவுக்கென்று கொஞ்சம் கொண்டு வந்து கொடுப்பாள்.

எல்லாம் நன்றாகத்தான் இருந்தது.

ஆனால், ஒரு நாள் திடுமென வந்து, ''பணத்துக்காகச் சின்னப் பிள்ளைகளைக் கொல்லுகிற குடும்பத்தில் பெண் எடுக்க முடியாது!'' என்று சுரேசனுடை பெற்றோர் கூறவும் தர்மராஜன் அதிர்ந்து போனார்.

பால் பவுடரைப் பற்றிய கதையைக் கேட்டுப் பேசுகிறார்கள் என்று எண்ணி, அதெல்லாம் வெறும் வதந்தி என்று அவர்களுக்கு எடுத்துச் சொன்னார்.

ஆனால், ''அது வதந்தியாக இருக்கலாம். ஆனால், நீங்கள், உங்கள் சொத்து பத்துகளை எல்லாம் ஈடு வைத்துக் கடன் வாங்கி இருப்பதும், தொழிலிலும் மேலும் மேலும் நட்டப்பட்டுக் கொண்டிருப்பதும் பொய் அல்லவே! அப்போது, உங்கள் பேத்தியை என் மகனுக்குக் கட்டினால், அவனுக்கு என்ன கிடைக்கும்? பட்டை நாமமா? கோவிந்தா, கோ... விந்தாவா? வேண்டாம், சாமி, வேண்டாம்! உங்களுக்கு ஒரு கும்பிடு, உங்கள் பேத்திக்கு ஒரு கும்பிடு. வருகிறோம்!'' என்று இரு கைகளையும் பட்டென்று தட்டி விடை பெற்றனர், அவர்கள்.

''இல்லை! அப்படிச் சொல்லாதீர்கள்! ஒரு பெண் ணின் வாழ்வு!'' என்று கெஞ்சுதலாக ஏதோ சொல்ல முயன்றவரின் கையை, இந்துமதியின் கை இறுகப் பற்றியது.

''சொத்துக்குக் கொசுறாகப் பெண்ணை மணக்கிறவர் களின் வீட்டில் வாழ எனக்குப் பிரியமில்லை, தாத்தா!'' என்றாள் அவள்.

அந்த நேரத்து வேகத்தில் சொல்லிவிட்டாலும், உள்ளூர அவளுக்கு வலியே.

அவளுக்காகக் குடும்பத்தோடு இங்கேயே வந்து விடப் போவதாகத் தாயும் மகனுமாகச் சொன்னதெல் லாம், தாத்தாவின் இந்த வீடு, மற்ற சொத்துக்காகத் தானா?

'உன் அம்மா இந்த வீட்டை விட்டு, உன்னோடு வந்து இருக்க மாட்டார்கள். புருஷனை இழந்த பெண்ணிடம் இருந்து, மகளையும் பிரிக்கிற பாவத்தை நாங்கள் செய்ய மாட்டோம். அதனால் எல்லோருமாக அங்கேயே இருந்து விடலாம்!' என்றதைப் பெரிய தியாகமாக எண்ணினாளே. கடைசியாக, அது இந்த வீட்டைக் கபளீகரம் செய்யும் திட்டமாக அல்லவா இருந்திருக்கிறது!

வீடு மட்டுமல்ல, தாத்தாவின் எல்லாச் சொத்துக்களை யுமேதான் அவர்கள் குறி வைத்திருக்க வேண்டும்.

வீட்டையும், தோட்டத்தையும், தாத்தாவின் மற்ற சொத்துகளையும், அவைகளை எப்படியெப்படி மாற்றிப் பிரித்து விற்றால், எத்தனை கோடிகள் கிடைக்கக்கூடும் என்பது பற்றியெல்லாம் சுரேசன் கண்கள் பளபளக்கப் பேசியதை, அவளுடைய தாத்தாவுக்குரிய பாராட்டாக

எடுத்துக் கொண்டது, அவளுடைய முட்டாள்தனம் அல்லவா?

அவ்வப்போது, இந்த நினைவுகளினால் முகம் சோர்ந்து விடும் பேத்தியைப் பார்த்துப் பார்த்துத் தாத்தாவின் நெஞ்சு கனத்துப் போயிற்று.

இது அவரால் வந்த சோகம் அல்லவா?

சிட்டுக் குருவியாகச் சுற்றிக் கொண்டிருந்த பெண்! கல்லூரி, தோழிகள், வீடு, தோட்டம் என்று மகிழ்ச்சி யோடு திரிந்தவளை, கல்யாணம் அது இதென்று சொல்லி, இப்போது மனம் கலங்க வைத்துவிட்டாரே!

பேத்தியின் வாட்டம் ஒரு புறம் என்றால், தொழில் துறை சண்டிக் குதிரையாகப் படுத்துக் கொண்டது.

இவை அனைத்தையும் விட, உடல் நிலையின் பின்னடைவு அபாய முரசு கொட்டி அவரை அதிர வைத்தது. இன்னும் அதிக காலம் அவர் இருந்து பார்க்க முடியாது.

அன்றைய கனவில் வாழும் மகள்! இன்றைய நனவில் வாடும் பேத்தி!

செலவுக்கான பணத்தைக் கொடுத்தால், வீட்டுப் பொறுப்பைத் தேவகி கவனித்துக் கொள்வாள். சிக்கன மாகக் கூட இருப்பாள். ஆனால், இவர்களது வாழ்க் கைப் பொறுப்பு? அதற்கு அவர்தானே வழி செய்தாக வேண்டும்?

கடவுள் இருக்கிறார்தான்! ஆனால், எல்லாம் 'அவன்' பார்த்துக் கொள்வான் என்று சும்மா இருக்கத் தர்மராஜனுக்குத் தைரியம் இல்லை.

வெகுவாக யோசித்து விட்டுத் தயானந்தனோடு டெலிபோனில் பேச முயன்றார்.

ஆனால், அவனது தொழில் முறையே அப்படித்தானோ, என்னவோ? சூறாவளிப் பயணம் மேற்கொண்டு, உள்நாடு, வெளிநாடு என்று சுற்றிக் கொண்டிருந்த அவனை, அவரால் பிடிக்க முடியவே இல்லை.

கடைசியாக அவர் நம்பிக்கை இழந்து ஓய்ந்து, தயானந்தனுக்கு அவருடன் பேசப் பிரியம் இல்லையோ என்று, அது வேறு எண்ணிக் கூசிக் குறுகி, இன்னமும் உடம்பைக் கெடுத்துக் கொண்டிருக்கையில், அவனே அவருக்குப் போன் செய்தான்.

தூரக் கிழக்கு நாடுகளில், புதிதாக ஒரு திட்டத்தைச் செயல் படுத்திக் கொண்டிருந்தானாம். தீவிரமான வேலையாம். அது முடிந்ததும், தொழிலில் இறுக்கம் தளர்வதற்காகப் பத்து நாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு, மத்திய தரைக் கடல் பகுதியில் போட்டிங், ஆழ்கடல் மூழ்கல் என்று சுற்றப் போய்விட்டானாம். அதனால், அவர் அவனைத் தேடிய செய்தி, அவனுக்குக் கிடைக்கத் தாமதம் ஆகிவிட்டதாம்.

''ஆண்டுதோறும் இது வழக்கம்தான், சார். விடுமுறையில் இருக்கும்போது, என் தந்தை தவிர, யாரும் என்னை அணுக முடியாது! போன் நம்பர்கூட, யாரிடமும் கொடுப்பதில்லை. எனவே, அங்கிருந்து திரும்பிய பிறகுதான் நீங்கள் என்னைத் தேடியது தெரிந்தது!'' என்று தாமதத்தின் காரணத்தைத் தெரிவித்து விட்டு, ''சொல்லுங்கள், சார், உங்களுக்கு நான் என்ன செய்யக் கூடும்?'' என்று, தன் இயல்பான கம்பீரக்

குரலில், மரியாதை கலந்து தயானந்தன் கேட்டபோது, பதில் சொல்ல முடியாமல், தர்மராஜனுக்குத்தான் தொண்டை அடைத்துக் கொண்டது.

''சார்...'' என்று அவன் மீண்டும் கேட்கவும், தொண்டையைச் செருமிக்கொண்டு, அவர் கேட்டே விட்டார். ''என்ன செய்ய வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்று அடிக்கடி கேட்பீர்களே, தம்பி. என் பேத்தியை மணந்து கொள்கிறீர்களா?'' என்று முன்னுரை, முகவுரை ஏதும் இல்லாமல் பட்டென்று கேட்டு விட்டார்.

தயானந்தன் வெகுவாகத் திகைத்துப் போனான்.

ஒரு சிறு அமைதியின் பின், ''சா..ர், என்னைப் பற்றி மற்றவர்களை விட உங்களுக்கு நன்றாகத் தெரியும். மூளை கெட்டு, என்ன மாதிரி மடத்தனம் செய்ய இருந்தேன் என்று... அதன் பிறகும்...'' என்று இழுத்தான்.

''தப்பே செய்யாதவனை விடத் தப்பு செய்து திருந்தியவனை நம்பலாம். ஏனென்றால், சூடு பட்டது எளிதில் மறவாது. ஆனால்... உங்களுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்றால், நான் வற்புறுத்த மாட்டேன், தம்பி!'' என்றார் தர்மராஜன்.

''ஐயோ, அப்படியில்லை சார். என்னைப் பொறுத்த வரையில், நீங்கள் தருவது வரம். ஆனால், உங்கள் பேத்தியின் விருப்பம் எப்படி என்று... அது பற்றிக் கேட்டுக் கொண்டீர்களா, சார்?'' என்று கேட்டான் அவன்.

அவரும் புரிந்து கொண்டார்.

அன்று, வருங்கால மாமியார் என்று யாரையோ சொன்னாயே, அது பற்றிப் பேத்தியின் மனநிலை என்ன என்று கேட்கிறான்.

''அதுவும் என் ஏற்பாடுதான், தம்பி! புது இடத்தில் சமாளிக்க வேண்டிய சிரமம் இந்துவுக்கு இராது என்று எண்ணினேன். அத்தோடு என் மகளையும் பார்த்துக் கொள்வார்கள் என்று நினைத்தேன். ஆனால், அவர்கள் சரியில்லை என்று தெரிந்ததும், மேற்கொண்டு பேச வேண்டாம் என்று தடுத்ததே இந்துதான். மற்றப்படி... ஒரு வேளை, உங்களுக்கு மனம் ஒவ்வவில்லை என்றாலும், குடும்பத்தைக் கொஞ்சம் கவனித்துக் கொள்ள முடியுமானால்...''


தர்மராஜனுக்கு உதவி செய்வதற்காகச் சென்றிருந்த போது, அவரது குடும்ப நிலை பற்றியும் தயானந்தன் அறிந்திருந்தான். பேச்சு வாக்கில் அவரே சொன்னதும், மேற்கொண்டு அவனாகவே கேட்டறிந்ததும், அவர் பால் அவனது பரிவை அதிகப்படுத்தியிருந்தன.

எனவே, அவரது பேச்சில் சட்டெனக் குறுக்கிட்டு, ''எனக்கு நீங்கள் தருவது வரம் என்று முதலிலேயே சொன்னேன், சார். இந்துமதியைப் பற்றியோ, அவளுடைய தாயார் பற்றியோ, இனி நீங்கள் கவலைப்படக் கூடாது, சார்! முழுப் பொறுப்பும் என்னது என்று நிம்மதியாக இருங்கள்!'' என்று உறுதியளித்தான், தயானந்தன்.

ஆறுதலாகப் பெருமூச்சு விட்டார் தர்மராஜன்.

சில தினங்களிலேயே, அவர் மறைந்துவிட்ட செய்தி தயானந்தனை எட்டியது.

அங்கே ஆக வேண்டிய காரியங்களைக் கவனிக்க ஓர் ஆளை அனுப்பிவிட்டுத் தன் தந்தையைக் காணச் சென்றான் அவன்.



6

பணம் இல்லாமலோ, பொறுப்பேற்றுச் செய்ய ஆட்கள் துணை இல்லாமலோ, தர்ம ராஜனுடைய குடும்பத்தார் கஷ்டப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே, தன் நிறு வனத்து நிர்வாகி ஒருவரைத் தயானந்தன் அங்கே அனுப்பி வைத்தான்.

ஏற்கெனவே, அவனது நிதி நிறுவனத்திடம் சொத்துக் களைத் தர்மராஜன் ஈடுகாட்டியிருந்ததால், தயானந்த னுடைய நிர்வாகி பொறுப்பேற்றுச் செய்வதற்குத் தடை ஏதும் இல்லாமல் இருந்தது.

தயானந்தனின் உத்தரவுப்படி, குடும்பத்தில் அனா வசியத் தலையிடல்கள் இல்லாமல், தேவை கேட்டு, அவரும் வேண்டியதைச் செய்தார்.

ஆனால், அதுவே பக்க விளைவு ஒன்றையும் ஏற்படுத்தியது.

தர்மராஜனுக்கும் தயானந்தனுக்கும் இருந்த மன இணக்கம் வேறு யாருக்கும் தெரியாது.

வெறும் பத்திரங்களையும் சட்ட நுணுக்கங்களையும் மட்டும் அறிந்திருந்த 'தர்மா' நிறுவனத்து வக்கீலும், ஆடிட்டரும் தங்களுக்குத் தெரிந்ததை வீட்டில் வந்து சொல்லிப் பீதியைக் கிளப்பி விட்டு விட்டனர்.

அவர்களும், அன்றைய நிலைமையை வீட்டுப் பெண்கள் அறிந்து, வருங்காலத்துக்குத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளட்டும் என்ற நல்ல எண்ணத்தில் தான் சொன்னார்கள்.

ஆனால், சொத்தெல்லாம் தயானந்தனின் நிதி நிறுவனத்துக்குச் சொந்தமாகி விடும். எல்லாவற்றையும்

அவனிடம் ஒப்படைத்து விட்டு வெளியேற நேரும் என்றதோடு, அப்படி ஒப்படைக்கப்பட வேண்டிய சொத்துகளில், அவர்கள் வாழும் வீடும் அடக்கம் என்றதும், பத்மா பதறி நிலை குலைந்து போனாள்.

அவளுடைய கணவன் அருவமாக வாழும் இந்த வீட்டை விட்டு வெளியேறுவதா?

''இந்த வீட்டை விட்டு வெளியே நான் போக மாட்டேன். அப்படிப் போனால், நான் செத்துப் போவேன். செத்துத்தான் போவேன்!'' என்று மகளையும் நாத்தனாரையும் கட்டிக்கொண்டு, கதறி அழுதாள்.

அவளது ஓயாத கதறலில், மருத்துவர் வந்து, அவளை அமைதிப்படுத்த மருந்து கொடுக்க வேண்டியதாயிற்று.

அப்போதும், விக்கலும் புலம்பலும் நின்றதே தவிரக் கணவன் படத்தைப் பார்த்தபடி கிடந்து கண்ணீர் விடுவது நிற்கவில்லை.

மருந்தின் வேகத்தில் உறங்கியபோதும், தாயின் கண்ணீர்க் கறை படிந்த முகத்தையும், சிறு விசும்பல் களில் அவளது மெல்லிய மேனி குலுங்குவதையும் பார்த்துக்கொண்டு நின்ற இந்துமதிக்குத் திடீரெனத் தான் மிகவும் பெரியவள் ஆகி விட்டது போலத் தோன்றியது - தாயை விடவும் பெரியவளாக.

தந்தையை அவள் சரியாக அறிந்தது இல்லை. எனவே, அவரது இழப்பையும், இந்துமதி உணர்ந்தது இல்லை. தாயின் சற்றே விசித்திரமான போக்கும் அந்த வயதில் இருந்தே பழகி விட்டதால், அதுவும் அவளைப் பெரிதாகப் பாதித்தது இல்லை. அம்மா இப்படித்தான் என்று சாதாரணமாகவே எடுத்துக் கொண்டாள்.

அத்தோடு, தாய் தந்தை இருவரின் பாசத்தைக் காட்டிப் பேணி வளர்க்கத்தான் தாத்தா இருந்தாரே!

அவள் ஒன்று கேட்டுக் கிடைக்காமல் போனதில்லை. அவரது பாசத்தை அவள் மீறியதும் கிடையாது.

சுரேஷைத் திருமணம் செய்து கொள்ளச் சொன்ன போதும், அப்படித்தான் சரியென்றாள். அவனுடைய குடும்பமே உருகி வழிந்தபோது, நன்றாகத்தான் இருந்தது.

அது பொய்த்துப் போனபோதுதான், ஆத்திரமுற்று முதல் முறையாக அவளே முடிவெடுத்துத் தாத்தாவிடம் விட்டுவிடச் சொன்னாள்.

ஆனால், உள்ளூரக் கலவரமாகவும் இருந்தது. இவன் தான் மணமகன் என்று வெளியே செய்தி பரவி விட்டதால், மற்றவர் முகத்தைப் பார்க்கக் கூச்சமாக இருந்தது.

நொந்து போயிருந்த தாத்தாவின் முகம் மனதில் இருந்ததை அவரிடமும் கொட்ட முடியாமல் செய்து, மூச்சு முட்டிப் போயிற்று.

அப்போதுதான் முதல் முறையாகத் தாயிடம் எதை யும் மனம் விட்டுப் பேச முடியவில்லையே என்று இந்துமதி தவித்துப் போனது.

தேவகியும், ஒரு தாயைப் போல, உணவு உடை எல் லாம் பார்க்கிறவள்தான். அதில் குறை தோன்ற விட்ட வள் இல்லை. ஆனாலும் அவளுக்குப் பத்மாதான் அதிக முக்கியம்! ஒன்று விட்ட உறவு என்ற போதும், தம்பி யிடம் மிகுந்த பாசம் வைத்திருந்த அவள், தன் தம்பி யின் நினைவிலேயே வாழும் அவனுடைய மனைவி மீது அந்தப் பாசத்தை மாற்றிக் கொண்டாள் போலும்.

யாரிடமும் எதையும் பகிர்ந்து கொள்ள முடியாமல், தனக்குள்ளேயே குமைந்த பெண், தாத்தா தர்மராஜனின் மறைவால் பெரிதும் கலங்கிப் போனாள்.

பாசமிகுந்த தாத்தாவின் இழப்பே பெரும் துயரமாக இருக்கையில், அதற்காக ஒரு மூச்சு அழக்கூட வழியின்றி வக்கீலும், ஆடிட்டரும் கொண்டு வந்த சேதிகளும், தொடர்ந்த தாயின் பரிதவிப்பும், அவள் நெஞ்சில் மேலும் சுமையேற்றி அழுத்தின.

என்ன செய்வது என்று அறியாத திகைப்பும் மலைப்பும் ஒருபுறம் இருந்தாலும், இந்த நிலையில், அவள்தான் ஏதேனும் செய்தாக வேண்டும் என்பதும் இந்துமதிக்குப் புரிந்தது.

எனவே, தயானந்தனின் 'சகாயம்' நிதி நிறுவனத்தினுடைய பிரதிநிதியாக வந்து, தர்மராஜனின் அலுவலகப் பொறுப்பை ஏற்றுச் செயல்பட்டுக் கொண்டிருந்தவரைப் போய்ப் பார்த்துப் பேசினாள்.

ஆனால், அவரிடமிருந்து, இந்துமதியால் எதையும் அறிய முடியவில்லை!

அவர், மிகுந்த மரியாதையுடன்தான் பேசினார். பொறுப்பேற்றுச் செய்ய ஆள் இல்லாமல், நிர்வாகம் சீர்குலைந்து போகாமல் காப்பதற்காகவே, தான் இங்கே அனுப்பப்பட்டிருப்பதாகவும், மற்ற விவரங்கள் எம்.டி. தயானந்தன் வந்த பிறகுதான் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், மிக்க மரியாதையுடன் கூறி முடித்து விட்டார் அவர்.

''உங்களுக்கு வேறு என்ன பிரச்சினை என்றாலும் தெரிவியுங்கள், மேடம். தீர்த்து வைக்கிறேன். எனக்கு, அப்படித்தான் உத்தரவு.''

முக்கால்வாசி தலை நரைத்துப் போயிருந்த அவர், அவளை 'மேடம் என்று அழைத்துப் பேசுகிறார். அவரிடம் போய், உங்கள் நிறுவனத்துப் பிரதிநிதியாக, எங்கள் அலுவலகத்தில் நீங்கள் உட்கார்ந்திருப்பதுதான் பிரச்சினை என்று சொல்ல முடியுமா?

அதுவும், அவருடைய எம்.டி. உத்தரவுப்படி அல்லவா உட்கார்ந்திருக்கிறார்.

அப்படி உத்தரவிட்டவனின் வரவுக்காகப் பொறுமையும் பயமுமாகக் காத்திருப்பது தவிர, அப்போது அவளால் வேறு ஒன்றும் செய்ய முடியாது போயிற்று.

தர்மராஜனுக்காக இரங்கல் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

நகரின் முக்கியஸ்தர்களும், பல பிரபலங்களும் அழைக்கப்பட்டிருந்தனர். தனிப்பட அழைக்க இயலா விட்டாலும், எல்லோருமே வந்து கலந்து கொள்ள வேண்டும் என்று, பத்திரிகை விளம்பரத்தின் மூலமாகப் பொது மக்களுக்கும் ஓர் அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த மாதிரி அலட்டுவது, தாத்தாவுக்குப் பிடிக்காது என்று இந்துமதி தெரிவித்தபோது, இந்தக் கூட்ட ஏற்பாடும், அந்தத் தயானந்தனின் உத்தரவுதான் என்றார்கள்.

கூட்டத்துக்குத் தயானந்தன் வருவான் என்று தெரியவும், ஒரு வித அச்சம் கலந்த நிம்மதியோடு, அவனது வருகைக்காக இந்துமதி காத்திருந்தாள்.

ஒன்றும் புரியாத, இந்த ஈரெட்டான நிலை விரைவில் முடிவடைந்து விடும் என்பதில் நிம்மதி. ஆனால், அவர்களை வீட்டை விட்டு வெளியேறச் சொன்னால் என்ன செய்வது என்ற பயம்.

கெஞ்சிப் பார்க்கலாம். ஆனால், இளகாத இரும்பு மனக்காரனாக இருந்தால், பெற்றவளின் கதி?

கலக்கத்துடன் காத்திருந்தாள் அவள்.

தயானந்தன் நேராகக் கூட்டத்துக்குச் செல்வதாகத் தகவல் அனுப்பிவிட்டு, வீட்டினர் வருகைக்காகத் 'தர்மா' வக்கீல் மூலம் காரும் அனுப்பி வைத்திருந்தான்.

''பத்மா வர மாட்டார்கள். அவர்களைத் தனியே விட்டு விட்டுத் தேவகியும் வர மாட்டார்கள் என்று சொன்னேன், இந்தும்மா. அவருக்கே, ஓரளவு உன் வீட்டு நிலைமை தெரிந்திருக்கிறது. அதனால், கஷ்டமாக இருந்தாலும், கடைசியிலாவது ஓர் அரை மணி நேரம், உன்னை வந்து போகச் சொன்னார். அது உன் அம்மாவுக்கு நல்லதாக முடியும் என்றும் சொன்னார். அவர் மனதில் ஏதோ இருக்கிறது. பெரியவரைப் பற்றி, மிகவும் மரியாதையாகப் பேசுகிறார். இருவருக்கும், ஏழு ஆண்டுப் பழக்கமாமே! நீ நம்பி வர வேண்டுமே என்றுதான் என்னையே அழைத்து வரச் சொன்னார். நானும், ஆன்ட்டியும் பக்கத்திலேயே துணையிருப்போம், தைரியமாக வாம்மா!'' என்று வற்புறுத்தி அழைத்துப் போனார் வக்கீல்.

இரங்கல் கூட்டம் இந்துமதியை நெகிழ வைத்தது.

பிரபலங்களைப் பார்ப்பதற்காகவோ என்னவோ, பெரிய கூட்டம் கூடியிருந்தது.

பார்க்க முடிந்தது. அலங்கார விளக்குகள் இன்றி, தெளிவான வெளிச்சத்தில் எல்லோரையும் தெளிவாகப் பார்க்க முடிந்தது. அதே போலப் பிரபலங்களும், நிகழ்ச்சிக்கு ஏற்ற நடை உடை பாவனைகளை மேற்கொண்டிருந்தனர். பக்காவான பாதுகாப்பு ஏற்பாடு.

தர்மராஜனின் ஆளுயரப் படத்தைப் பார்த்ததுமே, இந்துமதியின் கண்கள் கலங்கி விட்டன. கண்ணீரை அடக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்த நிலையிலும், அமைதியும் கட்டுப்பாடுமாகக் கூட்டம் நடந்த விதம் அவள் மனதில் பதிந்தது.

ஓரமாக நின்று, கண்ணசைவாலும், விரல் முனையாலும், தன் ஆட்களை இயக்கிக் கொண்டிருந்த தயானந்தனை வக்கீல் காட்டவும், இந்துமதி சற்றுத் திகைத்தாள்.

சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பாகத் தாத்தாவின் அலுவல் அறையில் பார்த்த முகம்.

அப்போது ஒன்றும் பெரிதாக நினையாதபோதும், ஒரு தொழில் பேச்சு வார்த்தை நடக்கும்போது, அனுமதியின்றிக் குறுக்கிட்டது அநாகரீகமோ என்று அவள் ஓரிரு முறை நினைத்ததுண்டு. பிறகும், சுரேசன் குடும்பத்தோடான நிகழ்ச்சிகளோடு, இதுவும் அவ்வப்போது ஞாபகம் வந்து அவளை உறுத்தியிருக்கிறது.

இப்போது இன்னமும் அதிகமாக உறுத்தியது.

இந்துமதி வருமுன்னரும் பலர் பேசியிருக்க வேண்டும். தொடர்ந்து அவள் கேட்ட அளவில், தர்மராஜனின் எளிமை, இரக்க சுபாவம், நேர்மை, உழைப்பினால் மட்டுமே அவர் தொழிலை வளர்த்த விதம் பற்றிதான் எல்லோரும் பேசினார்கள்.

மாவட்டப் பிரமுகர்களைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காகவோ, அல்லது வேடிக்கை பார்க்கவோ, தர்மராஜனைத் தொழிலில் வீழ்த்தியவர்களும், அழைப்பின் பேரிலேயே கூட்டத்துக்கு வந்திருந்தனர்.

பாரபட்சமின்றி, அவர்களும் இரண்டு நிமிஷம் பேசும்படி மேடைக்கு அழைக்கப்பட்டனர்.

இரங்கல் கூட்ட மேடையில் நின்று கொண்டு இழி வாகவா பேச முடியும்? பட்டும் படாமலும் என்றாலும், பாராட்டத்தான் வேண்டியிருந்தது.

பின்னர் பேசிய நகராட்சித் தலைவர், அவர்களது பாராட்டைப் பற்றி மட்டும் குறிப்பிட்டு, தொழில் துறை எதிரிகளையும், தன் குணத்தால் கவர்ந்த உத்தமர் தர்மராஜன் என்று கூறியபோது, மக்கள் கூட்டத்தில் எல்லோரும் ஒப்புதலாய்க் கை தட்டினர்.

கூட்டம் முடிகிற தறுவாயில், பிரபல நடிகர் எழுந்து, ''இப்படிப்பட்ட நல்ல மனிதர் தொடங்கிய தொழிலை அழிய விடுவது மாபெரும் பாவம். குற்றம். இன்றி லிருந்து 'தர்மா' தயாரிப்புகளை என் வீட்டில் பயன் படுத்தப் போகிறேன்!'' என்று அறிவித்தார்.

''நாங்களும்! நாங்களும்!'' என்றது கூட்டம்.

கடைசியாக இரண்டு வரி நன்றியுரை கூறுமாறு, இந்துமதியை அழைத்தார்கள்.

''தாத்தாவிடம் அன்பு உள்ளவர்கள் இவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதே ஆறுதலாக இருக்கிறது!'' என்ற வளுக்குத் தன்னை மீறிக் குரல் தழுதழுத்து நடுங்கிவிட, வந்திருந்த அனைவரும் உருகிப் போயினர்.

''போதும்மா, வா!'' என்று வக்கீலும் அவருடைய மனைவியும், அவளை அழைத்துச் சென்று, காரில் உட்கார வைத்த பிறகே, இந்துவுக்குத் தயானந்தனின் நினைவு வந்தது.

''அங்கிள், நான் மிஸ்டர் தயானந்தனைச் சந்தித்துப் பேச வேண்டுமே!'' என்று, காரில் இருந்து இறங்க முற்பட்டாள்.

''சந்திக்கலாம், இந்தும்மா! நாளைக்கு அவரே உன் வீட்டுக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறார். இப்போது, இந்தப் பிரபலங்களை எல்லாம் பார்த்துப் பேசி, அவரவர் இடத்துக்கு அனுப்பி வைக்கவே அவருக்கு நேரம் சரியாக இருக்கும். வா, உன்னை விட்டுவிட்டு, நாங்கள் எங்கள் வீட்டுக்குப் போகிறோம். இதுவும் தயானந்தன் ஏற்பாடுதான்,'' என்று அவரும், அவருடைய மனைவியும் காரில் ஏறிக் கொள்ள, கார் கிளம்பியது.

செல்லும்போது, ''ஆனாலும், தயானந்தன் கெட்டிக் காரர், இந்து. கூட்டத்தை என்ன மாதிரி நடத்தி விட்டார்! நீ வேண்டுமானாலும் பார் இந்து, குறைந்தது இன்னும் இரண்டு வருஷத்துக்கேனும் நம் 'தர்மா'வை யாரும் அசைக்கவே முடியாது!'' என்று வக்கீல் பெருமையாகப் பேசவும் இந்துவுக்குச் சுரீலென்றது.

ஆக, இது 'தர்மா' தயாரிப்புகளின் விற்பனையைப் பெருக்குவதற்கான கூட்டமே தவிர, தாத்தாவுக்கான இரங்கல் கூட்டம் அல்ல.

'தர்மா' இப்போது, அந்தத் தயானந்தனின் பொறுப்பில் இருப்பதால், இறந்தவர் பெயரைச் சொல்லி, அவன் தன் தொழிலைப் பெருக்கிக் கொண்டான்.

என்ன ஈரமற்ற கல் நெஞ்சம்!

இவனிடம் கெஞ்சிக் கூத்தாடி, வீட்டை விட்டுத் தர வைக்கலாம் என்று எண்ணியது, எவ்வளவு பெரிய மடத்தனம்!

மனம் சோர்ந்து போனாள் இந்துமதி.



7

மறுநாள் விழித்து எழுந்ததில் இருந்தே, இந்துமதிக்குக் கலக்கம்தான்.

காரணம் அந்தத் தயானந்தன்.

வீட்டுக்கே வந்து பேசுவதாகச் சொல்லி யிருக்கிறான்.

பேசுவதென்ன? வீட்டைக் காலி பண்ணித் தருமாறு கூறப் போகிறான்.

இதை எப்படித் தடுப்பது என்று யோசிக்கும்போது தான், தடுப்பதற்கு ஒரு வழியுமில்லையென்று அவளுக்கு நன்கு புரிந்தது.

சட்டம் அவளுக்கு ஆதரவாக இல்லை என்பதோடு, தாத்தாவுக்கு அவ்வளவு பணத்தைக் கொடுத்திருப்பவ னிடம், எல்லாவற்றையும் சும்மா விட்டுவிட்டுப் போய் விடு என்று, அவளும்தான் எப்படிச் சொல்லுவாள்?

அதுவும் நியாயமாக இல்லையே!

நியாயத்தைப் பார்த்தால், அவளுடைய தாய்?

செத்து விடுவேன், செத்து விடுவேன் என்று அவள் சொல் வதை, வெறும் பேச்சு என்று அலட்சியம் செய்வதற்கில்லை.

அவனை முதலில் பார்த்துச் சொல்லி விட வேண்டும் என்று, தோட்டத்திலேயே நின்றபடி, "வேலை செய்து கடனுக்கு வட்டியேனும் கட்டுகிறேன். அதை வாடகையாக எடுத்துக் கொண்டு, இந்த வீட்டில் எங்களை வாழ விடுங்கள்!" என்று வார்த்தைகளை மனதுக்குள் உருப் போட்டாள்.

ஆனால், சொன்ன நேரத்தில், அவனது கார் வழுக்கிக் கொண்டு வந்து நிற்க, அதிலிருந்து இலகுவாக இறங்கி வந்தவனைத் திகிலோடு பார்க்கையில், உருப் போட்ட தெல்லாம் மறந்து போயிற்று.

ஓடிப்போய், வழிமறித்து, ''எங்களை வெளியேற்றி விடுவீர்களா? அம்மா உயிரை விட்டு விடுவார்களே!'' என்றாள் கண்ணீருடன்.

''அப்படி ஆகாது! ஆனால், நான் உன் அம்மாவுடன் தனியே பேச வேண்டும். நீ இங்கேயே இரு!'' என்று மென் குரலில் அவளிடம் கூறிவிட்டுப் பின்னே திரும்பிப் பார்த்தான் தயானந்தன்.

பிறகுதான் வக்கீலும் அவனோடு வந்திருப்பதை, இந்துமதி கவனித்தாள்.

''உள்ளே வாருங்கள், சார். கிழக்குப் பக்க வராந் தாவில்தான், பெரும்பாலும் அவர்கள் உட்கார்ந்திருப் பார்கள். தேவகி அம்மாவிடமும் சொல்லியிருக்கிறேன், வாருங்கள்!'' என்று வழிகாட்டிச் சென்றார் அவர்.

இந்த வக்கீல் அங்கிள் என்ன, கட்சி மாறிவிட்டாரா? பசையுள்ள இடத்தைக் கண்டதும், பழைய விசுவாசம் போய்விடும் போலும்.

வக்கீலை முன்னே செல்லவிட்டு, அவள் புறம் திரும்பினான் தயானந்தன்.

ஒரு கையால் அவள் தலையை வருடி, ''கவலைப் படாதே!'' என்று விட்டுப் போனான்.

யாரவன்? அவளது தலையை அவன் எப்படி வருடலாம்?

இந்தக் கேள்விகள் மனதுள் எழுந்தாலும், அவற்றைக் கேட்பதற்கான சூடு உள்ளே ஏனோ எழவில்லை.

அத்தோடு, அவனது வருடலில் என்னமோ இருந்து அவளது நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்த ஒரு சுமை, தானாக மறைவதை மட்டுமே இந்துமதி உணர்ந்தாள்.

சற்று நேரத்திலேயே, வக்கீலை வீட்டுப் பெண்மணிகளுடன் பேச விட்டுவிட்டுத் தயானந்தன், இந்துமதியை நாடி வந்தான்.

தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த சிமென்ட் பெஞ்ச் ஒன்றில் அவளை அமரச் செய்து, தானும் அமர்ந்து, ''உன் தாயாரின் அனுமதியோடு இப்போது உன்னிடம் பேச வந்திருக்கிறேன்!'' என்று புன்னகை செய்தான்.

அவளது கண்களில் கலவரம் எட்டிப் பார்க்கவும், ''ஊகூம், நான்தான் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேனே, அதை மாற விடுவேனா?'' என்று, தணிந்த குரலில் சிறு கண்டிப்புடன் கேட்டான், அவன்.

சற்றே இறுக்கம் தளர, ''நிலைமை அப்படி!'' என்று முறுவலிக்க முயன்றாள் அவள்.

''நிலைமை... எனக்கும் அப்படித்தான்!'' என்றான் அவன்.

அவள் கேள்வியாய் நோக்கவும், ''சுற்றி வளைப்பானேன், இந்துமதி? விஷயத்தை நேரடியாகவே சொல்லி விடுகிறேன். உன் தாத்தாவும், நானும் இது பற்றிப் பேசியிருக்கிறோம். அவருக்கு மிகுந்த விருப்பம். உன் தாயாருக்கும் சம்மதமே. ஆனால், இதில் முடிவு சொல்ல வேண்டியவள் நீதான். நா..ன்... நான் உன்னை மணந்துகொள்ள விரும்புகிறேன். உன் அபிப்பிராயம் என்ன என்று சொல்கிறாயா?'' என்று நிறுத்தாமல், மடமடவென்று கேட்டு முடித்தான் தயானந்தன்.

பிரமித்துப் போனாள் இந்துமதி.

சில வினாடிகள் பொறுத்திருந்து விட்டு, அவள் கையைத் தொட்டு அசைத்து, ''இந்துமதி!'' என்றான்.

திடுக்கிட்டாற் போல நிமிர்ந்தாள் அவள். அவனது பேச்சு நினைவு வர, ''நான்... வந்து வீடு பற்றி... அதைப் பற்றிச் சொல்லப் போகிறீர்கள் என்று நினைத்தேன்!'' என்று, ஒருவாறு தன் திகைப்புக்கு விளக்கம் சொன்னாள் அவள்.

உடனேயே ஏதோ தோன்ற, ''அப்படியானால், அம்மா இந்த வீட்டிலேயே இருக்கலாமா? அதைத்தான்...'' என்றவளின் பேச்சை, ''இல்லை!'' என்று தலை யசைத்துத் தடுத்து நிறுத்தினான் தயானந்தன்.

''அதற்கும், இதற்கும் ஒரு தொடர்பும் இல்லை, இந்துமதி. உன் தாயார் எப்போதும் இந்த வீட்டிலேயே இருக்கலாம். அது உன் தாத்தாவிடம் எனக்குள்ள மரியாதைக்காகச் செய்வது. எனவே, அதற்காக, நீ என்னை மணந்து கொள்கிற தியாகத்தைச் செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை!'' என்றான் அவன், கேலி போல.

கேலிதானா?

தலை சரித்து அவனை நோக்கியவள், அவனிடம் வேறு வினவினாள். ''உங்களுக்கும், தாத்தாவுக்கும் பல ஆண்டுகள் பழக்கம் என்று வக்கீல் அங்கிள் சொன்னாரே!''

''ம். ஏழு ஆண்டுகள்.''

''அன்றைக்குத் தவிர, நீங்கள் இங்கே வந்ததே இல்லையே!''

கூண்டில் ஏற்றாத குறுக்கு விசாரணையா என்று உள்ளூரச் சிரிப்பு வந்தபோதும், இந்தக் கேள்விக்கான முழுமையான பதிலைக் கூறத் தயானந்தன் தயங்கி னான்.

ஒரு பெண், அதிலும் உலகம் அறியாதவள், இதை ஏப்படி எடுத்துக் கொள்வாள்?

"ஏழு ஆண்டுகளுக்கு முன், ஒரு முக்கியமான தருணத்தில், தர்மராஜன் சார் எனக்கு மிகச் சிறந்த ஆலோசனை ஒன்றை வழங்கினார். அதன் பலனாகத் தான், அவருக்கே உதவி செய்யும் அளவுக்கு என்னால் வளர முடிந்தது!" என்று, உண்மையைக் கிட்டத்தட்டத் தொட்டதான ஒரு பதிலைக் கூறினான் அவன்.

கூறிவிட்டு, "இன்னும் ஏதாவது தெரிய வேண்டுமா?" என்று ஒரு முறுவலுடன் வினவினான்.

தயானந்தன் எதையும் தெளிவாகச் சொல்லி விட வில்லைதான். ஆனால், கேட்டு அறிவதற்கு எதுவும் இல்லாதது போலவே அவளுக்குத் தோன்றியது.

இல்லை என்று தலையசைக்கப் போன அவளது முகம் சட்டென இறுகியது.

"நேற்று அந்த இரங்கல் கூட்டம், அது உண்மையில் தர்மா பொருட்களின் விற்பன்னயைப் பெருக்குவதற் காகக் கூட்டப்பட்டதுதானே?" என்று கண்டிப்பான குரலில் கேட்டாள் அவள்.

ஏதாவது பொய்க் கதை சொல்லி, ஏய்க்க முயற்சிக்க வேண்டாம் என்று எச்சரிக்கும் குரல்.

ஆனால், அப்படிப்பட்ட முயற்சி ஏதும் செய்யாமல், "ஆமாம்!" என்று தயானந்தன் ஒத்துக் கொள்ளவும், இந்துமதி திகைத்து விழித்தாள்.

"என்ன சொல்லுகிறீர்கள்? ஓர் இரங்கல் கூட்டம்! இறந்து போனவருக்கு மரியாதை தெரிவிப்பது! அதை

உங்கள் வருமானத்தை அதிகரிப்பதற்காக நடத்துவது, வந்து, தப்பு இல்லையா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள் அவள்.

அவளுக்கு நேராக நன்றாகத் திரும்பி அமர்ந்து கொண்டு, அவன் பதில் சொன்னான். ''மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது தப்புதான், இந்துமதி. ஆனால், இங்கே நாம் பல விஷயங்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

''முதலாவது, உன் தாத்தாவின் கடின உழைப்பு. 'ஃப்ரம் த ஸ்க்ராச்சஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்லு வார்கள். அதுபோல, அடி மட்டத்திலிருந்து கடுமையாக உழைத்துத்தான் தர்மராஜன் சார், அவரது நிறுவனத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தார். அந்த நிறுவனத்தை அழிய விடுவது தப்பில்லையா?

''அடுத்து, தர்மா நிறுவனம் கவனிப்பு இன்றியோ, தொழிலாளர் தகராறிலோ, உழைப்புக் குறைவாலோ நாசமடையவில்லை. சில பொல்லாத சதிகாரர்களின் பொய்ப் பிரசாரத்தினால்தான், இந்த ஈன நிலையை அடைந்தது. ஒரு பொய்யைப் பத்துத் தடவை பலமாகச் சொல்லி, மெய்யாக்கி விடுகிற கூட்டம் அது. அவர்கள் வாய் மூலமாகவே மாற்றிப் பேசினாலன்றி, அந்தப் பொய்யை உடைப்பது எளிதல்ல. அதற்கு, இந்த இரங்கல் கூட்ட மேடை தவிரப் பொருத்தமான களம் வேறு என்ன இருக்கிறது, சொல்லு!'' என்று தங்கு தடையின்றித் தெளிவாகப் பேசியவன், சற்றே தயங்கி விட்டு, மீண்டும் தொடங்கினான்.

''தர்மாவின் விற்பனையைப் பெருக்கியாக வேண் டும் என்பதற்கு, இன்னொரு காரணமும் இருக்கிறது,

இந்துமதி! பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காகத்தான் தர்மராஜன் சாருக்குப் பணம் கொடுத்தேனே தவிர, இந்தத் தொழிலைக் கைப்பற்றும் ஆசை எனக்குக் கொஞ்சமும் கிடையாது. சாரால் மீள முடியாது போகும் என்றோ, அந்தத் தோல்வி அவரது உயிரையே பலி கொண்டு விடும் என்றோ, நான் எதிர்பார்க்கவில்லை. ...கடைசிச் சில நாட்களுக்கு முன்பாக, உன் தாத்தா என்னோடு பேசினார். ஏற்கெனவே, அவருடைய குடும்பம் பற்றி அறிந்திருந்ததால், அவரது விருப்பம் என்ன என்று என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

''உன்னைத் திருமணம் செய்வது பற்றி, அவர் நேராகவே பேசினார். தொழிற்சாலையையும், அலுவலகத்தையும் மூடிவிட்டு, உன் தாயாருக்கு வீட்டைக் கொடுத்து, மாதா மாதம் செலவுக்குப் பணம் அனுப்ப என்னால் முடியும். ஆனால், வீட்டுச் செலவுக்கு, மருமகனிடம் கையேந்துவது போல, உன் அம்மா எண்ணிவிட்டால்? அவர்களாக அப்படி எண்ணாவிட்டாலும், குத்திக் குதற யாராவது வருவார்கள்தானே. குடும்ப நிறுவனத்தைச் சீராக்கி, அதைக் கவனிக்க இரண்டு பேரைப் போட்டு, அந்த வருமானமே அவர்களுக்குக் கிடைக்குமாறு செய்து விட்டால், இந்தப் பிரச்சினை எழாதல்லவா?

''இரங்கல் கூட்டம் நடத்தியதற்கு, இதுவும் ஒரு காரணம்!'' என்று முடித்தான் தயானந்தன்.

சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது.

மீண்டும் தயானந்தனே பேசினான். ''என் விருப்பத்தைத் தெரிவித்து விட்டேன். நான் நாளை மாலை கிளம்ப வேண்டும். அதற்குள் உன் முடிவைத் தெரிவித்

தாயானால், நன்றாக இருக்கும்!'' என்றவன், அருகில் அமர்ந்திருந்த அவளது கையை லேசாகத் தொட்டு, ''அது நல்ல முடிவாக இருந்தால் நான் சந்தோஷப் படுவேன்!'' என்றுரைத்து, தன் பேச்சை முடித்தான்.

அத்தோடு, கையை விலக்கிக்கொண்டு, ''வருகிறேன்,'' என்று எழுந்து நடக்கலானான்.

தயானந்தன் உதவியிரா விட்டால், பாங்க் கடனில் எல்லாம் மூழ்கி ஏலத்துக்கு வந்திருக்கும் என்று, தாத்தா இறந்தபோது, வக்கீலும், ஆடிட்டரும் சொன்னது இந்துமதிக்கு நினைவு வந்தது.

ஆனால், பாங்குக்குப் பதிலாகத் தயானந்தனின் நிதி நிறுவனத்திடம் எல்லாம் போகப் போகிறது என்று பிறகு சொன்னார்கள். அதைக் கேட்டு அவன் மீது வெறுப்பைக் கூட அவள் வளர்த்து வைத்திருந்தாள்.

ஆனால், இவன் எவ்வளவு யோசித்துச் செய்திருக் கிறானே! இவனை விட ஒரு சிறந்த மருமகன் அம்மாவுக்கு எப்படிக் கிடைப்பான்?

அத்தோடு, தாத்தா கேட்டதாகவும் சொன்னானே!

கட்டுக் கோப்பாக உடலை வைத்திருக்கும் விளை யாட்டு வீரனின் இலகு நடையோடு தோட்டத்துப் புல்வெளியைக் கடந்து சென்று கொண்டிருந்தவனின் தோற்றமும் நடையும், அவளது நெஞ்சில் பதிந்தன.

அந்த வினாடியில் அவளுள் ஏதோ மாற்றம் நிகழ்ந்தது.

''...சா..ர்!'' என்று அவனை அழைத்தாள், இந்துமதி.



8

திடுமெனத் தொண்டை கமறிச் சத்தம் மெலிதாக ஒலிக்கவே, தான் அழைத்தது, தயானந்தனின் காதில் விழுந்திருக்குமா என்ற சந்தேகத்தில் அவனை மறுபடியும் கூப்பிட, இந்துமதி எண்ணும்போதே, அவன் திரும்பி விட்டான்.

அவளையே பார்த்து, ''என்னது? சாரா?!'' என்று, புருவம் உயர்த்தி, ஆச்சரியமாகக் கேட்டான்.

சற்றுத் திகைத்துவிட்டு, ''மிஸ்டர் தயானந்தன்...'' என்று இழுத்தாள் அவள்.

பொய்யான நெடுமூச்சுடன், ''இது பரவாயில்லை. ஆனாலும் நான் நினைத்தது, இதுவும் அல்ல. போகட்டும். எதற்காக அழைத்தாய்?'' என்று வினவினான் தயானந்தன்.

''என்ன நினைத்தீர்கள்?''

''அது நீ எதற்காக அழைத்தாய் என்பதைப் பொறுத்தது!'' என்றான் அவன் பூடகமாக.

கண்களை மலர்த்தி அவனைப் பார்த்துவிட்டு, வேறுபுறம் நோக்கினாள் அவள்.

''வந்து... அதாவது, தாத்தாவின் விருப்பம்... விருப்பப்படி..... அதாவது...'' என்று தயங்கியவாறு, அவனை ஓரக் கண்ணால் பார்த்தாள் அவள்.

'நீயாகத்தான் சொல்லி முடிக்க வேண்டும்' என்பது போல, அவன் கூர்நோக்குடன் அசையாது நிற்கவும், மின் வெட்டாய் ஒரு பார்வையைச் செலுத்தி விட்டு, ''உங்களைச் சந்தோஷப்பட வைப்பது என்று முடிவு

செய்து விட்டேன்!'' என்றாள் அவள் தலையை நிமிர்த்தி.

வாய் விட்டுச் சிரித்தபடி, அவள் அருகே வந்து அமர்ந்தான் தயானந்தன்.

அவளது கையைப் பற்றி, விரல்களில் லேசாக முத்தமிட்டு, ''நன்றி, கண்மணி!'' என்றான் அவன். ''மெய்யாகவே, என்னைச் சந்தோஷப்பட வைத்து விட்டாய்!''

விரல்கள் குறுகுறுக்கவே, கையை இழுத்துக் கொண் டாள் இந்துமதி.

அவசரமாக எழுந்து, ''அம்மாவிடம், அத்தையிடம் சொல்ல வேண்டும். அவர்களும் சந்தோஷப்படு வார்கள்!'' என்றவள், சட்டெனத் திகைத்தாள்.

அவளுடைய குடும்பத்திற்குச் சந்தோஷமாகத்தான் இருக்கும். வீட்டில் ஒரு திருமணம் என்பதோடு, பல பிரச்சினைகளுக்குத் தீர்வும் கிடைக்கிறது என்பதால், எல்லோருமே மகிழ்ச்சி அடைவது இயற்கையே.

ஆனால், அவனுடைய குடும்பத்தார்?

கொடுக்கிற மேல் நிலையில் இருக்கும் அவர்கள், இதை எப்படி ஏற்பார்கள்?

இவர்களது மகிழ்ச்சி அவர்களுக்கும் இருக்குமா?

தாய், தந்தை, அண்ணன், தம்பி, சகோதரிகள்... அவனுடைய குடும்பம் பற்றி ஒன்றும் தெரியாமல், அவனை மணக்கவே சம்மதித்து விட்டாளே!

அவளது திகைத்த பார்வையைக் கண்டதும், தானும் எழுந்து, ''என்னம்மா?'' என்று பரிவாக வினவினான், அவன்.

'ஒ... ஒன்றும் இல்லை... உங்கள்... உங்கள் வீட்டில் எல்லோருக்கும் இது... இந்தத் திருமணம் பிடிக்குமோ... பிடிக்காதோ என்று...''

''அதெப்படி, உன்னைப் பிடிக்காமல் போகும்?'' என்று கேட்டான் தயானந்தன்.

''என்னை யாரும் பார்த்ததே இல்லையே, எப்படிப் பிடிக்கும்?'' என்று பதில் கேள்வி கேட்டாள் இந்துமதி.

''ஆனால், நான் பார்த்திருக்கிறேனே!'' என்று அவன் இலகுவாகக் கூறியதை, அவளால் ஒத்துக் கொள்ள முடியவில்லை.

''உங்கள் பார்வை போல எல்லோருக்கும் எப்படி இருக்க முடியும்?''

''இருக்கும்!'' என்று அழுத்தத்துடன் கூறிய தயானந்தன் விளக்கம் கொடுத்தான். ''என் பார்வையை அப்பா அப்படியே ஒத்துக் கொள்வார். அப்பாவின் பேச்சுக்கு அங்கே மறு வார்த்தை கிடையாது. எனவே, என் பார்வைதான் எல்லோருக்கும்!''

இந்துமதியின் முகத்தில் சந்தேகச் சாயையைக் காணவும், ''மெய்தான், இந்துமதி!'' என்றுரைத்து, அதற்கு விளக்கம் சொன்னான் அவன்.

''என் தந்தை பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர். கட்டிலிலும் சக்கர நாற்காலியிலும் நாட்களைக் கழிப்பவர்!'' என்றவன், அவளது முக மாறுதலையும், வீட்டினுள் அவளது பார்வை சென்று மீள்வதையும் கவனித்து, ''ஒவ்வொரு வீட்டில், ஒவ்வொரு பிரச்சினை, இந்து. பிரச்சினை இல்லாத வீடு ஏது? எங்கள் வீட்டில், அப்பாவின் உடல் நிலை! மிகுந்த மனோ வலிமை

உள்ளவர் என்பதால், அப்பா பிழைத்து வந்தார் என லாம். காலில் சக்கரத்தைக் கட்டிக்கொண்டு சுற்றுகிறவர் என்று அவருக்குப் பெயர். சுமார் ஏழெட்டு ஆண்டுகளாக, அவர் வெளி உலகத்தைப் பார்ப்பது, என் விழிகள் மூலமாகத்தான். என் அபிப்பிராயம் சரியாக இருக்கும் என்ற நம்பிக்கையும் அவருக்கு உண்டு. அப்பாவே என்னை நம்பும்போது மற்றவர்களும் நம்பத்தானே செய்வார்கள்?'' என்றான் தயானந்தன்.

''மற்ற... அந்த மற்றவர்கள் யார் யார்?''

''மை காட்!'' என்று உள்ளங்கையால், நெற்றியால் தட்டிக் கொண்டான் தயானந்தன். ''என்னைப் பற்றி, உனக்கு ஒன்றுமே தெரியாதில்லையா? எனக்கு இரண்டு அக்காக்கள். என்னைவிட, ரொம்பவே பெரியவர்கள். பெரிய அக்காவுடைய கணவர் டெல்லியில் இருக்கிறார். அக்கா அங்கும் இங்குமாக இருப்பார்கள். ஒரே மகன். இருபது வயது! முதல் பேரக் குழந்தை! செல்வம் தாத்தா செல்லம்! சின்ன அக்கா சிங்கப்பூரில் இருக்கிறார்கள். இரண்டு பெண்கள். விடுமுறைக்கு இங்கே வருவார்கள். இரண்டு அக்காவுக்கும் தனியாகத் தங்க வசதி அங்கேயே இருக்கிறது. அப்பாவுக்காக, வீட்டோடு ஒரு நர்ஸ்! இவர்கள் போக, மற்ற வேலையாட்கள். வேலையாட்களுக்கு, அங்கேயே தங்க வசதி செய்திருக்கிறோம். நகரத்தில் இருந்து, சற்றுத் தள்ளி இருப்பதால், நம் குடும்பத்தவர் தவிர, வீட்டுக்கு வேறு யாரும் அதிகம் வருவது இல்லை!'' என்று குடும்பம் பற்றி விளக்கம் கொடுத்தான்.

''ஏழெட்டு ஆண்டுகளாக உங்கள் அப்பாவுக்கும் உடம்பு சரியில்லை என்றீர்கள்... அப்போதுதான்,

உங்கள் அப்பாவின் வழி காட்டுதல் இல்லாமல் போனதால், அது போலத் தாத்தா செய்தது, உங்களுக்குப் பெரிதாகத் தோன்றியதுபோல!'' என்று யோசித்தவாறே, இந்துமதி கூறவும், அவளை ஒரு தரம் வியந்து நோக்கிவிட்டு, ''கிட்டத்தட்ட அப்படித்தான்!'' என்றான், தயானந்தன்.

அதற்கு மேல் பேசிக்கொண்டு நில்லாமல், ''அம்மா, அத்தையிடம் சொல்ல வேண்டும் என்றாயே!'' என்று அவளை வீட்டினுள் அழைத்துச் சென்றான்.

கவலையோடு மகள் முகத்தைப் பார்த்தாள், பத்மா.

''சந்தோஷ சமாசாரம்தான், ஆன்ட்டி. இந்துமதி என்னை மணக்கச் சம்மதித்து விட்டாள்!'' என்று மகிழ்ச்சியோடு தயானந்தன் அறிவித்தான்.

பெண்மணிகள் இருவரின் முகங்களும் சட்டென மலர்ந்து விகசித்தன.

பத்மா முன்னே வந்து, இந்துமதியைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

மகளை அணைத்தபடி, வக்கீலை நோக்கி, ''பார்த்தீர்களா, சார்? இந்த வீட்டை விட்டு நான் போக மாட்டேன் என்று சொன்னேன் இல்லையா? பாருங்கள், நாங்கள் போக வேண்டியதில்லை. இந்து அப்பா இருந்த இடத்தை விட்டு, நாங்கள் எப்படிப் போவோம்? போனால், நான் செத்து விட மாட்டேனா? அதுதான் போகவில்லை!'' என்று திரும்பத் திரும்பச் சொன்னாள்.

''இனிமேல், நாங்கள் எல்லோரும் இங்கேயே இருக்கப் போகிறோம்!'' என்று அவள் நிம்மதியோடு சொன்னபோது, தயானந்தனின் பார்வையைப் புரிந்து கொண்டு, வக்கீல் பேசினார்.

''அதெப்படி முடியும், பத்மாம்மா?'' என்று அவர் கேட்க, உடனே இந்துமதியுடைய தாயார், சட்டெனப் பதறி விழித்தாள்.

''ஐயோ, இருக்க மாட்டோமா? இந்த வீட்டில் இருக்க முடியாதா? அப்புறம் நான் என்ன செய்வேன்?'' என்று புலம்பவும் தொடங்கினாள்.

தாயை அணைத்து, ''அதும்மா, வந்து...'' என்று தடுமாறிய மகளை, ''நானே சொல்கிறேன், பாப்பா,'' என்று தடுத்து வக்கீலே மேலே பேசினார். ''நீங்கள் இந்த வீட்டிலேயேதான் இருப்பீர்கள், பத்மாம்மா! ஆனால், உங்கள் மாப்பிள்ளைக்கு இங்கேயே இருக்க முடியுமா? அவருக்கு வேறே இடத்தில் தொழில் இருக்கிறபோது, அதைப் பார்க்க, அவர் அங்கே போக வேண்டாமா?'' என்று கேட்டார்.

விசித்திரமாய் நோக்கி, ''அவர் போகட்டும், போகட்டும். தொழிலைப் பார்க்கப் போகட்டும். பாராமல் நஷ்டம் வந்தால், மீண்டும் வீடு போய்விடும். அதனால் அவர் தொழிலைப் பார்க்கப் போகட்டும். ஆனால், அவரைப் போகக் கூடாது என்று நான் சொல்லவில்லையே! நாங்கள்தானே இங்கே இருக்க வேண்டும் என்றேன்?'' என்று கேட்டாள் பத்மாவதி.

''அதைத்தான் சொல்ல வருகிறேன். உங்கள் மாப்பிள்ளை இருக்கும் இடத்தில்தானே, பெண்ணும் இருக்க வேண்டும்? ஒன்று, அவளை அவரோடு அனுப்பி வைத்துவிட்டு, நீங்கள் இங்கே இருக்க வேண்டும். அல்லது அவளோடு மாப்பிள்ளை தொழில் பார்க்கிற இடத்துக்குப் போக வேண்டும்.''

பத்மாவதி யோசித்தது சில வினாடிகளே.

கணவனோடு இருப்பது போன்ற உணர்வைத் தரும் அந்த வீட்டைப் பிரிவதைவிட, மகளைப் பிரிவது மேல் என்ற முடிவுக்கு, விரைவிலே வந்து விட்டாள் அவள்.

தாய்க்கு அந்த வீட்டின் மேல் உயிர் என்று, இந்துமதி அறிந்தே இருந்தாள். ஆயினும், அவ்வளவு சீக்கிரமாக அன்னை முடிவெடுத்தது கொஞ்சம் வருத்தமாகவே இருந்தது.

வக்கீலிடம் கண்ணைக் காட்டியதோடு, இந்தப் பேச்சுக்கும், தனக்கும் தொடர்பே இல்லாததுபோலத் தேவகியிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்த தயானந்தனைப் பார்க்கையில், அவன் இதை எதிர்பார்த்திருந்தான் என்று தோன்ற, லேசாக மனம் குன்றியது.

''அப்பாவால் பயணம் செய்ய முடியாது, ஆன்ட்டி. இரண்டு அக்காவும், சின்னக்கா மகளின் மேல் படிப்புக்காக ஆஸ்திரேலியாவில் அவளைச் சேர்க்கப் போயிருக்கிறார்கள்! யாருக்காகவும் தள்ளிப் போடாமல், திருமணத்தைச் சீக்கிரமாக முடித்துக் கொண்டு, மருமகளை அழைத்து வா என்று அப்பா என்னிடம் சொன்னார். இங்கேயும், ஒரு நல்ல காரியம் நடந்தால், சோகச் சூழ்நிலை மாறிவிடும் என்பது, அவரது அபிப்பிராயம். எல்லாம் உங்களிடமும், அதுபற்றி, அவரே நேராகப் பேசுவதாகச் சொன்னார்... வக்கீல் குடும்பமும் உங்களுக்கு நெருங்கியது. எல்லோருமாகக் கலந்து பேசி, எனக்குத் தெரிவியுங்கள்,'' என்று அவன் தேவகியிடம் சொல்லி முடிப்பது கேட்டது.

கலந்து பேசித் தெரிவிப்பதா? எல்லாம் வெறும் கதை என்று அவளுக்குத் தோன்றியது.

திருமணத்தைச் சீக்கிரமே நடத்த வேண்டும் என்று நினைத்திருக்கிறான். அதை மற்றவர்கள் வாய் மூல மாகவே நிறைவேற்றிக் கொள்கிறான் என்று ஊகித்த இந்துமதிக்கு, அதற்காகத் தயானந்தன் மீது தனக்குக் கோபமோ, ஆத்திரமோ கொஞ்சமும் வரவில்லையே என்பதுதான் ஆச்சரியமாக இருந்தது.

தயானந்தன் சொன்னது போலவே, வக்கீலுடனும், தேவகி, பத்மாவதியுடனும் பேசிய பாண்டுரங்கன், கடைசியாக இந்துமதியுடனும் பேசினார். "உன்னைப் பற்றித் தயா நிறையச் சொன்னான், அம்மா. என் மருமகளாக உன்னைப் பார்க்க வேண்டும் என்று எனக்கு மிகமிக ஆசை. எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாகத் திருமணத்தை முடித்துக் கொண்டு வந்து விடுங்கள். இங்கே ஒரு நோயாளிக் கிழவன், உன்னை வரவேற்க அன்போடு காத்திருக்கிறேன் என்பது, எப் போதும் நினைவிருக்கட்டும். மேற்கொண்டு எல்லாம் வக்கீலிடம் சொல்லி இருக்கிறேன், கேட்டுக்கொள். சரிதானாம்மா?" என்று கனிவான குரலில், சற்றே தெளிவற்றுப் பேசினார் அவர்.

தயானந்தனைப் போலவே, அவரும் மறுப்பதற்கு இடம் தரவில்லை என்று இந்துமதியால் புரிந்து கொள்ள முடிந்தது.

என்ன அவசரம் என்று யோசித்தபோது, வக்கீல் விளக்கம் சொன்னார்.

தயானந்தனுடைய தந்தையால் எப்படியும் வர முடியாது. அவரது உடல் நிலை அப்படி. மற்றவர்கள் வசதிக்காகத் தள்ளிப் போட்டால், எனக்காக, உனக்காக என்று, ரொம்பவும் தள்ளிக்கொண்டே போய்விடும்.

இப்போதைக்குக் கொஞ்ச நாளைக்குத் தயானந்தன் வேலைகளை ஒதுக்கிக் கொண்டு வந்திருக்கிறான். இன்னொரு தரம் இந்த மாதிரி விடுமுறை எடுப்பது, பல மாதங்களுக்கு அவனுக்கு முடியாது.

அடுத்ததும், மிக முக்கியமான காரணம். இந்துமதி யுடைய தாய் பத்மாவதி! உடனடியாக வீட்டில் ஒரு சுப காரியம் நடந்தால், தந்தையின் இழப்பில் இருந்து, பத்மாவின் மனம் மாறும். திருமணம் முடிந்த கையோடு, இந்துமதி கணவனோடு ஒரு சின்ன தேனிலவுக்கும் போய் வந்தால், மகள் கணவனோடு செல்லும் அடுத்த பெரிய பிரிவுக்கும் தாய் மனம் தயாராகிவிடும்.

கோர்வையாக வக்கீல் சொன்னபோது, இந்துமதிக்கு எல்லாம் சரியாகத்தான் தோன்றியது.

அவளுடைய தாயாருக்காக இவ்வளவு யோசிக் கிறார்களே என்றும் தோன்றியது.

யோசிக்கிறார்களே, என்ன? எல்லாம் தயானந்தனின் யோசனைதான். முடிவுதான்.

ஆனால், இது அம்மாவுக்காக மட்டும் அல்லவோ என்றும், அவளுக்குத் தோன்றியது.

அப்படியென்றால், அது வேறு என்னவாக இருக்கும்?



## 9

**எ**ன்ன ஏது என்று, இந்துமதி நிதானமாக உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருக்க, அவளுக்குச் சற்றும் அவகாசம் இருக்க வில்லை.

திருமணம், மண்டபத்துக்காகக் காத்திருக்க நேரமின்றி, அவசரமாகக் கோயிலில் நடக்கும் திருமணம்

என்றபோதும், மணமகளுக்குரிய ஆடை ஆபரணங்கள் எதிலும் குறை வைக்கத் தயானந்தன் விரும்பவில்லை.

அடுத்திருந்த முகூர்த்தத்துக்கு ஐந்தே தினங்கள்தான் இருந்தன.

அதற்குள்ளாகத் திருமணச் சேலை வாங்கி, அதற்குப் பொருத்தமாகச் சட்டையும் தைத்து வந்தது.

இந்துமதிக்கு மட்டுமின்றி, பத்மா, தேவகியோடு, வக்கீல், ஆடிட்டர் குடும்பங்களுக்கும், நல்ல விலை உயர்ந்த துணிமணிகளைத் தயானந்தன் வாங்கிப் பரிசளித்தது, அவர்களிடையே ஒரு பெரும் நல்லிணக்கத்தை உருவாக்கியது.

தர்மராஜனிடம் பணிபுரிந்த அனைவருக்குமே, அவரவருக்கு உரிய வகையில் சற்றுச் சிறப்பாகவே வாங்கிக் கொடுக்கவும் அவன் ஏற்பாடு செய்தான். எல்லோரும் இந்துவிடம் வந்து, அதைப் பாராட்டிப் பேசியது, அவளை நெகிழச் செய்தது.

பேத்திக்காகத் தர்மராஜன் தங்கமும் வைரமுமாக நிறையவே நகைகள் செய்து வைத்திருந்தபோதும், தயானந்தனும் அவளை அழைத்துப் போய் ஒரு செட் வாங்கிக் கொடுத்ததும், அவளுக்குப் பெருமிதமாகவும் இருந்தது.

திருமணம் முடிந்து, தேனிலவுக்காகத் தயானந்தனோடு தனியே கிளம்புகையில், சிறு துணுக்கு அவள் மனதில் ஏற்பட்டபோதும், அவனது கலகலப்பான பேச்சிலும் சிரிப்பிலும், அது தோன்றிய வேகத்திலேயே மறைந்தும் போயிற்று.

தேனிலவில் இருந்து திரும்பி வரும்போது, இவனைப் பாராமல், இவனோடு பழகாமல், இத்தனை ஆண்டு களை எப்படிக் கழித்தோம் என்றிருந்தது, இந்துமதிக்கு.

இந்தும்மா என்ற அவனது அழைப்பிலேயே, அவ ளுக்கு உருகத் தொடங்கிவிடும். கண்மணி, கண்ணம்மா என்றானானால், உலகமே மறந்து போயிற்று.

''இனி அப்பாவைப் பார்க்கப் போக வேண்டும்,'' என்று தயானந்தன் கூறியபோது, அவள் துள்ளிக் கொண்டு கிளம்பி விட்டாள்.

தேவகியின் மகிழ்ச்சியும், வருத்தமும், கூடவே சிறு கேலியும் கலந்த பார்வையில், உள்ளம் குறுகுறுத்த போதும், கிளம்புவதில் அவளுக்குத் தயக்கம் தோன்றவே இல்லை.

அத்தோடு, வக்கீல் சொன்ன லாஜிக் சரியே என்பது போல, பத்மாவதி கலக்கமின்றி, புகுந்த வீட்டில் மகளுக்கு என்ன தேவைப்படும் என்று அது பற்றிப் பட்டியல் இடத் தொடங்கவும், இந்துமதிக்குச் சிரிப்பு வந்தது.

''விமானத்தில் செல்லப் போகிறோம், அத்தை. நீங்கள் சொல்லுகிற பாத்திரம், பண்டங்களை எல்லாம் கொண்டு செல்வது கடினம். அதனால் உங்கள் அன்பான ஆசீர் வாதத்தை மட்டும் எங்களுக்குக் கொடுங்கள் போதும். ஆயிரம் சீர், செனத்திக்கு அது சமம்!'' என்று தயானந்தன் புன்னகையோடு மறுத்த விதம், எல்லோருக்கும் இத மாய் இருக்க, ''அதுவும் சரியாகத்தான் தெரிகிறது!'' என்று, மலர்ந்த முகத்துடனேயே ஒத்துக் கொண்டாள் பத்மாவதி.

இந்துமதியும் களிப்புடனேயே கணவன் வீட்டுக்குக் கிளம்பிச் சென்றாள்.

அவளுடைய கணவன், அன்பே உருவான தயானந்தன், அவளுடன் கூடவே இருக்கும்போது, அவளது சந்தோஷத்துக்கு என்ன குறை?

அவன் கூறியது போலக் கோவையில் இருந்து மும்பைக்கு விமானத்தில் சென்றார்கள்.

விமான நிலையத்துக்குக் கார் வந்திருந்தது.

கார் வேகமாகச் சென்றபோதும், தயானந்தனின் வீட்டை அடையக் கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் ஆயிற்று.

நகரத்தை விட்டுத் தள்ளி வீடு இருப்பதாகத் தயானந்தன் கூறியது, நினைவு வந்தது.

மனைவியின் எண்ணப் போக்கை ஊகித்தவன்போல, ''இங்கே சந்தடியின்றி, அமைதியாக இருக்கும், இந்தும்மா! மும்பையிலும் நமக்கு ஒரு ஃப்ளாட் இருக்கிறது. முன்னெல்லாம் வேலை அதிகமாக இருந்தால், அப்பாவுக்குத் தகவல் தெரிவித்து விட்டு, இரவில் அங்கேயே தங்கி விடுவேன். ஆனால்... இனி அந்தச் சுதந்திரம் எனக்கு ஏது?'' என்று பெருமூச்சு விட்டான், தயானந்தன்.

''ஏன்?'' என்று சட்டெனக் கேட்டுவிட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள் அவள்.

அவனது உல்லாசச் சிரிப்பில் முகம் சிவந்தவளை இழுத்துத் தோளில் சாய்த்துக் கொண்டான் அவன்.

தோளை மிருதுவாக வருடியபடியே, ''நாம் நேராக அப்பாவைப் பார்க்கப் போகலாமா? அல்லது, கொஞ்ச நேரம் ஓய்வெடுக்க வேண்டும் போல இருக்கிறதா?'' என்று கொஞ்சும் குரலில் வினவினான்.

''ஓய்வு வேண்டாம்! ஆனால், முகம் கழுவி உடை மாற்ற வேண்டும்! அலுங்கி, நலுங்கித் தெரிகிறேனோ என்று இருக்கிறது.''

''அலுங்கல், நலுங்கல் எல்லாம் எனக்குத் தெரியா தம்மா! ஆனால், என் மனைவி எப்போதும் ரதி மாதிரி இருப்பது மட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரியும்!'' என்றான் தயானந்தன், பெருமைக் குரலில்.

உள்ளூரக் குதூகலித்தபோதும், ''ஓகோ! அப்படியா விஷயம்? என் கணவர், என்னைத் தவிர, இன்னொரு பெண்ணை நிமிர்ந்து கூடப் பார்க்க மாட்டார் என் றல்லவா, நான் இதுவரை எண்ணிக் கொண்டிருந்தேன். இப்போது, யாரோ ரதி மாதிரி என்கிறீர்களே! சொல் லுங்கள், யார் அந்த ரதி? அவளை உண்டு இல்லை என்று பண்ணியாக வேண்டுமாக்கும்!'' என்று மிரட் டுவது போலத் தொடங்கியபோதும், முடிக்கும்போது, அடக்க மாட்டாமல் இந்துமதி நகைக்க, ''ஐயோ, பயமாக இருக்கிறதே!'' என்று, அவனும் சிரிப்பில் இணைந்து கொண்டான்.

ஒருபுறம் கடலோசை கேட்டுக் கொண்டே இருந்தது. சாலைக்கும் கடலுக்கும் இடையே, அங்கங்கே அள்ளித் தெளித்தாற்போலச் சிறிதும் பெரிதுமாக அழகிய வீடு கள், தோட்டங்களுடன் கண்ணில் படலாயின.

''நம் வீடு வரப் போகிறது,'' என்ற தயானந்தன் முன்னே குனிந்து, ''வேலு, காரைப் பக்கவாட்டு ஃப்ரெஞ்ச் வின்டோ பக்கமாகக் கொண்டு போய் நிறுத்து,'' என்று பணித்தான்.

''சரிங்க, சார்!'' என்று, வாயிற்காவலன் பெரிய இரும்புக் கதவைத் திறந்துவிடக், காரோடும் பாதையில்

செலுத்தி, வீட்டின் அகன்ற படிக்கட்டுகளின் முன்னே நிறுத்தாமல், பக்கவாட்டில் உள்ள கதவின் முன்னே காரைக் கொண்டு நிறுத்தினான், அந்த வேலு.

காரை நிறுத்திவிட்டு, டிக்கியை அவன் திறந்து கொண்டிருக்கும்போதே, அந்த ஃப்ரெஞ்ச் வின்டோ கதவு திறந்தது.

அதன் வழியே வெளியே வந்த ஓர் இளைஞன், ''எடுக்காதே, வேலு. பெட்டிகளை இறக்காதே! மாமாவுக்குக் கடைசிக் குடிலில்தான் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது! அதனால், அவர்.. அவர்கள் பொருட்களை, அங்கே கொண்டு போய் இறக்கு!'' என்று, காரோட்டிக்கு வேறோர் உத்தரவிட்டான்.

இறுதிக் கட்டளைக்காக வேலு, தயானந்தனை நோக்கினான்.

கேள்வியாய்ப் புருவம் சுருக்கி, ''நான் இங்கே இருப்பதுதானே வழக்கம்?'' என்று தயானந்தன் வினவினான்.

''அது சரிதான், மாமா. ஆனால், நேற்று அம்மாவிடம் பேசியபோது, அவர்கள்தான் இப்படி மாற்றச் சொன்னார்கள். இப்போது, உங்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதாம். முன்னைப் போலத் தனி ஆள் இல்லையாம். இரண்டு பேர் என்பதால், தனி வீட்டில்தான் இருக்க வேண்டுமாம்! நீங்கள் இரண்டு பேரும் இங்கே இருந்தால், தாத்தாவுக்கு, எனக்கு, முக்கியமாக உங்களுக்கு ரொம்பச் சிரமமாம். எப்படியும், நான் தாத்தாகூட இருக்க வேண்டும். அதனால், உங்களை அங்கே இருக்கச் சொன்னார்கள்!'' என்றான் அந்த இளைஞன்.

சற்றே கொழுக் மொழுக்கென்று இருந்த அந்த இளைஞனின் தோற்றம், வசதியிலேயே வளர்ந்ததைப் பறை சாற்றியது. உடற் பயிற்சியும் அவ்வளவாகப் பிடிக்காது போலும். அதிகப்படியாக இருந்த சதையி னாலேயே, அவனது முகத்தில் ஒரு குழந்தைத் தனமும் தெரிந்தது.

இவன்தான் தயானந்தனுடைய பெரிய அக்காவுடைய மகன் என்று இந்துமதி ஊகித்தாள். மாமா என்ற அழைப்பும், உள்ளே இருப்பவரைத் தாத்தா என்றதும், அதைத் தெளிவாக்கி விடவில்லையா?

தயானந்தனும், 'செல்வம்' என்று பெயர் சொல்லி அவனை அறிமுகம் செய்வித்து, இந்துமதியின் ஊகத்தை உறுதிப்படுத்தினான்.

முறுவலோடு இந்துமதி கைகுவிக்க, ''நான் நினைத் தேன்!'' என்றான் செல்வம். ''நீங்கள் ரதி மாதிரி அழகாக இருப்பதால்தான், மாமா இப்படி அவசரமாகக் கல் யாணம் செய்திருக்க வேண்டுமென்று, எனக்கு நிச்சய மாகத் தோன்றியது!'' என்று அவன் கூறவும், கார் பேச்சை எண்ணி, மற்ற இருவர் முகங்களிலும் ரகசிய முறுவல் மலர்ந்தது.

மின்வெட்டாய்க் கணவனிடம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு, ''அது யார் செல்வம், அந்த ரதி? அவளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?'' என்று இந்துமதி சாது போலக் கேட்க, அவளுடைய கணவனுக்குச் சிரிப்பு வந்தது.

''அதெப்படிப் பார்க்க முடியும்?'' என்று கேட்ட வனுக்கு, மற்ற இருவரின் சிரிப்பும் எரிச்சலூட்டியது போலும்.

இருவர் முகத்தையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு, ''ஆனால், என்னைக்கூட விட்டு விட்டுக் கல்யாணம் செய்து கொண்டீர்களே, மாமா?'' என்றான் குறையோடு. ''உங்கள் திருமணத்தில், என்னென்ன மாதிரி உடை அணிய வேண்டும் என்று திட்டம் போட்டு வைத்திருந் தேன், தெரியுமா? எல்லாவற்றையும் வீணாக்கி விட்டீர்களே!''

''பரவாயில்லை. அதை, இங்கே வரவேற்பு வைக்கும் போது அணிந்து கொள்,'' என்று சமாதானப்படுத்தி விட்டு, ''இப்போது நாங்கள் அங்கே போய்ச் சாமான்களை இறக்கிவிட்டு, முகம் கழுவிக் கொண்டு, அரைமணி நேரத்தில் வருகிறோம். தாத்தாவிடம் சொல்லிவிடு. டீ... உனக்குக் காபிதானே, இந்து? காபியே தயார் பண்ணும்படி, தாயம்மாவிடமும் சொல்லிவிடு, செல்வம்!'' என்று அவனிடம் கூறிவிட்டு, ''ஏறிக்கொள் இந்து. வேலு, கடைசிக் குடிலுக்குப் போ!'' என்று தானும் ஏறிக் கொண்டு, காரை ஓட்டச் சொன்னான் தயானந்தன்.

தங்குமிடம் பற்றி இந்த மாற்றம் தயானந்தனுக்குப் பிடிக்கவில்லையோ என்று இந்து நினைத்தாள்.

ஒருவேளை, நோயாளியான தந்தைக்கு, மனைவி பணிவிடை செய்ய வேண்டுமென்று எண்ணியிருப்பானோ என்று எண்ணம் ஓடவும் சற்றுத் திகைத்தாள். நோயாளி களுக்குப் பணிவிடை பற்றி யெல்லாம், அவளுக்கு ஒன்றும் தெரியாதே என்று நினைக்கும்போதே, தந்தைக் காக ஒரு நர்ஸ் வீட்டோடு இருப்பதாகத் தயானந்தன் கூறியது நினைவு வந்து, நிம்மதியைத் தந்தது.

ஆனால், அதையும் கற்றுக் கொள்ள வேண்டும். என்றேனும் நர்சுக்கு ஒரு தலைவலி காய்ச்சல் வந்தால், ஒன்றும் செய்யத் தெரியாமல் திணறக் கூடாது.

ஆனால், தயானந்தனின் தயக்கத்துக்குக் காரணம் வேறாக இருந்தது.

''நிறுவனத்து வேலைகளைப் பெரும்பாலும் அப்பாவும் நானும் கலந்து பேசித்தான் முடிவு செய்வது. சில சமயங்களில், வேலை முடிய, இரவு நெடு நேரம் ஆகிவிடும். அப்போதெல்லாம் நீ இங்கே தனியாக இருப்பாயே என்பதுதான். இங்கே பயப்பட ஒன்றும் கிடையாது. அத்தோடு, அக்காவின் கருத்தும் சரியானது தான். இங்கே நாம் இன்னமும் சுதந்திரமாக இருக்கலாம். என்ன மாதிரி சுதந்திரம் தெரியுமோ?'' என்று அவளைத் தொடக் கையை நீட்ட, அவள் லாவகமாக விலகிக் கொண்டு, கிண்டலாய்ச் சிரித்தாள்.

சும்மா என்றால், காலையில் 'வாக்கிங்' மாதிரி நடந்து செல்லக் கூடிய தூரம்தான் என்றாலும், உல்லாசத்தில் கொஞ்சம் அதிகமாகவே நேரம் கழிந்து விடவே, சொன்ன நேரத்திற்குத் தந்தையிடம் சென்று விட வேண்டும் என்பதற்காக, மனைவியைக் காரிலேயே கூட்டிச் சென்றான் தயானந்தன்.

அறைக்குள் செல்லும்போது, மறு கதவு வழியே, ஏதோ வெண்ணிறமாய் மறைவது போல இருந்தது.

ஆனால், அதைப் பற்றி யோசிக்கத் தோன்றாமல், தலையணைகளின் உதவியால், பாதி சாய்ந்த நிலையில் அமர்ந்திருந்த மாமனாரிடம் அவளது கவனம் சென்றது.

பாண்டுரங்கனின் உடல் தளர்ந்திருந்த போதும், கண்களில் ஜீவ சக்தி மங்கர்திருந்தது.

ஒளி பொருந்திய விழிகளால், இந்துமதியைக் கூர்ந்து பார்த்துவிட்டு, ''என்னுடைய மாபெரும் ஆசையில் ஒரு

பாதியை என் மகன் நிறைவேற்றி விட்டான். இரு வருமாக, அடுத்த பாதியையும் விரைவிலே நிறை வேற்றித் தர வேண்டும்!'' என்றார் அவர்.

சற்று மெதுவாகப் பேசியபோதும், அவரது குறிப்பை உணர்ந்து, வெட்கத்துடன் பார்வையை விலக்கிய போது, செல்வத்தின் உதடு ஏளனமாகப் பிதுங்குவதை, இந்துமதி கண்டாள்.



10

செல்வத்தின் ஏளனமான முக பாவம் ஒரு கணம் உறுத்திய போதும், இந்துமதி அதைப் பெரிதாக நினைக்கவில்லை.

அக்கா மகனின் வயது இருபது என்று தயானந்தன் ஏற்கெனவே சொல்லியிருந்தான். அதாவது, அவளைவிட, அவன் கொஞ்சம் சின்னவனே. சில மாதங்கள்.

இந்த வயதில், திருமணம் ஆன வுடனேயே குழந்தையைப் பற்றிப் பேசினால், ஏளனமாகத்தான் இருக்கும். ஏன், அவளே கல்லூரித் தோழிகளோடு சேர்ந்து, அப்படிக் கிண்டலடித்தவள்தான்.

தேனிலவுக்குச் செல்லும்போது அது பற்றி அவள் லேசாகக் குறிப்பிட்டபோது, தயானந்தன் அதைக் கவனி யாது, வேறு பேசவே, அவளும், அதை அழுத்திப் பேசாது விட்டு விட்டாள். விலாவாரியாகப் பேசக் கூச்சம் வேறு.

பிறகு, அந்த நினைவே இருக்கவில்லை. முழு மயக்கம்.

இப்போதோ, வெட்கமாக இருந்ததே தவிர, வெறுப்புத் தோன்றவில்லை. மாறாகத் தயானந்தனைப் போல, ஒரு சின்ன உருவம் கற்பனையில் தோன்றி, அவளை

நெஞ்சை நெகிழ வைத்துக் கொண்டிருந்தது. உடம்பெல்லாம் ஒரே குறுகுறுப்பு.

யோசித்துப் பார்த்தால், தன்னை நினைத்தே வேடிக்கையாக இருந்தது.

ஒன்றும் பேசாமல், தலை குனிந்து நின்றாள்.

மருமகளை ஆவலாக நோக்கிவிட்டு, "என் மகனிடம் ஒன்று சொன்னால், அதைச் சரியாகப் புரிந்துகொண்டு, இம்மி பிசகாமல் என் விருப்பம் போலவே செய்வான் என்று எனக்குத் தெரியும்!" என்று பாண்டுரங்கன் மேலும் பெருமைப்பட்டார்.

தன் மகனுக்கு நிகராக உலகில் யாருமே கிடையாது என்கிற கருத்து போலும் என்று எண்ணிய இந்துமதிக்குத் தன்னுடைய தாத்தாவின் நினைவு திடுமென வந்தது.

அவருக்கும், தயானந்தனைப் பற்றி இதே கருத்துதான்.

வக்கீலும் மிகவும் உயர்வாகத்தான் பேசினார்.

ஏன், இப்போது, அவளிடம், இந்த உலகிலேயே சிறந்த ஆண் மகன் யார் என்று கேட்டால் தயானந்தன் தான் என்று அடித்துச் சொல்லுவாளே! அத்தனை தூரம் தலை கிறுகிறுத்துப் போயல்லவா, அவள் இருக்கிறாள்.

இவன் எல்லோரையும், எப்படித்தான், இப்படி மயக்குகிறானோ?

சற்றுப் பொறுத்துத் தந்தையும் மகனும் தொழில் பற்றிப் பேச வேண்டியிருந்தது.

எனவே, ஒரு செல்லை இந்துமதியின் கையில் கொடுத்து, கோவையில் எல்லோரிடமும் பேசும்படியும்,

பேசி முடித்ததும், வீடு, தோட்டம் எல்லாம் சுற்றிப் பார்க்கும்படியும் கூறிவிட்டுத் தயானந்தன் தந்தையிடம் சென்றான்.

தாயுடனும், அத்தையுடனும் அங்குள்ள நலம் விசாரித்து, இங்குள்ள நலம் தெரிவித்துப் பேசிவிட்டு, இந்துமதி தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தாள்.

செடி கொடிகளுடன் தோட்டம் அழகாகவே இருந்த போதும், தனியே சுற்றும்போது, கொஞ்ச நேரத்தில் அவளுக்குப் போரடிக்கத் தொடங்கியது.

''என்னவாச்சும் வேணுமின்னா சொல்லுங்கம்மா!'' என்று, தோட்டக்காரன் போல, ஒருவன் ஓடி வந்தான் தான்! ஆனால், அவனோடு என்ன பேசுவது?

''சும்மா சுற்றிப் பார்க்க வந்தேன்,'' என்று அவனை அனுப்பி விட்டுத் தனியாகவே சுற்றினாள். தனியாக இருந்தால், இடையூன்றி அவனைப் பற்றி நினைக்க வேனும் இயலும்.

எப்படியும், இந்த அழகான இடத்தில், தயானந்த னுடன் உரையாடியபடியே சுற்றினால், எவ்வளவோ நன்றாகத்தான் இருக்கும்! ஆனால், அவன் தொழிலைப் பற்றிப் பேச வேண்டியிருக்கிறதே!

ஆனால், அதை இன்றே பேச வேண்டுமா என்று உள்ளூர ஒரு தரம் நினைத்துவிட்டு, அந்த அவசியம் இல்லா விட்டால், அவளுடைய அன்புக் கணவன் அவளைத் தனியே விட்டுப் போயிருக்க மாட்டான் என்று தன்னைத் தானே இந்துமதி சமாதானப்படுத்திக் கொண்டு, மீண்டும் தோட்டத்தின் அழகைத் தேடிப் பிடித்து ரசிக்கலானாள்.

நிறையக் குத்துச் செடிகள்தான். விருப்பப்பட்ட வடிவில் வெட்டப்பட்டிருந்தன.

ஆனால், இடையிடையே அமைக்கப்பட்டிருந்த வண்ணப் பூச்செடிப் பாத்திகள், பூத்துக் குலுங்கும் வண்ண மலர்களுடன் கண்ணைப் பறித்தன. சில வகைப் பூக்கள், அவள் அதுவரை பார்த்தே இராத அழகிய வண்ணக் கலவைகள்!

தயானந்தோடு சேர்ந்து பார்த்தால், இவை எவ்வளவு அழகாகத் தோன்றக் கூடும்!

ஊட்டியில், தேனிலவின்போது, ஒவ்வொரு பூவின் நிறத்துக்கும் வடிவத்துக்கும், ஏதாவது வேடிக்கையான விளக்கம் சொல்லி, அவன், அவளைச் சிரிக்க வைத்தது நினைவு வந்து, கணவனின் அருகாமைக்காக ஏங்க வைத்தது.

அந்த நேரத்தில், ''அடடா! தனியாகவா இருக்கிறீர்கள்? என்னை நீ.. இல்லை, அத்தை, நீங்கள் என்னைக் கூப்பிட்டிருக்கக் கூடாதா? பேச்சுத் துணையாகவேனும் இருந்திருப்பேனே! இந்த மாமா சுத்த மோசம்! இன்றைக் கேவா உன்னைத் தனியாக அலைய விடுவது?'' என்று அங்கே வந்த செல்வம், அவளைத் தனியே பார்த்து விட்டு, ஆத்திரப்பட்டான்.

அவன் அப்படி ஆத்திரப்பட்டது, இந்துமதிக்கு ஆறுதலாகத்தான் இருந்தது. ஆனாலும் கணவனைக் குறை கூறுவது பிடிக்காமல், ''மாமாவோடு ஏதோ தொழில் பேச்சு, செல்வம்! வயிற்றுப்பாட்டு விஷயம். அதைவிட முடியுமா? பார்த்துத்தானே ஆக வேண்டும்?'' என்று, அவனைத் தாங்கிப் பேசினாள் அவள்.

செல்வம், அவளுக்காக மேலும் பரிந்து வந்து, படபடத்தான். ''அதை இன்றைக்கே பேச வேண்டுமா என்பதுதான் என் கேள்வி. புதிதாக வந்திருக்கிறீர்கள். இந்த இடம் பழக, ஒரு நாளேனும் வேண்டாமா? அந்த ஒருநாள் கூடத் தள்ளிப் போட முடியாமல், அப்படி யென்ன பெரிய பிசினஸ் பேச்சு? அப்படியென்ன, நம் வயிற்றுப்பாடு அன்றாடப் பிச்சையிலா நடக்கிறது? தாத்தாவுக்குத்தான் வயதாயிற்று. இதெல்லாம் ஒன்றும் புரியாது!...'' என்றவனைக் குறுக்கிட்டு, "சின்னப் பையன்... உங்களுக்கு மட்டும் எல்லாம் தெரியுமாக்கும்! தப்பாச்சே!'' என்று, லேசாகப் பல் தெரியச் சிரித்தாள், இந்துமதி.

சற்று நேரம் பார்த்திருந்துவிட்டு, செல்வம் விசிலடித் தான். ''யம்மாடி! மாமா ஏன் மயங்கினார் என்று இப்போதல்லவா தெரிகிறது!'' என்றான் அவன்.

''மயக்கம் எல்லாம் ஒன்றும் இல்லை, செல்வம்! என் தாத்தாவாகக் கேட்டு, என்னை உன் மாமா தலையில் கட்டி விட்டார்!'' என்று, அவள் அறிந்த உண்மையை வேடிக்கை போலச் சொன்னாள் இந்துமதி.

''இந்தத் தாத்தாக்களுக்கே இந்த வேலைதான். உன் தாத்தாவும் மாமாவைக் கேட்டிருக்கலாம். ஆனால், அதனால் மட்டும் மாமா மணக்கவில்லை என்று எனக்குத் தெரியும். இங்கே தாத்தா...'' என்று ஏதோ சொல்ல வந்தவன், திடுமெனப் பேச்சை நிறுத்திக் குழப்பத்துடன் விழித்தான்.

''என்ன செல்வம், உங்கள் தாத்தா என்ன சொன்னார்?'' என்று இந்துமதி வினவினாள்.

''அது என்னவோ சொல்லட்டும். ஆனால், உனக்கும் எனக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதுதான் இருக்கும். உருவத்தைப் பார்த்தால், பள்ளிச் சிறுமி மாதிரி, என்னை விடச் சின்னவளாகத்தான் தெரிகிறது. உன்னைப் போய், 'அத்தை ஆட்டுக்குட்டி' என்று முந்திய தலைமுறை உறவை வைத்து அழைத்து, மரியாதையாக 'ங்கள்' போட்டுத்தான், நான் பேசியாக வேண்டுமா? சித்தி பெண்களைப் போலப் பேர் சொல்லி, நீ, நான் என்று நாம் சிநேகமாகப் பழகினால் என்ன? அதில் தப்பு ஒன்றும் இல்லையே! உன்னைப் பார்த்தால், பெரிய ஆன்ட்டி மாதிரி இல்லாததால், அத்தை என்று கூப் பிடவே பிடிக்கவில்லை!'' என்று உதட்டைக் குவித்துச் செல்வம் குறைப்பட்டபோது, அவன் மிகவும் சின்னப் பிள்ளையாக அவளுக்குத் தோன்றினான்.

ஆனால், இவ்வளவு சொன்ன பிறகு, அத்தை என்று மரியாதை செலுத்தித்தான் ஆக வேண்டும் என்று எப்படிச் சொல்வது?

அத்தோடு, பள்ளிச் சிறுமி என்று அவன் கூறியது சற்று மிகையே என்றாலும், இளமையாகத் தெரிவது குறித்து மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. எப்படியும், அடுத்த தலைமுறை என்கிற அளவுக்கு, வயது வேறு பாடும் கிடையாதுதான்.

புகுந்த இடத்தில், நட்பாகப் பழக ஒருவன் முன் வரும்போது, மறுப்பானேன்?

அதுவும், மாமனாருடைய ஆசைக்குரிய செல்லப் பேரன்.

''தாராளமாகப் பேர் சொல்லிக் கூப்பிட்டு, ஒருமை யிலேயே பேசலாம்! ஒரேயடியாக, 'வாடி, போடி'

எனாதவரை, ஆட்சேபமே கிடையாது!'' என்று, இலகுவாகவே பதில் அளித்தாள் இந்துமதி.

''சிநேகிதர்கள்!'' என்று கையை நீட்டினான் செல்வம்.

''சிநேகிதர்கள்!'' என்று அவன் நீட்டியை கையைப் பற்றி அவள் குலுக்கினாள்.

அவள் அருகில் அமர்ந்து, ''இந்த நட்பு ஒப்பந்தம் முன்பே நடந்திருந்தால், உன் கல்யாணத்தை நான் பார்த்திருப்பேன் அல்லவா?'' என்று அவன் குறைப் படவும், கலீரெனச் சிரித்தாள் அவள்.

''திருமணம் ஆனதால்தானே, நான் உன்னைச் சந்திக்க நேர்ந்ததே!'' என்று அவள் சிரித்துக் கொண்டே எடுத்துரைக்கவும், அவன் முகத்தில் லேசாக அசடு வழிந்தது.

ஒரு கணம் சுற்றும் முற்றும் பார்த்தவன், ''இந்து, அந்தக் குட்டிக் குளத்தில் உள்ள தாமரைக் கொடியைப் பார்த்தாயா? லேசாக மஞ்சள் நிறத்தில் பூக்கும். பாண்டிச்சேரி அன்னைக்குப் பிடிக்கும் என்று வளர்க்கிறார்கள். ஒவ்வொரு பூவும் அன்னைக்குத்தான் காணிக்கை. நிறையப் பூப் பூத்தால், இரண்டு கிலோ மீட்டர் தள்ளி இருக்கும் மதர் சென்டருக்கு அனுப்பி விடுவார்கள்,'' என்று பூவைப் பற்றிய விளக்கம் கூறும் சாக்கில் பேச்சை மாற்றினான்.

உள்ளூரச் சிரித்தபோதும், ''அப்படியா?'' என்று கேட்டு, பேச்சை மாற்ற அனுமதித்தாள் இந்துமதி.

அது வெளிப்படையாகத் தெரியாதிருப்பதற்காக, ''கோவையிலும், பாண்டிச்சேரி அன்னையை வழிபடுகிறவர்கள் நிறைய இருக்கிறார்கள். அத்தைகூட,

அம்மாவை அழைத்துக் கொண்டு, வாராவாரம் போய் வருவார்கள்!'' என்று மேலும் மதர் பற்றிப் பேசி அவனது சங்கடத்தைப் போக்கினாள்.

பாவம்... சின்னப் பிள்ளை! வீட்டிற்கு முதல் பேரன் எனும்போது, எல்லோருக்கும் செல்லப் பிள்ளையாக வேறு வளர்ந்திருப்பான்!

நாத்தனார் மகனைப் பற்றிப் பரிவாக யோசிக்கும் போதே, இந்துமதி திகைத்தாள்.

அவளுக்கும் ஏறத்தாழச் செல்வத்தின் வயதுதான். அவளும் வீட்டிற்கு முதல் பேத்திதான். முதல் பேத்தி மட்டுமின்றி, ஒரே பேத்தியும்கூட. தாத்தா அவளையும் செல்லமாகத்தான் வளர்த்தார்.

ஆனால், கிட்டத்தட்ட அவள் வயதேயானவனைச் சின்னப் பிள்ளை என்று எண்ணத் தோன்றுகிறதே!

திருமணம் ஆனதால், பெரியவளாக எண்ணத் தோன்று கிறதா? அல்லது, கடந்த சில மாதங்களில் அடைந்த அனுபவம் அவளை முதிர வைத்து விட்டதா?

இந்துமதியின் யோசனையில் குறுக்கிட்டு, ''நாம் வேறு ஏதோ பேசிக் கொண்டிருந்தோமில்லை?'' என்று புருவம் சுருக்கி யோசித்தான் செல்வம்.

அவனது பேச்சின் கருத்தைக் காட்டிலும், அவன் புருவம் சுருக்கி யோசித்த விதம், இந்துமதியைக் கவர்ந்தது.

அவனுடைய மாமன் செய்வதன் அப்பட்டமான காப்பி! இவனுக்குத் தயானந்தன்தான் ஹீரோ போல!

இன்னும் எவ்வளவு நேரம், அவனது தொழில் பேச்சு நடக்கும் என்று, அவளது மனம் அவனிடமே சென்றது.

''இரண்டு பேரும் ரொம்ப நேரம் பேசுவார்களா?'' என்று, தன்னையறியாமல் கேட்டாள்.

அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு, ''ம்ம்ம்... பேசுவார்கள். தாத்தா அசதியில் தூங்கிவிட்டால், மாமா நர்சோடு தனியாகப் பேசிக் கொண்டிருப்பார்!'' என்றான் செல்வம்.

''மாமா முன்னிலையில், அவரது உடல்நிலை பற்றித் தெளிவாகப் பேச முடியாமல், அவர் தூங்கும் போது தனியாகப் போய்ப் பேசுவார் என்று நினைக்கிறேன். எதையும் அவர் எவ்வளவு யோசித்துச் செய்கிறார்!'' என்று பெருமைப்பட்டாள் மனைவி.

''ஆனால், உன்னைத் தனியாக விட்டுவிட்டு, அதை இன்றே செய்திருக்க வேண்டாம் என்பது என் கருத்து!'' என்றான் செல்வம்.

''நீ எனக்காகப் பார்க்கிறாய், செல்வம். ஆனால், இத்தனை நாட்கள் விடுமுறையை ஈடுகட்ட வேண்டாமா? கடமை தவறாதவர் அவர்!'' என்றாள் இந்துமதி பெருமைக் குரலில்.

அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு, ''இருபது வருஷமாக, அவர் எனக்கு மாமா! அவரைப் பற்றி எனக்கு நீ சொல்கிறாயே! அவர் எந்த அளவுக்குக் கடமை காப்பார் என்று தெரிந்தால், நீ மயக்கம் போட்டு விழுந்து விடுவாய், தெரியுமா? அப்புறம், இந்தத் தாமரைக் குளத்துத் தண்ணீரைத் தெளித்துத்தான், உனக்கு மயக்கம் தெளிவிக்க வேண்டியிருக்கும். அப்புறம் நர்சைக் கூப்பிட்டு உனக்கும் சேர்த்து வைத்தியம் பார்க்க வேண்டியதுதான்! அப்புறம்...'' என்று சொல்லிக் கொண்டே

போன செல்வம், இடையில் நிறுத்தி, அவளைத் தலை சரித்துப் பார்த்தான். "ஆனால், நர்ஸ் உனக்கு வைத்தியம் பார்க்க மாட்டாள் என்று நினைக்கிறேன்!" என்றான் யோசனையாக.

"அதுவும் சரிதானே!" என்று அவனை ஒட்டியே பேசினாள் இந்துமதி. "அப்புறம், நர்சுக்கு இரட்டைச் சம்பளம் கொடுக்க வேண்டியது ஆகிவிடும். நர்சுக்கு வேலையும் அதிகம் ஆகிவிடும். பாவமில்லை?" என்றாள் அவன் பாணியிலேயே.

பாதி மனம் கணவனிடம் இருக்க, நர்சைப் பற்றிய பேச்சில் அவளுக்கு ரசனையே இருக்கவில்லை.

ஏதோ யோசனையில் ஆழ்ந்து, நாத்தனார் மகன் பேசுவதை நிறுத்தியதுகூட, நிம்மதியாகவே இருந்தது.

ஒரு வழியாகத் தந்தையோடான பேச்சு முடிந்து, தயானந்தன் வந்து சேர்ந்தான்.

அவ்வளவு நேரம், இந்துமதி போரடித்துப் போகாமல், அவளுக்குத் துணையிருந்து பேசிக் கொண்டிருந்ததற்காகத் தமக்கை மகனுக்குத் தயானந்தன் நன்றி தெரிவித்தான்.

"அல்லது, தன் பேச்சால், அவனே உன்னைப் போரடித்து விடவில்லையே, இந்து?" என்று அவன் கிண்டலடிக்க, அவளையும் உற்சாகம் தொற்றியது.

"அப்படி ஒன்றும் இல்லையே! சும்மாதான் பேசிக் கொண்டிருந்தார். ஆனால், உங்கள் அக்கா மகனின் பேச்சுப் பற்றி, உங்களுக்குத்தானே நன்றாகத் தெரியும்!" என்று அவள் சாதுவாகப் பதிலிறுக்க, தயானந்தன் சட்டெனச் சிரித்தான்.

சற்றுத் திகைத்துவிட்டு, "மாமா, இப்போது ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று செல்வம் விளக்கம் கேட்டான்.

"அது... நீ அத்தைக்குப் புகுந்த வீட்டு உறவு அல்லவா? அதனால், உன் பேச்சுப் பற்றி, அவள் அபிப்பிராயம் சொல்ல மாட்டாளாம். நான் சொல்வதை ஒத்துக் கொள்வாளாம். அத்தை நல்ல பெண், இல்லை?" என்று, வேறு பேச முயன்றான் தயானந்தன்.

ஆனால் தீவிரமாக யோசித்து முடித்த செல்வத்தின் முகம் உர்ரென்றாகியது. "நீங்கள் சொன்னதை ஒத்துக் கொள்வது என்றால்... நான் போராடித்தேனா என்று கேட்டீர்கள் அல்லவா? அப்படியானால், நான் போரடிக்கிறவனா? நீங்களானால் அத்தையைத் தனியே அனாதை மாதிரி அலைய விட்டு விட்டு, உங்கள் வேலையைப் பார்க்கப் போய் விட்டீர்கள். பாவம் அத்தை என்று பேச வந்தால், என்னையே போர் என்கிறீர்களா?" என்று குறைப்பட்டான்.

"நல்லதற்குக் காலமில்லை என்று ஏன் சொல்லுகிறார்கள் என்று, இப்போதாவது புரிந்ததா?" என்று கேட்ட இந்துமதி, செல்வம் தொடர்ந்து உம்மென்று இருக்கவும், "இதற்குச் சிரிக்க வேண்டும், செல்வம்! நாமிருவரும் நண்பர்கள் என்று, சும்மா வாயால் சொன்னால் மட்டும் போதுமா? ஒருவருக்கொருவர் கேலி பேசினால், சிரிக்க வேண்டாமா?" என்று சீரியசாகக் கேட்டாள்.

அவசரமாக யோசித்து, "அடடா! இது கேலியா? இனிமேல், முதலிலேயே எச்சரித்து விட்டுக் கேலி பண்ணு, அத்தை! நீ என்ன சொன்னாலும், நான் சிரித்து வைத்து விடுகிறேன்!" என்று செல்வம் திருப்ப, "உன் கேலியின் அழகு!" என்று தயானந்தன் வார, சற்று நேரம் அங்கே கலகலப்பாக இருந்தது.

தாங்கள் இருவரும் சினேகிதர்களாக இருக்கப் போவது பற்றி, இந்துமதி கணவனிடம் விவரித்தாள்.

''ஓஹோ!'' என்று தலையாட்டிக் கேட்ட தயானந்தன், ''ரொம்பவே நல்லதுதான். அத்தை சாக்கில், இவ்வளவு நேரம் செல்வத்துக்குப் பாடம் படிப்பதிலிருந்து விடுதலை. உனக்குத் தனிமையிலிருந்து விடுதலை. நல்லதுதானே! வா இந்து, அப்பாவிடம் சொல்லிக் கொண்டு கிளம்புவோம். இனியேனும், நீ பாடத்தைப் பார், செல்வம். நாளை சந்திப்போம்!'' என்று மனைவியை அழைத்துக் கொண்டு, தந்தையிடம் சென்றான்.


பின்னர், இருவருமாக விடை பெற்றுக் கொண்டு, அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குடிலுக்கு வந்து சேர்ந்தனர்.

அதன் பிறகு, புது மணத் தம்பதியருக்கே உரிய விதத்தில், பொழுது இனிதாகக் கழிந்தது.

அன்றிரவு, தன் மாமன் மனைவியைப் பற்றிய தன் அபிப்பிராயத்தைச் செல்வம் அவனுடைய அன்னைக்கு, செல்போனில் தெரிவித்தான்.

''மாமாவிடம் பயங்கரமாக மயங்கிக் கிடக்கிறதும்மா! மாமா வெள்ளைக் காக்காய் பறக்கிறது என்றால், மறு பேச்சின்றி, அப்படியே ஒத்துக் கொள்ளும் போல இருக்கிறது!'' என்றான் அவன்.

''அப்படித்தான் இருக்க வேண்டும். நல்ல வேளை! அவள் எப்படி இருப்பாளோ என்று, நான் கவலைப் பட்டுக் கொண்டே இருந்தேன்!'' என்றாள் அவனுடைய அருமைத் தாயார்.



11

தொடர்ந்த சில தினங்களில், கணவன் வீட்டில் வாழும் முறை, இந்துமதிக்கு ஓரளவு பழக்கப்படலாயிற்று.

அவருடைய பேத்தியை மணக்கக் கேட்டு, அவனும் ஒப்பியிருந்த அப்போதும், அவளுடைய தாத்தா தர்மராஜன் இறந்த சமயம், தயானந்தன் ஏன் உடனே வரவில்லை என்று இந்துமதி ஓரிரு முறை எண்ணியிருக்கிறாள்.

அதன் காரணம் பற்றிப் பல விதமாகக் கேள்வி யுற்றும், தானாக ஊகித்தும் இருந்தாள்.

ஆனால், இப்போது அதன் காரணம் தெளிவாகத் தெரிந்தது.

தயானந்தனுக்கு வேலை அதிகம். தொழிலின் அடிப்படை நிதி.

அன்றன்றைக்கு, எந்தெந்த நிறுவனங்கள், எப்படி யெப்படி இருக்கின்றன என்று கவனித்துப் பணம் கொடுப்பதோ, வசூலிப்பதோ முடிவெடுத்துத் தொழில் நடத்தினான்.

கணக்கீடு கொஞ்சம் தவறினாலும், பெருந்தொகை நட்டப்பட்டு விடும் என்பதால், வெகு எச்சரிக்கையோடு செயல்பட்டான்.

விடிகாலையில் எழுந்து கடற்கரைப் பக்கம் சென்று ஓடி விட்டு வந்தான் என்றால், அன்று வந்த ஃபைனான் சியல் எக்ஸ்பிரஸ், மனி, காபிடல், இன்டஸ்ட்ரி என்று அது போன்ற தினசரி, வாராந்திர, மாதப் பத்திரிகைகள் அத்தனையையும், வேகமாகப் பார்வையிடுவான்.

பார்க்கிறபோதே மார்ஜின் பக்கமாகக் குறிப்புகள் எழுதுவான். அதைக் கொண்டுதான், வெறுமனே பார்க் காமல், பத்திரிகைகளை அவன் படிக்கவும் செய்கிறான் என்று அவள் கண்டு கொண்டது.

அவ்வளவு வேகம்.

குறிப்பு எழுதியவற்றைத் தனியே எடுத்து ஃபைல் பண்ணிய பிறகுதான், அவள் இருப்பது அவன் கண்ணில் படும்.

அவ்வளவு நேரப் பாராமுகத்துக்கு ஈடு செய்வது போல, கிண்டல், கேலி, ஏதேனும் விளையாட்டு என்று சற்று நேரம் அவளோடு இருந்து சிரிக்க வைத்து விட்டுக் குளிக்கப் போவான்.

அதற்குள், சூடு ஆறாமல், செல்லோவில் காலை உணவு வந்துவிடும்.

காலை உணவுடன், தயானந்தனின் வேலை நேரம் தொடங்கிவிடும்.

"பொதுச் சமையல் அறையிலிருந்து, அன்றன்றைய உணவு - நேரம் தவறாமல் - வந்துவிடும். உனக்குப் பிடித் தது எதுவும் வேண்டும் என்றால், முன்னதாகச் சொல்லிவிடு. அதையும் செய்து அனுப்புவார்கள். இது தவிர, உனக்கு ஏதேனும் சமையல் செய்து பார்க்க வேண்டும் என்று தோன்றினால், பின்புறம் இருக்கும் குட்டிச் சமையல் அறையில் செய்யலாம். வேண்டிய சாமான்கள் சொன் னால், கொண்டு வந்து தருவார்கள். யார் என்ன சொல்லு வார்களோ என்ற கலக்கமே இல்லாமல், நீ விருப்பம் போல இருக்கலாம். பெருக்கித் துடைப்பது போன்ற வேலைகளைச் செய்ய, யாராவது வருவார்கள்," என்று

முதல் நாளே தயானந்தன், மனைவியிடம் தெரிவித்திருந்தான்.

இந்துமதிக்கும், தாயின் பராமரிப்பு ஒழுங்காகக் கிடைத்தது இல்லைதான். ஆனால், அதை ஈடு செய்யத் தாத்தாவும், தேவகியும் இருந்ததால், அங்கே வீடு இருந்தது. ஆனால்...

அவள் யோசனையோடு பார்க்கவும், "என்ன? ஹோட்டல் மாதிரி இருக்கிறதா? கிட்டத்தட்ட அப்படித் தான், இந்து. அம்மா இருக்கும்போதே, பல்வேறு தர்ம காரியங்களில் ஈடுபட்டிருந்ததால், சமையல் பொறுப்பை ஆட்களிடம் விட்டுவிட்டார்கள். பிறகு... அக்கா இருவரும், ஒரு வகையில் இங்கே விருந்தினர்தானே! நிர்வாகத்தில் தலையிடுவது இல்லை!" என்றான் அவன்.

"ஆனால், பகல் முழுவதும் நான் என்ன செய்வது?"

"வேலுவை வரச் சொல்லுகிறேன். இந்து. இந்தப் பகுதியில் ஒரு நல்ல ஜிம் இருக்கிறது. அருமையான லைப்ரரி உண்டு. விளையாட்டுக்கும் இடம் இருக்கிறது. டென்னிஸ், பாட்மின்டன், டேபிள் டென்னிஸ்.. நீச்சல் குளம்கூட.... எல்லாம் வேலுவே காட்டித் தருவான். செல்வத்தையும் கூட்டிப் போய், எதையாவது விளையாட வைத்தாயானால், அவனுக்குக் கொஞ்சமேனும் சதை குறையும். ஆனால், அதைப் பற்றி அவனிடம் சொல்லிவிடாதே. ஙை ஙை என்று புலம்பத் தொடங்கி விடுவான். அக்கா முன்னிலையிலோ, இது பற்றி வாயே திறக்கக் கூடாது. கோபம் வந்துவிடும்!" என்றான் தயானந்தன்.

''நீங்கள் வாங்களேன்!'' என்றாள் இந்து, கொஞ்சலாக,

ஒரு கணம் தயங்கிவிட்டு, ''பதினைந்து நாள் வேலை, அப்படியே நிற்கிறது, கண்ணம்மா. அதை ஈடு கட்டா விட்டால், நிறைய நஷ்டப்பட்டுப் போகும். நம் திரு மணத்தால், நம் இனிய தேனிலவால், இழப்பு ஏற்பட லாமா? ஏற்பட விடலாமா? அந்த வேலையெல்லாம் முடித்த பிறகு, பார்ப்போம்!'' என்று அவளது முக வாயை நிமிர்த்திக் கெஞ்சலும், குழைவுமாகக் கூறினான், தயானந்தன்.

இப்படிச் சொல்லும்போது, இல்லை நீதான் என்கூட வந்தே ஆக வேண்டும் என்று பிடிவாதமாக எப்படிக் கூறுவது?

''சரி!'' என்று தலையாட்டிய போதும், கணவன் பேச்சு வன்மையால், தன்னை வென்று விட்டான் என்றும் அவளுக்குத் தோன்றிற்று.

ஆனால், தோற்றது தானே என்ற போதும், அதிலும், தன் கணவன் கெட்டிக்காரன் என்ற பெருமிதமே ஏற்பட, புன்னகையோடு அவனைப் பார்த்தாள்.

''அப்புறம் இன்னொரு விஷயம். முடிந்தால், எப்போதாவது அப்பாவைச் சென்று பார். ஆனால், அங்கே செல்லுமுன் அப்பா இடத்து வாயில் காவ லாளியிடம் அல்லது காரியஸ்தரிடம் செய்தி சொல்லி அனுப்பி, அனுமதி கேட்டுக் கொண்டு, பிறகு போ!'' என்று அவன் கூற, சற்றுத் திகைத்த அவள் முகத்தில் தயக்கமும் பரவியது.

புரிந்துகொண்டு, ''பெரிதாக ஒன்றும் இல்லை, இந்து, அப்பா ஒரு மாதிரி, மானம் மரியாதை பார்க்கிறவர்.

மற்றவர் முன் படுத்திருக்கவே கஷ்டப்படுவார். துணி கிணி ஒதுங்கியிருந்தால், மிகவும் சங்கடப்படுவார். அவ ராகச் சட்டென்று கை, காலை அசைத்துச் சரிப்படுத்துவது சிரமம். முன்னெச்சரிக்கை கொடுத்து விட்டால், நர்சை அழைத்துச் சீர் பண்ண வைத்து, அதன் பிறகு, உள்ளே வரச் சொல்லுவார். இல்லை என்றால், கூசிக் கூசி, உடம்பைக் கெடுத்துக் கொள்வார். அத்தோடு, அவரது நிலைமையில், திடுமென அதிர விடக்கூடாது. அப்படித் துணி விலகிய நிலையில், புது மருமகளான உன்னைப் பார்த்தால், எப்படி உணர்வார், எண்ணிப் பார்!'' என்று விளக்கம் கொடுத்தான்.

''புரிகிறது!'' என்றாள் அவள்.

''அவரால் வேகமாகப் பேச முடியாது. நாக்கு இன்னமும் முழுமையாக அவருக்கு வசப்படவில்லை. கடும் பயிற்சியின் மூலம், இந்த அளவுக்குக் கொண்டு வந்திருக்கிறார். ஆனாலும், மற்றவர்களுக்குக் கேட்கப் போரடிக்குமோ என்று, சற்றுக் குறைவாகத்தான் பேசு வார். ஆனால், உன்னைப் பார்த்தால் மிகவும் மகிழ்ச்சி யடைவார், இந்து. அதனால், தினமும் ஒரு தரமாவது, அவரைக் கட்டாயமாகப் போய்ப் பார்த்துவிட்டு வா. என்னடா, போவாயல்லவா?'' என்று கேட்டு, தந்தையைப் பார்க்க அவள் செல்வதை உறுதிப் படுத்திக் கொண் டான் தயானந்தன்.

அவளும், மாமனார் கண்ணயர்கிற நேரம், குளிப்பது போன்ற மற்ற கடன்களுக்கான பொழுதுகளை எல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

புன்னகையோடு, அவள் கேட்ட விவரங்களைத் தெரிவித்தவன், அவளது கன்னத்தில் லேசாகத் தட்டி விட்டுக் கிளம்பிப் போனான்.

கணவனிடம் கேட்டறிந்த அளவில், உசிதமான நேரம் என்று இந்துமதி கருதிய பத்து மணியளவில், மாமனாரின் குடிலுக்கு, அவள் கிளம்பிச் சென்றாள்.

அனுமதி அறிந்து உள்ளே சென்ற அப்போதும், ஏதோ வெண்ணிறச் சீருடை மறு கதவின் வழியே அவசரமாக மறைவது போலத் தெரிந்தது.

என்னதான் குழப்பமாக இருந்தாலும், ''வாம்மா!'' என்று உற்சாகமாக வரவேற்ற மாமனாரைக் கவனியாது. இதைப் பார்க்க முடியாதே! அத்தோடு அந்த நர்சும்தான், என்ன தேவைக்காக, அவ்வளவு அவசரமாகப் போனாளோ, என்னவோ!

முறுவலித்தபடி, பாண்டுரங்கனின் அருகில் சென்றாள், இந்துமதி.

''ஒரு நல்ல தமிழ்ப் பேசும் பெண்ணுக்காகத்தான், இவ்வளவு காலம் காத்திருந்தேன். அந்த அலமாரியைத் திறந்து, அதில் 'பொன்னியின் செல்வன்' என்று ஐந்து புத்தகங்கள் இருக்கும், பார். அதில் முதல் பாகத்தை எடுத்து வாம்மா!'' என்று பணித்தார் அவர்.

தமிழின் சிறப்பு 'ழ'கரத்தில் அவர் குழறுவதைக் கவனி யாததுபோலப் புத்தகத்தை எடுக்கச் சென்றாள் அவள்.

எடுத்து வந்ததும், ''இந்தப் புத்தகத்தைத் தினமும் எனக்கு வாசித்துக் காட்ட உன்னால் முடியுமா, மரு மகளே? தினமும், ஓர் அரை மணி நேரம். அதைத் தூக்கிப் பிடித்துப் படிப்பதற்கு, எனக்குக் கண்ணும் சரியில்லை. கைக்கும் வலு இல்லை!'' என்று, வருத்தம் கலந்த சிறு முறுவலுடன் அவர் மெதுவாகக் கேட்கவும், அவளுக்கு உள்ளம் உருகி விட்டது.

கூடவே, நிம்மதியும் உண்டாயிற்று.

நோயாளிக்குப் பணிபுரிவது பற்றி எதுவும் தெரியாத போதும், அவளால், இந்த மாதிரியேனும் பெரியவருக்குப் பிடித்ததாய் எதுவோ செய்ய முடிகிறதே என்று மகிழ்ச்சி.

அவரது கட்டிலின் அருகே, ஒரு நாற்காலியைத் தூக்கிப் போட்டுக் கொண்டு, அதில் அமர்ந்து, கல்கி எழுதிய அந்த அரிய சரித்திர நாவலைப் படிக்கத் தொடங்கினாள்.

சற்று நேரத்தில், அவளுக்கே அந்த நாவல் நடந்த சோழர் காலத்துக்குப் போய் விட்ட உணர்வு வந்து விட்டது.

உற்சாகத்துடன் வாசித்துக் கொண்டே போனவள், பெரியவரின் 'ஊம்' கொட்டல் நின்று போனதையே, சற்றுப் பொறுத்துத்தான் கவனித்தாள்.

வசதியாகச் சாய்ந்திருந்த பாண்டுரங்கன், அப்படியே நன்றாகத் தூங்கி விட்டிருந்தார்.

தூக்கம்தானே?

ஒரு கணம் இந்துமதி மிரண்டு போனாள்.



## 12

இந்துமதி கதையை வாசிக்கத் தொடங்கிய போது, பாண்டுரங்கன் இருந்த அதே நிலை தான்.

ஆனால், ஊம் கொட்டிக் கொண்டிருந்தவர், அதையும் நிறுத்தி, அசையாமலும் இருக்கவும், அவளுக்கு நெஞ்சு படபடத்துப் போயிற்று. சமயத்தில், தாத்தா தர்மராஜனின் நினைவு வேறு வந்து,

அவளை நடுக்கியது. ஆனால், அந்த நினைவே அவளுக்கு ஒரு வகையில் திடமும் தந்தது.

பாண்டுரங்கனுக்கு உயிருக்கு அபாயம் என்று யாரும் சொல்லவில்லையே.

அச்சத்துடன் அவரைக் கவனித்துப் பார்த்து, ஓரளவு அமைதியோடு சுற்றும் முற்றும் பார்த்தால், நர்ஸ் கண்ணிலேயே படவில்லை.

சற்று யோசித்து, வெளியே சென்று, வாயிலை அடுத்த அறையில் கணக்கு வழக்குப் பார்த்துக் கொண்டிருந்த காரியஸ்தரை அழைத்து வந்தாள்.

"ஐயா தூங்குகிற நேரம்தான். நான் பார்த்துக் கொள்கிறேனம்மா! இனி, நீங்கள் வேண்டுமானால், உங்கள் இடத்துக்குக் கிளம்புங்கம்மா. நீங்கள் கேட் கிறப்போ, வேலுவைக் காரோடு உங்க கிட்ட அனுப் பணுமின்னு, சின்னவர் உத்தரவு. இப்பவே அனுப் பட்டுமாம்மா?"

நர்சைப் பற்றிக் கேட்க வாயெடுத்துவிட்டு, அதை விடுத்துக் கையில் இருந்த பொன்னியின் செல்வன் புத்தகத்தைக் காட்டி, "இதை இங்கே யாராவது படிப் பார்களா?" என்று விசாரித்தாள்.

"இல்லீங்கம்மா! நர்ஸ் பொண்ணு சிங்கப்பூரிலே பிறந்தது. நல்லா தமிழ் பேசினாலும், படிக்க வராது. செல்வம் தம்பி இங்கிலீஷ் மீடியம். நம்ப சின்னையா கட்டாயப்படுத்திச் சொல்லிக் கொடுத்ததிலே, கஷ்டப் பட்டு, எழுத்துக் கூட்டிப் படிக்கும். அக்காங்க ஊரிலே இல்லை. இருந்தாலும் இந்த மாதிரிப் புத்தகம் படிக்க மாட்டாங்கம்மா. அலமாரியிலே சும்மாதான் இருக் கும்," என்று காரியஸ்தர் விவரம் தந்தார்.

'அப்படியானால், நான் இந்தப் புத்தகத்தை எடுத்துப் போகிறேன். மாமா கேட்டால், மாலையில் வரும்போது, திரும்ப எடுத்து வருவதாகச் சொல்லி விடுங்கள்,'' என்று தன் குடிலுக்குச் செல்லக் கிளம்பினாள் அவள்.

''அம்மா, வெயிலாயிருச்சம்மா, காரிலேயே போங்க!'' என்று அவளுக்கு முன்னதாக வெளியே சென்று, காரை எடுக்கச் சொன்னார் அவர்.

வேலுவும், மரியாதையோடு, கார் கதவைத் திறந்து விட்டு, அவள் ஏறியதும் மூடி, குடிலுக்கு வந்ததும், மீண்டும் அவசரமாகக் கதவைத் திறந்து விட்டான்.

''நான் இங்கயே மரத்தடியிலே காரோட இருக் கிறேம்மா! எங்கேயும் போகணுமானா, மரியாப் பொண் ணுகிட்டே ஒரு வார்த்தை சொல்லியனுப்புங்கம்மா!'' என்று விட்டுப் போனான் அவன்.

அதற்குள் வீட்டைப் பளிங்காய்த் துடைத்து வைத்திருந் தாள், மரியா.

அவளைக் கண்டதும், சிரித்த முகமாக, ஓடி வந்து, ''ஐஸ் பெட்டியிலே ஆரஞ்சு ஜூஸ் இருக்குது. கொண் டாரவா?'' என்று கேட்டு, கொண்டு வந்து கொடுத் தாள்.

பணியாட்கள் எல்லோரும் தனக்காகப் பார்த்துப் பார்த்துச் செய்வது இந்துமதிக்குச் சந்தோஷமாக இருந்தது.

பணியாட்களின் செயலுக்காக மட்டும் அல்ல.

முதலாளியின் எண்ணத்தைத்தான் பணியாட்கள் எதிரொலிப்பார்கள்.

தயானந்தன் தன்னிடம் வைத்திருக்கும் அன்பை எண்ணி, அவள் அகமகிழ்ந்து போனாள்.

தம்பி மனைவியைப் பார்ப்பதற்காக என்று, மூன்றே தினங்களில் வெளிநாட்டில் இருந்து அழகான பரிசுப் பொருட்களுடன் வந்து சேர்ந்த இரு நாத்தனார்களும் கூட, அதே அகமகிழ்வைத்தான் அவளுக்கு ஏற்படுத்தினார்கள்.

என்னதான் செல்வத்துடைய அன்னை, சித்தி என்ற போதும், அவர்கள் தயானந்தனுடைய சகோதரிகள் என்பதால், தன் தாயார் போல நடு வயதுப் பெண் மணியரை இந்துமதி சற்றும் எதிர்பார்க்கவே இல்லை.

''நான் பிறக்கும்போது, பெரியக்காவுக்குப் பதினைந்து வயது முடிந்து விட்டதாம். சின்னக்காவுக்குப் பதின்மூன்று. செல்வத்துக்கும் எனக்கும் ஏழு வயது வித்தியாசம். இருவருக்குமே நாற்பது தாண்டி விட்டது. கிட்டத்தட்ட உன் அம்மா வயதுதானே. அதனால், தோற்றத்தைக் கண்டு திகைக்காதே. அருகில் வரும்போது, அதை முகத்திலும் காட்டி விடாதே!'' என்று, விமானத்தில் இருந்து இறங்கியவர்களை அடையாளம் காட்டிய தயானந்தன், மனைவியின் முகத்திலிருந்த திகைப்பைக் கண்டு விட்டு, விவரம் சொல்லி எச்சரித்தான்.

இந்துமதி அவசரமாக முக பாவத்தைச் சீர்ப்படுத்திக் கொண்டு, நாத்தனார்களின் வருகையைக் கவனித்தாள்.

இருவருமே, வெளியே வந்ததும், இந்துமதியை மாறி மாறி அணைத்து மகிழ்ந்தனர்.

''என்னடா தம்பி, இவ்வளவு சின்னப் பெண்ணாக இருக்கிறாளே! பள்ளிச் சிறுமி மாதிரி... அறியாக்

குழந்தை போல இருக்கிறாளே! செல்வம், நீது, ப்ரீதி மாதிரி, இனி இந்துமதியும் எங்களுக்கு ஒரு குழந்தை தான்!'' என்று, கிட்டத்தட்ட இதே பாவனையில், இரு நாத்தனார்களுமே சொல்லவும், இந்துவுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

அவர்களுடைய குழந்தையாக ஏற்பவர்கள், குறை தேட மாட்டார்கள் அல்லவா? அப்படியானால், உலகம் முழுவதிலும் இயல்பாகக் கருதப்படும் நாத்தனார் பிரச்சினை, அவளுக்கு இருக்கப் போவது இல்லை.

''பயணம் எப்படி இருந்தது? அங்கே சிங்கப்பூரில் எல்லோரும் சுகமா?'' என்று இந்துமதியும் உரிய விதமாக, அவர்களிடம் குசலம் விசாரித்தாள்.

அதையே, ''பாரேன், பெரிய மனுஷி மாதிரி விசாரிப் பதை! என்ன அழகாகப் பேசுகிறாள், என் தங்கம்!'' என்று தம்பி மனைவியின் முகவாயைத் தொட்டு, உதட்டில் ஒற்றிக் கொண்டாள் மூத்த நாத்தனார் கிருபாகரி.

''வீட்டுக்குப் போய் உடனே அவருக்கும், பிள்ளை களுக்கும் போன் செய்து, இந்துமதியின் அழகு, குணம் பற்றிச் சொல்ல வேண்டும். பிள்ளைகள் சந்தோஷப் படும்கள். நீதுதான் குதிப்பாள். 'என்னை மட்டும் ஆஸ்திரேலியாவில் கொண்டு தள்ளிவிட்டு, நீங்கள் எல்லோரும் அத்தையை முதலிலேயே பார்த்து விடுவீர் களே!' என்று அப்போதே புலம்பினாள். இப்போது புலம்பல் இன்னும் அதிகமாகும்!'' என்றாள் இளைய நாத்தனார் கருணாகரி.

''ஆஸ்திரேலியாவில், நீதுவுக்கு வசதியாக இருக் கிறதாமா?'' என்று உடனே கேட்டு, அதற்கும் பாராட்டைப் பெற்றுக் கொண்டாள் இந்துமதி.

வீடு செல்லும் வழியில், செல்வத்தைப் பற்றிப் பேச்சு வந்தது.

''எப்படியெப்படி முடியுமோ, அத்தனை வழிகளிலும், படிப்புக்கு டிமிக்கி கொடுக்கிறான்!'' என்றான் தயானந்தன்.

''ஏய், என்னடா நீ? அப்பா தன்னுடைய முதல் பேரனைப் பக்கத்திலேயே வைத்துப் பார்க்க ஆசைப் படுகிறார் என்று, அவனை இங்கே கூட்டி வந்து தங்க விட்டேன். அது அவன் படிப்பையல்லவா கெடுத்து விடும் போல இருக்கிறது!'' என்று கவலை காட்டினாள் கிருபாகரி.

''ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பே, அது பற்றி நான் உன்னிடம் எச்சரித்தேன்!'' என்று தயானந்தன் சொல்லும் போதே, குறுக்கிட்டு, ''ஆனால் படித்துப் பட்டம் வாங்கி அவன் என்ன செய்யப் போகிறான்? செல்வம் புத்தி சாலி என்று அப்பா அடிக்கடி சொல்வார். வாழ்க்கையில் முன்னுக்கு வர, அதுதான் தேவை. அவனைப் பெரிய ஆளாக்கிக் காட்டுறேன் என்பார். செல்லப் பேரனா யிற்றே. கட்டாயம் செய்வார். அப்புறம், அப்பா எப்படி இருக்கிறார்? அதை முதலில் சொல்லு,'' என்றாள் அவள்.

சிறு தயக்கத்தின் பின், ''ம், எப்போதும் போலத்தான். ஆனால், முன்னை விடக் கொஞ்சம் அமைதியாகத் தூங்குவதாகக் காரியஸ்தர் சொல்லுகிறார். டாக்டரும் கொஞ்சம் முன்னேற்றம்தான் என்கிறார். ஆனால, பழைய அப்பாவைப் பார்ப்பது பகல் கனவு என்பது, நாம் அறிந்ததுதானே, அக்கா?'' என்றான் தயானந்தன் வருத்தம் தொனித்த குரலில்.

இரு சகோதரிகளும், சற்று நேரம் தந்தையின் பழைய நிலை பற்றி, இந்துமதிக்கு எடுத்துச் சொல்லினர்.

பெண்களிடம் எவ்வளவு பிரியம், பேரன் பேத்திகளிடம் எவ்வளவு பாசம் என்பதெல்லாம் பல்வேறு சம்பவங்கள் மூலம் விலாவாரியாகத் தெரிவித்தார்கள்.

''மலரும் நினைவுகள்!'' என்ற தயானந்தனின் கேலியை, ''போடா! இதையெல்லாம், இந்துக் கண்ணுக்கு யார் சொல்லுவதாம்? பெண்டாட்டி பக்கத்தில் இருக்கும் போது, உனக்கு இரண்டு அக்காமார் இருப்பதே மறந்து போயிருக்கும். எங்கள் மக்களைப் பற்றியா சொல்லியிருக்கப் போகிறாய்?'' என்று பதில் கேலியில் ஒதுக்கி விட்டு, மீண்டும் பழைய கதைகளிலேயே மூழ்கினார்கள்.

சற்றே போரடித்த போதும், மரியாதையோடு இந்துமதி கேட்டுக் கொண்டிருக்க, நல்ல வேளையாக, அவர்களது வீடு இருந்த பகுதி கண்ணில் படலாயிற்று.

''அப்ப்... பா! இந்தக் கடல் காற்று உடம்பில் பட, அலைச் சத்தம் கேட்டதுமே என்ன சுகமாக இருக்கிறது! திருமணமாகி டெல்லிக்குப் போனபோது, இவை இல்லாமல் எவ்வளவு கஷ்டப்பட்டேன், தெரியுமா? ஆனால், உனக்கு நேர் விரோதமான நிலைமை. இல்லையா, இந்து? கோயமுத்தூரின் அமைதிக்கு, இந்த அலைச் சத்தம் காதைக் குடைவது போலக் கஷ்டமாக இருக்குமே!'' என்றாள் கிருபாகரி.

சற்று யோசித்துவிட்டு, ''சற்று வித்தியாசமாக இருந்ததே தவிரக் கஷ்டமாக இல்லை, அண்ணி!'' என்றாள் இந்துமதி.

''ஐயோ! பாரேன்டா! இங்கு வந்ததால், தான் கஷ்டப் பட்டதாகச் சொன்னால், நீ வருத்தப்படுவாயே என்று, எவ்வளவு சமாளிக்கிறாள், பார்த்தாயா! ஆனாலும், உனக்கு அதிருஷ்டம் அதிகம்தான்!'' என்று இரு நாத்தனார்களுமே, அவளைப் பாராட்டினர்.

தந்தையின் குடிலில் இறங்கிக் கொண்டு, ''அப் பாவைப் பார்த்துவிட்டு, உன் குடிலுக்கு வருகிறோம். இந்தும்மா, டீயும், சான்ட்விச்சும் தயார் பண்ணி, அங்கே கொண்டு வரச் சொல்லுகிறாயா? பேசிக் கொண்டே சாப்பிடலாம்!'' என்று கிருபாகரி கூறவும், 'சரி' என்று, இந்துமதி அவளது இடத்துக்குப் போனாள்.

அங்கே அவளாகச் செய்ய எதுவும் இல்லை. போனை எடுத்து, சமையல்காரனிடம் தேவையைச் சொன்ன தோடு வேலை முடிந்துவிட, இந்துமதியின் மனம் வழியில் நடந்த உரையாடலை எண்ணிப் பார்த்தது.

இந்தக் கடல் அலைகளின் ஒலி இல்லாதபோதும், கோவை நகரின் மற்ற ஓசைகள் நினைவு வந்தன. பஞ்சாலையின் சங்குகள், விரையும் போக்குவரத்து வாகனங்கள்...

மராட்டிய மாநிலம், தமிழ்நாட்டுக்கு வட மேற்கில் இருப்பது. அப்படியானால், கோவை இங்கிருந்து தென்கிழக்கில் இருக்கும்.

ஜன்னல் ஓரமாகப் போய்த் தென்கிழக்குத் திசையை நோக்கி நின்று கொண்டு, தூரத்து மலைகளின் வரி வடிவங்கள், கோவை மாநகர், அதில் அவள் வீடு, வீட்டில் தாயார், தேவகி அத்தை என்று மனதுள் உருவகப்படுத்திப் பார்த்தாள்.

என்னவோ, வருடிக் கொடுத்த மாதிரி, மனதுக்குச் சுகமாக இருந்தது.

"இது என்னடா, புது மாதிரித் தவம்!" என்று காதருகில் கணவன் குரல் கேட்கவும், மோன நிலை கலைந்து, திரும்பிப் பார்த்தாள்.

உதடுகளில் புன்னகையோடு என்ன என்பதுபோலப் புருவம் சுருக்கி வினவினான் தயானந்தன்.

மறைக்கத் தோன்றாமல், நடந்ததை அவள் கூறவும், அவனது முகம் கனிந்தது. "அம்மாவைப் பார்க்க வேண்டும் போல இருக்கிறதா?" என்று மென்குரலில் கேட்டபடி, அவளை மார்பில் சாய்த்து, மிருதுவாக வருடிக் கொடுத்தான் அவன்.

முகத்தை லேசாக அழுந்தப் பதித்து, "கொஞ்சம்..." என்றாள் இந்துமதி.

"கொஞ்ச நாள் கழித்துப் போகலாம். என்ன? இப்போது தான் இரண்டு அக்காவும் உன்னைப் பார்ப்பதற்காக வந்திருப்பதால்..." என்று அவன் கூறுகையில், அவசர மாக விலகி, "நானும் இப்போது உடனே போக வேண் டும் என்று சொல்லவில்லைப்பா! அண்ணி எல்லாம் எங்கே? வாசலிலா?" என்று எட்டிப் பார்த்தாள்.

அங்கே யாரும் இல்லாதிருக்கவும், "நீங்கள் கூட்டி வரவில்லையா?" என்று கணவனிடம் வினவினாள்.

"என்னவோ, அவரவர் பிரச்சினைகளை அப்பாவிடம் சொல்லிக் கொண்டு இருந்தார்கள்! உன்னைப் பற்றி, நம் திருமணம் பற்றியும் பேசுவார்கள்! தடையின்றி மனதில் இருப்பதைப் பேசட்டும் என்று பெருந்தன்மையாக விலகிக் கொள்கிற சாக்கில், அப்படியே உன்னைக்

கொஞ்சம் உரசலாம் என்று வந்தேன். வந்து பார்த்தால், காரைக்கால் அம்மையார் மாதிரி, மோன நிலையில் தவம் இருக்கிறாய், நீ. ஒரு கணம் சாமியாரிணி ஆகி விடுவாயோ என்று பயந்தே போனேன்ப்பா!'' என்றான் அவன்.

நீயாவது, சாமியார் ஆவதாவது என்று சிரித்தன அவனது கண்கள்.

ஒத்து நகைத்தவாறு, ''உரசவா வந்தீர்கள்? எங்கள் ஊரில், குட்டிச் சுவரைக் கண்டால், ஏதோ ஒன்று உரசும் என்பார்கள்!'' என்றாள் அவள்.

''என்னவோ, நீ குட்டிச் சுவர் என்று ஒத்துக் கொள்கிறாய்!''

''என்ன செய்வது? நீங்கள் அதுவாக இருக்கும் போது, உங்களுக்குப் பொருத்தமாகத்தானே, நானும் இருந்தாக வேண்டும்!'' என்று அவள் பதிலுக்குத் திருப்ப, ''திருப்பித் திருப்பி, என்னை அது என்கிறாயா? அது என்ன செய்யும் தெரியுமா? முன்னே போனால் கடிக்கும், பின்னே போனால்...'' என்று மிரட்டியபடி அவன் நெருங்க, அவள் சிரித்துக் கொண்டே, அவன் பிடியில் அகப்படாமல் ஓடுகையில், வாயிற்புறம் கார் நிற்பது தெரிந்தது.

மனைவியோடு சேர்ந்து தமக்கைகளை வரவேற்று விட்டு, ''சரிம்மா. இனி எனக்கு இங்கே என்ன வேலை? நீங்களானால் பெண்கள் பேச்சுப் பேசுவீர்கள். அதை வாய் பார்த்துக் கொண்டிருந்து போரடிப்பதை விட, அப்பா இருப்பிடம் போய், உபயோகமாக ஏதாவது செய்யலாம், வரட்டுமா?'' என்று, தயானந்தன் கிளம்பிச் சென்றான்.

“தம்பி, சிங்கப்பூரில் இருந்து ஒரு தைலம் கொண்டு வந்தோம். அதை அப்பாவுக்குப் பூசலாமா என்று டாக்டரிடம் கேட்டுக் கொண்டு, அப்புறம் பூசச் சொல்லு. தைலம் நர்சிடம் இருக்கிறது!” என்று தயானந்தனிடம் சொல்லியனுப்பினாள் கிருபாகரி.

நர்சைப் பற்றி இவர்களிடம் கேட்கலாமா என்று ஒரு கணம் யோசித்து விட்டு, அதை விருந்தோம்பலுக்கு அப்புறமாக வைத்துக் கொள்ளலாம் என்று இந்துமதி முடிவெடுத்தாள்.

“நீங்கள் சொன்னபடி சான்ட்விச் வந்திருக்கிறது, அண்ணி. சாப்பிடுங்கள்,” என்று சிறு தட்டுகளில் எடுத்து வைத்துக் கொடுத்து இரு நாத்தனார்களையும் உபசரித்தாள்.

கருணாகரி யோசனையாகத் தமக்கையை நோக்கவும், இந்துமதி குழம்பினாள். இவர்கள் கேட்டதைத்தானே வரவழைத்திருக்கிறாள்.

அவள் புரியாமல் பார்க்கையில், கிருபாகரி பேசினாள். “எனக்கும் அதே எண்ணம்தான், கருண். என்னதான் முதல் முறையாகப் பார்த்தாலும், இந்து என்ன அழகாய் உபசாரம் செய்கிறாள் பார். அந்தக் கோகிலாவை, உன் கணவருடைய ஏழைச் சொந்தம் என்று அப்பாவுக்கு நர்சாக வைத்தோம். அதிலும், வேலைக்காரிக்குப் பிறந்தவளைச் சொந்தமாக ஏற்று, இப்படி ஒரு பெரிய இடத்தில் வேலைக்குச் சேர்த்தோமே, ஒரு ஜூஸ் கொடுக்க மனம் வந்ததா, பார். நர்ஸ் பற்றி, உனக்கு என்ன தோன்றுகிறது, இந்தும்மா?” என்று அவள் கேட்கவும், இந்துமதிக்குச் சிரிப்பு வந்தது.

“நான் இதுவரை, அந்த நர்சின் முகத்தைப் பார்த்ததே இல்லையே, அண்ணி!” என்றாள் அவள். “நான் அங்கே செல்லும்போதெல்லாம், அவள் ஆளே காணாமல்

போய் விடுகிறாள். பின் கதவு வழியே மறைந்து கொண்டிருக்கும் அவளது சீருடையின் பின்புறம்தான் இரண்டு தரம் என் கண்ணில் பட்டது. ஆள்... ஊகூம்!'' என்று வேடிக்கையாக உதட்டைப் பிதுக்கினாள்.

''நிஜமாகவா?'' என்று வியந்துவிட்டு, ''அதுவும் சரிதான். அவளுக்கு உன்னைப் பார்க்க, எப்படிப் பிடிக்கும்?'' என்று கிருபாகரி யோசனையோடு கூற, இந்துமதி திகைத்தாள்.



13

அவளுடைய மாமனாருக்குக் கூட இருந்து பணிபுரியும் நர்ஸ்.

இந்த நாத்தனார்கள் சொல்லுகிறபடி பார்த்தால், இரண்டாவது நாத்தனார் வகையில் ஏதோ தூரத்துச் சொந்தம் என்றும் தெரிகிறது. இரத்த உறவுக்காரி கஷ்டப்படுகிறாளே என்று உதவியாக வேலை கொடுத்து, இங்கே தங்க வைத்திருக்கிறார்கள்.

அந்த நர்ஸ் கோகிலாவுக்கு வீட்டு மருமகளை ஏன் பிடிக்காமல் போகும்?

அதை விடவும், அதுதான் - அப்படிப் பிடிக்காமல் போவதுதான் - இயல்பு போல மூத்த நாத்தனார் பேசியது தான் இந்துமதிக்கு ஆச்சர்யமாக இருந்தது.

''ஏன் பிடிக்காது?'' என்று மனதில் நினைத்ததை, வாய் விட்டுக் கேட்டாள் அவள்.

''அது.. அது வேறு ஒன்றும் இல்லை, இந்தும்மா. நாங்கள் பெரியவர்கள். எதையும் சரிசரியென்று விட்டு விடுவோம். ஆனால், அவள் வேலையில் நீ ஏதாவது

குற்றம் கண்டு பிடித்தால்? கண்டுபிடித்து வேலையிலிருந்து போகச் சொல்லிவிட்டால்? அப்படி உன்னால் பிரச்சினை வந்துவிடுமோ என்ற பயம், கோகிலாவுக்கு இருக்கும் அல்லவா?''

ஆனால், இந்த விளக்கத்தில், இந்துமதிக்குத் திருப்தியில்லை. ''அப்படி என்ன, நீங்கள் பாராத குற்றத்தை, நான் கண்டுவிடப் போகிறேன்?'' என்று மீண்டும் கேட்டாள்.

சகோதரிகள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''என்னம்மா, நீ? சும்மா, துளைத்துக் கேட்கிறாயே! இருக்கட்டும். இப்போது, அப்பாவின் கட்டிலின் அடியில் அழுக்காக இருக்கிறது என்று வை. குனிந்து பார்த்துக் குற்றம் சொல்ல, எங்களால் முடியுமா? நீ அப்படியா... இலகுவாகக் குனிந்து கண்டு கொள்வாய். அப்பாவின் அறைச் சுத்தத்தின் மேற்பார்வை, கோகிலாதானே பார்க்க வேண்டும்! பார்க்கவில்லையே. இப்படி இருக்கிறதே என்று அவளை, நீ விரட்டி விட்டால்? இந்த மாதிரி, ஆயிரம் பயங்கள் இருக்கும் அல்லவா? நீயோ, கண்டதும் காதலில் மதி மயங்கி, காத்திருக்க முடியாமல், அக்காமாரைக் கூட அலட்சியப் படுத்தி உடனே மணந்து அழைத்து வரப்பட்டிருப்பவள். எனவே, நீ இட்டதுதானே சட்டமாக இருக்கும்? அந்தப் பயத்தில், கோகிலா ஒளிந்து ஓடியிருப்பாள்!'' என்று கோர்வையாக இயம்பினாள் கிருபாகரி.

''பாவம், கோகிலா! இல்லையாக்கா? ஆனால், கோகிலா தப்பே பண்ணினாலும், கண்டும் காணாமல்

விட்டு விடு, இந்து. இல்லையானால், எனக்கு என் புகுந்த வீட்டில் பிரச்சினை ஆகிவிடும். என் நாத்தனார் என்னை உண்டு இல்லை என்று ஆக்கி விடுவார்கள். இவள் அவர்கள் வழிச் சொந்தம்!'' என்று கருணாகரி பெருமூச்சு விட்டாள்.

நாத்தனார் என்பவள், உடன் பிறந்தானுடைய மனைவியை உண்டு இல்லை என்று ஆக்கி விடுவாளா?

நல்லவேளை, அவளுடைய நாத்தனார்கள் அப்படிப் பட்டவர்கள் அல்ல.

தேவகியின் நினைவு வர, ''என் அம்மாவுக்கும், உங்களைப் போலவே, நல்ல நாத்தனார், அண்ணி!'' என்று மகிழ்ச்சியுடன் அவர்களிடம் தெரிவித்தாள்.

இருவருக்கும் மிகுந்த மகிழ்ச்சி.

''என்னவோ, இதே நினைப்புடன், நீ எப்போதும் இருந்தால் சரிதான், தங்கம்!'' என்று சேலைத் தலைப் பால், கண்களைத் துடைத்துக் கொண்டாள் கிருபாகரி.

இந்துமதிக்காக இருவரும் வாங்கி வந்திருந்த பரிசுப் பொருட்களை எடுத்துக் காட்டினார்கள்.

எல்லாம், மிக அழகாக, விலை மதிப்பும் உடையவை களாக இருந்தன.

கிரிஸ்டலில் பெரிய புத்தர் சிலை. பின்னிப் பிணைந்த டால்ஃபின்கள், வேலைப்பாடு மிகுந்த நகைகள் என்று, இரு நாத்தனார்களும் தேடிப் பிடித்து வாங்கி வந்திருந்தனர்.

கண்ணால் பார்த்துக்கூட இராத தனக்காக, இந்த இரு பெண்மணிகளும் அலைந்து திரிந்து வாங்கி வந்திருப் பது, இந்துவின் மனதை நெகிழ வைத்தது.

இத்தனைக்கும், கோகிலா எண்ணக் கூடும் என்று அவர்களே சொன்ன மாதிரி, அவர்கள் வருகைக்காகக் காத்திராமல், நடந்து விட்ட திருமணம்! அவர்களை அட்சியப்படுத்தி விட்டதாக ஆத்திரப்படுவது கூட நியாயமே! ஆனால், அதைப் பொருட்படுத்தாமல், என்னமாய் அன்பு காட்டுகிறார்கள்!

நகைகளை என்ன மாதிரி உடையோடு அணிவது, கிரிஸ்டல் பொருட்களை எங்கே வைப்பது என்று சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்த பிறகு, பெரியவர்கள் இருவரும், அவரவர் இடங்களுக்குக் கிளம்பினர்.

பாண்டுரங்கன், தன்னுடைய மூன்று மக்களுக்குமே, தனது அந்த விசாலமான இடத்தில், அழகிய சிறு வீடுகளைக் கட்டி வைத்திருந்தார். பிள்ளைகள் அங்கே இல்லாத போதும், அவற்றை நன்கு பராமரிக்க ஏற்பாடும் செய்திருந்தார்.

நாத்தனார்களோடு சேர்ந்து, இந்துவும் எழுந்தாள்.

''நானும், அப்படியே போய், மாமாவுக்குப் பொன்னி யின் செல்வன் படித்துக் காட்டப் போகிறேன்,'' என்றுவிட்டு, டெலிஃபோனை எடுத்து, ''மாமாவுக்குக் கதை படிக்க, இதோ கிளம்பிக் கொண்டிருப்பதாக மாமாவிடம் சொல்லி விடுங்கள்!'' என்று ரிசீவரைக் கீழே வைத்தவள், மற்ற இருவரும் விசித்திரமாக நோக்கவும், ''என்ன?'' என்று கேட்டாள்.

''இல்லை... அதுதான், நேரிலேயே போகப் போகி றாயே, அதற்கு மேல், இந்த அறிவிப்பு எதற்காக?'' என்று கேட்டனர்.

இப்போது, ஆச்சரியப் படுவது இந்துமதியின் முறையாயிற்று.

அவர்களுடைய தந்தையைப் பார்க்க, முன்னறிவிப் போடுதான் செல்ல வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியாமலா இருக்கும்?

''என்ன அண்ணி, மாமாவுக்கு அதிர்ச்சி கூடாது. அவரது துணிமணி ஏதாவது கலைந்து கிடக்கும்போது திடுமெனப் போய்விட்டால், மனது கஷ்டப்பட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்வார் என்பதால், முன்கூட் டிச் சொல்லாமல் யாரும் போவதில்லை என்று தயா சொன்னாரே! உங்களுக்கு மறந்து விட்டதா?'' என்று வியப்புடன் வினவினாள் அவள்.

''என்னது?'' என்றனர் இருவரும் ஒரே குரலில்.

உடனேயே, ''ஓ, அது.. அதுவா? ஆ...மாம், ஆமாம். அப்பாவுக்கு அதிர்ச்சி கூடாதில்லை? திடு மெனப் போனால் கஷ்டம். ஆமாம், அதற்காகத்தான். அதற்காகத்தான்! மறந்தே போய்விட்டதே! நினைவே இல்லை...!'' என்று மாற்றி மாற்றிச் சொல்லித் தடுமாறினார்கள்.

''உங்களுக்கு அதிக அலைச்சல், அண்ணி! உலகின் அந்தக் கோடியான ஆஸ்திரேலியா வரை போய் அலைந்து விட்டு வந்திருக்கிறீர்கள். மனதிலும் எத் தனையோ குழப்பங்கள். குழப்பத்துக்கு, எங்கள் திருமணமே போதுமே! இது மறந்ததில் ஆச்சரியம் என்ன? இதற்குப் போய் அலட்டிக் கொள்ளாதீர்கள்,'' என்று அவர்களது மறதிக்குக் காரணம் கண்டு பிடித்துக் கூறி, இந்துமதி அவர்களைத் தேற்றினாள்.

அரைப் பார்வையாய் ஒருவரை ஒருவர் பார்த்து விட்டு, ''அதில்லையம்மா! இப்போதுகூட, இதை

மறந்து, அப்பாவிடம் நேரே போய் விட்டோமே என்று, அதுதான் மனதைக் கலங்கடிக்கிறது. நல்லவேளை; அப்பாவுக்கு ஒன்றும் ஆகவில்லை! அதிர்ச்சியில் ஏதாவது ஆகியிருந்தால்? அதை நினைக்கவே நடுக்கமாக இருக்கிறது. ஏதோ, கடவுள் அருள். ஆச்சரியகரமாக, அப்பாவுக்கு ஒன்றுமே ஆகவில்லை!'' என்றாள் கிருபாகரி.

''ஆமாம், நல்ல வேளை! உலக அதிசயங்களில் ஒன்று போல, அப்பாவுக்குக் கெட்டதாக ஒன்றும் நடக்கவில்லை!'' என்றாள் கருணாகரியும்.

''மடத்தனமாக நடந்து கொண்டோமே!'' என்று இருவரும் சேர்ந்து வருத்தமும் பட்டார்கள்.

''இவ்வளவு வருத்தப் படாதீர்கள், அண்ணி!'' என்று அவர்களைத் தேற்றினாள் இந்துமதி. ''எப்படியும் நீங்கள் மும்பைக்கு வருவது மாமாவுக்குத் தெரியும். விமானம் வருகிற நேரம், வீட்டுக்கு வந்து சேரக்கூடிய சமயம் எல்லாம் மாமாவுக்குத் தெரியும். வந்ததும், வராததுமாக, அப்பாவைப் பார்க்க ஓடுவீர்கள் என்றும், உங்கள் பாசம் பற்றிப் பெற்றவரான அவருக்குத் தெரியாதா, என்ன? அதனால், திடீரென்று அவர் அதிர வாய்ப்பே இல்லை. அதனால், என்ன நேர்ந்திருக்குமோ, ஏதோ என்று அனாவசியமாக மனதைப் போட்டு அலட்டிக் கொள்ளாதீர்கள்!'' என்று அறிவுறுத்தி, ஆறுதல் கூறினாள்.

சற்றுத் திகைப்புடன் அவளை நோக்கிவிட்டு, தலையை ஆட்டி, ''நீ சொல்வது சரிதான். நீ கெட்டிக்காரி என்று செல்வம் சொன்னதும் சரியே!'' என்றாள் கிருபாகரி.

''ரொம்பவே!'' என்று கருணாகரியும் அதை ஒத்துக் கொள்ள, இந்துமதிக்கும் ரொம்பவே சந்தோஷமாக இருந்தது.

கொஞ்சம் மக்கு என்று அவள் மதிப்பிட்ட செல் வத்துக்கே, அவள் புத்திசாலி என்று தெரிந்திருக்கிறதே!

ஒருவேளை, அவனும் மக்கு இல்லை போலும்.

மாமனாருக்குப் படித்துக் காட்டப் புத்தகத்தை எடுத்தபோது, அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, ஏதோ சொல்ல வாயெடுத்து விட்டுத் தலையை லேசாக அசைத்து, ''தயா கம்ப்யூட்டர் அறையில் இருக்கிறான். வெளியே கிளம்பும் முன் என்னிடம் பேசிவிட்டுப் போக வேண்டும் என்று சொல்லிவிட்டு வாம்மா!'' என்றார் பாண்டுரங்கன். ''நான் தூங்கி விட்டாலும், எழுப்பியேனும் பேசிவிட்டுப் போகச் சொல்லு.''

பாண்டுரங்கனின் குடிலில், மாடியில் இரண்டு அறைகள் கட்டப்பட்டு, மீதி மொட்டை மாடியாக விடப் பட்டிருந்தது. ஒன்றில், செல்வம் தங்கியிருந்தான். அடுத்த அறையில் ஒரு கம்ப்யூட்டர் இருந்ததும், தொழில் தொடர்பான வேலைகளைத் தயானந்தன், அவ்வப்போது அங்கிருந்து கவனிப்பதும், அவள் அறிந்ததே.

''சரி மாமா!'' என்று உடனே சென்று, கணவனிடம் விவரத்தைக் கூறிவிட்டுத் திரும்பும்போது, முதல் முதலாக நர்ஸ் கோகிலாவின் முகத்தை, இந்துமதி கண்டாள்.

அப்போது, கோகிலா மாடிக்கு ஏறி வந்து கொண்டிருந்தாள்.

அவள் கையில் வைத்திருந்த சிறு தட்டில், கமகம வென்ற ஏலக்காய் மணத்தை ஆவியோடு சேர்த்து வெளியிட்டபடி, சூடான டீயுடன் கப் ஒன்று இருந்தது.

செல்வம் வகுப்புக்குச் சென்றிருந்ததால், அப்போதைக்கு மாடியில் இருந்தது தயானந்தன் மட்டுமே. அதனால், அவனுக்குத்தான் டீ கொண்டு போகப்படுகிறது என்று புரிந்தது.

வேலை நடுவே, எப்போதேனும் ஒரு டீ குடிப்பது, தயானந்தனுக்குப் பழக்கம்தான்.

அவனுக்காக வந்த டீயை, அங்கே இருந்த கோகிலா கொண்டு வருவதிலும் வியப்படைய எதுவும் இருப்ப தாக இந்துமதிக்குத் தோன்றவில்லை.

யாரோ ஒரு நர்ஸ் என்றால், இந்த மாதிரிச் சின்ன, சில்லறை வேலையெல்லாம் செய்வாளோ, என்னவோ? ஆனால், ஒரு வகையில் உறவுக்காரியும் என்கையில், கோகிலாவின் இந்த உதவி, இந்துமதிக்கு இயல்பாகவே தோன்றிற்று.

ஆனால், இந்துமதியைக் கண்டதும், கோகிலாவின் முகம் போன போக்குதான், அவளுக்கு விசித்திரமாக இருந்தது.

என்னவோ, பேயைக் கண்டது போலத் திகைத்து நின்று விட்டாள் அவள்.

பாண்டுரங்கனுக்குத் தொந்தரவு இல்லாமல், மாடிக் குப் போய் வருவதற்காக, மாடிப்படி வெளிப்புறமாக வைக்கப்பட்டிருந்தது.

எனவே, இந்து மாடிக்குச் சென்றதே, கோகிலா வுக்குத் தெரியாது இருந்திருக்கலாம். திடுமெனப் பார்க்க

நேர்ந்தது திகைப்பாகவும் இருக்கலாம். ஆனால், அவளைப் பார்ப்பதே பயங்கரம் போல அவள் விழித்ததைத்தான், இந்துவால் புரிந்து கொள்ள முடியவில்லை.

தயானந்தனுக்குத் திருமணமாகி, அவனுடைய மனைவியாக ஒருத்தி இங்கே வந்திருப்பது, அவளுக்குத் தெரியும்தானே? என்றேனும் ஒரு நாள் அந்த மனைவியை, அவள் சந்தித்துத்தானே ஆக வேண்டும்?

அது இவ்வளவு அதிர்ச்சியாக இருப்பானேன்?

மனதில் எண்ணம் ஓடும்போதே, இந்துமதிக்கு, அந்தக் கேள்விக்குரிய பதிலும் தோன்றி விட்டது.

கோகிலாவுக்கு வெறும் அதிர்ச்சியல்ல. பயம். அண்ணி கிருபாகரி சொன்னதுபோல, இந்தப் புதியவள் என்ன குற்றம் கண்டு பிடிப்பாளோ? இவளால் என்ன துன்பம் நேர்ந்து விடுமோ என்ற பயம்.

வேலையே போய்விட்டால்?

ஏழைப் பெண்ணாயிற்றே, பாவம் என்று இந்துவின் மனம் உடனே இரங்கியது.

அந்தப் பெண்ணின் அனாவசியப் பயத்தை அகற்றும் எண்ணம் கொண்டு, "மிகவும் நல்ல நர்ஸ் என்று எல்லோரும் சொல்லுகிற கோகிலா, நீங்கள்தான் என்று நினைக்கிறேன். இப்படித் திறமையும் குணமும் ஒருங்கே அமைந்த ஒரு நர்ஸ் மாமாவுக்குக் கிடைத்தது. எங்கள் அதிருஷ்டம்! போங்கள். டீ ஆறுமுன் அவருக்குக் கொண்டு போய்க் கொடுங்கள்!" என்றுரைத்தபடியே வழி விலகி நின்றாள்.

அப்போதும் அந்தப் பெண்ணின் முகம் மலர்ந்த பாடில்லை.

புரியாத பாவனையில், இந்துமதியைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே, வேகமாகப் படியேறிச் சென்றாள் அவள்.

பாவம், ரொம்பவே பயந்திருப்பாள் போல என்று எண்ணமிட்டபடியே, மாமனாரின் அறைக்குச் சென்றாள் இந்துமதி.



## 14

அடுத்த சில தினங்கள், இந்துமதிக்குப் பொழுது நன்றாகவே கழிந்தது எனலாம்.

காலையில் தயானந்தன் வேலைக்கெனக் கிளம்பி, மும்பையை நோக்கிச் செல்லும் வரை, அவள் தன் குடிலில் இருப்பது.

தேவகியின் வளர்ப்பினால், தன் வரையில் அவள் பல ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடித்துப் பழகியிருந்ததால், பயன்படுத்திய பொருட்களை ஒதுக்கி, அதனதன் இடத்தில் வைத்து, அழுக்குத் துணி, பொருட்களைச் சுத்தப்படுத்த எடுத்துக் கொடுத்து, இப்படிச் சில வேலைகளை முடித்துவிட்டு, பெரிய நாத்தனாரின் குடிலுக்குக் கிளம்பிப் போவாள்.

அதற்குள், கிருபாகரி இரண்டு தரமேனும் போன் செய்து விடுவாள்.

தம்பியுடைய அழகான மனைவியை இன்னமும் காணோமே என்று கவலையாக இருக்கிறதாம்! உடம்புக்கு ஒன்றும் இல்லையே? கிளம்பி விட்டாள்தானே?

''இதோ வந்துவிட்டேன்!'' என்று, சிரித்துக் கொண்டே ரிசீவரை வைத்துவிட்டு, வேகமாகக் கிளம்பிப் போவாள் இந்துமதி.

அங்கே போனால், அவளுக்கு என்னென்ன பிடிக்கும் என்று கேட்டு, நாத்தனார்கள் தெரிந்து கொண்ட தின் பண்டங்களில், இரண்டேனும் இருக்கும்.

சமையல்காரனிடம் சொல்லிச் செய்ய வைத்ததுதான் என்றாலும், அதற்கும் மனம் இருக்க வேண்டுமே! தம்பி மனைவி என்றால், தட்டி விடுவதுதானே, பலருக்குப் பழக்கமாக இருக்கிறது. உறவு என்பது, கண்ணாடி மாதிரி, அன்பைக் காட்டினால், அன்பையே திருப்பித் தரும் என்று, நல்ல வேளையாக இந்துவுடைய நாத்த னார்களுக்குப் புரிந்திருந்ததால், அவளும் சந்தோஷ மாகவே அவர்களை நாடிச் சென்றாள்.

ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிக் கல்லூரிக்குச் செல்லாமல், செல்வம் வீட்டில் இருந்தால், நால்வருமாகச் சீட்டு, கேரம் என்று ஏதாவது விளையாடுவார்கள்.

இடையிடையே எதையாவது கொறித்தபடி பேசு வதும் உண்டு.

அண்ணிமார் இருவரும் அவரவர் புகுந்த வீட்டைப் பற்றிச் சொல்லுகையில், இந்துமதி, அவளது பிறந்த வீட்டைப் பற்றி, அவர்கள் கேட்கக் கேட்கச் சொல்லுவாள்.

அப்படிப் பேசும்போது, தாயை, தேவகியைப் பார்க்கும் ஆசை வரும்.

அதை அவள் முகத்தில் கண்டு விட்டு, ''வேண்டு மானால், ஊருக்கு ஒரு தரம் போய் விட்டு வாயேன். பாவம்! உன் அம்மாவுக்கும் உன்னைப் பார்க்க ஆசையாக இருக்கும்!'' என்றாள் கிருபாகரி.

அது பற்றிக் கணவனிடம் குறிப்பிட்டபோது, ''என்னைத் தனியாகத் தவிக்க விட்டு விட்டுப்

போவாயா? ம்... ம்?'' என்று அவன் கொஞ்சவும், அதற்கு மேல் அந்த நினைப்பே மறந்து போனது.

பேச்சுவாக்கில், சுரேசனைப் பற்றி ஒரு தரம் இந்து குறிப்பிட்டாள்.

அதை நினைவு வைத்து, ''அந்த வில்லன்... அதாம்மா, அந்த சுரேசன் அப்புறம் வீட்டுக்கு வரவே இல்லையா? பிரச்சினை கிளப்பாமல், அவன் எப்படி ஒதுங்கினான்?'' என்று கருணாகரி கேட்டாள்.

எண்ணிப் பார்க்கையில், மனதுக்குக் கொஞ்சம் வருத்த மாகத்தான் இருந்தது. குன்றல். தன்னை விடப் பணத்தைப் பெரிதாக எண்ணி, ஒருவன் பேசியிருந்த திருமணத்தையே நிறுத்தினான் என்பது, அப்படி ஒன்றும் பெருமைக்குரிய விஷயம் அல்லவே!

சிறு வெறுப்புடன் உச்சுக் கொட்டி, ''பணத்தைப் பெரிதாக நினைத்தவர், அண்ணி! அந்தப் பணத்துக்கு வழியில்லாதபோது, எப்படி வருவார்?'' என்றாள் இந்துமதி.

''அப்படிப் பார்த்தால், அந்த இரங்கல் கூட்டத் துக்குப் பிறகு, பணம் வருவதுதான் உறுதியாகி விட் டதே! அப்புறமும் வரவில்லையா என்று கேட்டேன்,'' என்று, பிறகும், ''எப்படிச் சும்மா இருக்க முடியும்?'' என்று கேட்டாள்.

''வாய்ப்பே இல்லை, அண்ணி. நின்று நிதானமாகத் திருமணத்தை நடத்தத்தான், உங்கள் தம்பிக்கு அவகாசமே இல்லையே! அவசர அவசரமாக, எப்படி ஐந்தே நாட்களில் திருமணத்தை நடத்தினார் தெரியுமா?'' என்றாள் இந்துமதி.

''அவகாசம் இல்லாததால், திருமணத்தை அவசர மாக மாமா நடத்தவில்லை. உண்மைக் காரணம் எனக்குத் தெரியுமாக்கும்! நான்தான், தாத்தா மிரட்டி யதைக் கேட்டுக் கொண்டே இருந்தேனே!'' என்றான் செல்வம்.

''ஏய், உனக்கு இதெல்லாம் என்னடா தெரியும், உளறுவாய்! படிக்க என்று, உன்னை இங்கே தாத்தாவிடம் விட்டது பெரிய தப்பு என்று இப்போது எனக்கு நிச்சயமாகத் தோன்றுகிறது. எதையாவது கேட்டுக் கொண்டு, என்னவாவது உளறுவது. வாயை மூடிக் கொண்டு சும்மாயிரு!'' என்று மகனை அதட்டினாள் தாயார்.

''நான் ஒன்றும் உளறவில்லை. உடனே ஒரு பெரிய இடத்துப் பெண்ணை மணந்து, ஒரு வருஷத்துக்குள் பேரக் குழந்தையைப் பெற்றுக் கொடுக்கவில்லை என்றால், சொத்தில் ஒரு பைசா இல்லாமல் பண்ணி விடுவேன் என்று மாமாவைத் தாத்தா மிரட்டியதை, நான் என் காதாலேயே கேட்டேன் அம்மா. நிஜம். காட் பிராமிஸ்!'' என்று சத்தியம் செய்தான் செல்வம்.

''என்னக்கா, இவன் சத்தியமே பண்ணுகிறான். நீ இன்னமும் உளறுகிறான் என்றே சொல்லப் போகி றாயா? முகத்தை உம்மென்று வைத்திருக்கிறாயே!'' என்று, அக்கா மகனுக்கு வக்காலத்து வாங்கினாள் கருணாகரி.

''ச்சு.. அப்படியில்லை... சீக்கிரம் பேரக் குழந்தை களைப் பெற்றுக் கொடு என்று, அவர்கள்தான் குடும்ப வாரிசு, என்கிற பத்தாம் பசலிக் கொள்கை அப்பா

வுக்கும் உண்டு என்பதும், நம் எல்லோருக்கும் தெரிந் ததுதான்! ஆனால் இந்தப் பெரிய இடத்துப் பெண்.. என்கிற இடம்தான் எனக்கு இடிக்கிறது. இப்போது, நம் இந்துவைத் 'தர்மா' குடும்பத்துப் பெண் என்று நினைக்கவும் அடுத்தவருக்கு அறிமுகம் செய்விக்கவும் நமக்கும் பெருமையாகத்தான் இருக்கிறது. ஆனால், அப்பா சொன்ன விதத்தைப் பார்த்தால், பெரிய இடம் அல்லாத எவளையோ மருமகளாகக் கொண்டு வந்து விடாதே என்று மறைமுகமாகத் தயாவை எச்சரிப்பது போல இல்லை? அப்படி யார் அவனுக்குப் பழக்கம் என்று... அதுதான் யோசித்துப் பார்த்தேன். ஆனால் தம்பியை... தம்பியைப் பற்றித் தப்பாக நான் சொல்ல முடியாது, இந்தும்மா! அவனைப் போலப் பிரியமான தம்பி கிடைக்க நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அவன் எங்களுக்கு உயிர் மாதிரி!'' என்றாள் பெரியவள் உணர்ச்சி வசப்பட்ட குரலில்.

''அவர் நல்லவர் என்று எனக்குத் தெரியும், அண்ணி. அழிந்து போய்க் கொண்டிருந்த எங்கள் தொழில் இப்போது நன்கு நடப்பது, அவரது தயவால்தானே? அம்மாவும் அத்தையும் நிம்மதியாகவும் கௌரவமாகவும் வாழ வழி செய்திருக்கிறாரே! அதைவிடத் தன் கடைசி நாட்களில் என் தாத்தா மன அமைதியோடு இருக்க முடிந்ததே தயாவால்தானே? அவர் என் கணவர் எனும்போது, நிச்சயமாக நான் கொடுத்து வைத்தவள் தான், அண்ணி!'' என்று இந்துமதியும் நெகிழ்ந்து கூறினாள்.

தொண்டையைச் செருமிக் கொண்டு, ''நீ மட்டும் கொடுத்து வைத்தவள் என்று இல்லை, இந்தும்மா!

அன்றலர்ந்த புதுப் பூ மாதிரி இருக்கிறாய், நீ கிடைப்பதற்கு அவனும்தான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அத்தோடு பெரிய இடத்துப் பெண் வேறு. சொல்லப் போனால், இருவருமே, ஒருவருக்கொருவர் பொருத்தமான ஜோடி!'' என்று கிருபாகரி கூற, வழக்கம் போல், அவளுடைய தங்கை அதை ஆமோதித்தாள்.

சூழ்நிலைக்குப் பொருத்தமே இல்லாமல், செல்வம் திடுமெனச் சிரித்தான்.

''ஏய், என்னடா சும்மா சிரிப்பு?'' என்று கிருபாகரி அதட்டிக் கேட்டாள்.

சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''அதில்லை, அம்மா. தயாவால் தயாவால் என்று இந்து சொன்னதைக் கேட்டதும், 'வால், வால்' என்று மாமாவைச் சொல்லுவதைப் போலச் சிரிப்பாக வந்து விட்டது!'' என்றான் செல்வம்.

வாயைப் பார்! உண்மையில் இந்துவுக்கு ரசிக்கவில்லைதான். அவளுடைய கம்பீரமான கணவனை ஒரு வாலோடு, அது சிங்கத்தின் வாலாகவே இருக்கட்டுமே, அதனோடு விளையாட்டாக ஒப்பிடக் கூட, எப்படி முடியும்?

ஆனால், மன்னிப்பு, அது இதென்று, அதைப் பெரிது படுத்தவும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

எனவே, ''அவன் வேடிக்கையாக ஏதோ பேசியது. அதைப் போய்ப் பெரிதாக எடுத்துக் கொள்வானேன், அண்ணி. விளையாட்டுதானே?'' என்றாள் சமாதானமாக.

''என்னவோ அம்மா, நீயும் அவனும் சினேகிதர்களாமே! உங்களுக்குள், என்ன வேண்டுமானாலும்

கேலி, கிண்டல் பண்ணலாமே! இவன்தான் இப்படிச் சொல்லுகிறான் என்றால், நீயும் அதே போலப் பேசுகி றாயே! எப்படியோ போங்கள்!'' என்று கிருபாகரியும் அந்தப் பேச்சை அத்தோடு விட்டாள்.

மறுநாள் காலையில் தயானந்தன் கிளம்பும்போது, அவனோடு கூடவே தன் குடிலுக்கு வந்து விடுமாறு, கிருபாகரி தம்பி மனைவியைக் கூப்பிட்டாள்.

''இன்றைக்கு எங்கள் ஊர்க் குழிப் பணியாரம் செய்யச் சொல்லியிருந்தேன். சமையல்காரன் காலையி லேயே செய்து விட்டான் போல. தாயம்மா கொண்டு வந்து வைத்து விட்டுப் போனாள். சூடாகச் சாப்பிட மிகவும் நன்றாக இருக்கும். தம்பிக்கும் பிடிக்கும். அதனால்தான், தம்பியோடு சேர்த்து வரச் சொன்னேன். உன்னைக் கொண்டு வந்து விடுகிறபோது, அவனுக்கும் இரண்டு கொடுக்கலாமே!''

தயானந்தனுக்குப் பணியாரம் தின்ன அவ்வளவாக விருப்பம் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனாலும், தமக்கைகள் வற்புறுத்தி உபசாரம் செய்யவே, ஒரு பணியாரத்தைப் பிட்டு வாயில் போட்டுக் கொண்டான்.

உண்டபடியே, ''என்னடா, நம் பெண்டாட்டி கொஞ்சம் உப்பினாற் போலத் தெரிகிறதே, ஏன் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். இப்படித் தினமும் நடக்கும் உபசாரம் என்று இப்போதல்லவா புரிகிறது. என்னக்கா, இது மெய்யாகவே உபசாரம்தானா? அல்லது, இந்துவின் பொய்யோ எனும் இடையே இல்லாமலே ஆக்கிவிடச் செய்யும் சதியா என்று இப்போது, எனக்குச் சந்தேகமாக இருக்கிறதே!

ஜாக்கிரதை, இந்து. என்னதான் அன்பு காட்டினாலும் இவர்கள் உன் நாத்தனார்கள். நினைவிருக்கட்டும்!'' என்று எச்சரித்தான் அவன்.

''என் அன்பான நாத்தனார்களைப் பற்றி, உங்களைவிட, எனக்கு நன்றாகத் தெரியுமாக்கும்!'' என்று சிரித்தவாறே பதில் கொடுத்தாள் இந்துமதி.

''அப்படிச் சொல்லடி, என் கண்ணு. ஆசையாகப் பணியாரத்தைக் கொடுத்தால், ரசித்துத் தின்றுவிட்டுப் போகாமல், கலகமூட்டுவதைப் பாரேன். நன்றியே கிடையாது!'' என்று தம்பியின் கேலிக் குரலிலேயே, தானும் பதில் கொடுத்தாள் கிருபாகரி.

''சரி சரி. பெண்கள் ஒன்று சேர்ந்து விட்டீர்கள். இனி என் பேச்சு எடுபடாது. ஆனால், என் மனைவியைப் பீப்பாயாக ஆக்கி விடாதீர்கள். அவ்வளவுதான், நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்வது!'' என்று கெஞ்சல் குரலி லேயே, தயானந்தன் கேட்டுக் கொள்ள, எல்லோரும் சிரித்தனர்.

சில நிமிஷங்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்து விட்டுத் தயானந்தன் கிளம்பித் தந்தையின் குடிலுக்குச் சென்றான்.

அங்கிருந்து, அப்படியே வேலையைப் பார்க்க, மும்பைக்குச் சென்று விடுவான்.

அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த இந்து வுக்கு, இனிக் கணவனை இரவுதான் பார்க்க முடியும் என்று எண்ணியபோது, தன்னையறியாமல் பெருமூச்சு வந்தது.

''என்ன, தம்பி இனி இரவுதானே வருவான் என்றிருக்கிறதா? என்ன செய்வது? நம் பெண்கள் நிலை

அப்படித்தான். சூரிய காந்திப் பூ மாதிரி, கணவனுக் காகவே வாழ்வது என்று ஆகி விடுகிறது. ஆனால், நம் ஆண்களுக்கோ, கண் மறைந்தால், நம் நினைவே மறந்து போகிறது!'' என்று பரிவாகக் கூறினாள் கிருபாகரி.

தயா மறக்க மாட்டார் என்று சொல்ல வாயெடுத்து விட்டுச் சும்மா இருந்தாள் இந்துமதி.

ஆனால் அவள் முகத்தில் மறுப்பைக் கண்டு, ''வேலை இருக்கிறதல்லவா, இந்து? அதை முழுக் கவனத்துடன் பார்த்தாக வேண்டுமே. வீட்டையே நினைத்துக் கொண்டிருந்தால் தொழில் என்ன ஆகும்? அதற்காகச் சொன்னேன்!'' என்று சமாதானப்படுத்தி விட்டு, ''இன்று என்ன விளையாடலாம்? அல்லது சும்மா பேசிக் கொண்டிருப்போமா?'' என்று கேட்டாள் பெரியவள்.

பேச்சினூடே, ''இந்தக் குடில்களின் அமைப்பைக் கவனித்திருக்கிறாயா, இந்து? ஒவ்வொரு ஜன்னல் வழியே பார்க்கும் போதும், ஒவ்வொரு விதமான அழகிய காட்சி தெரியும். மேற்கே அரபிக் கடல் காட்சிகள் தெரியும். வடமேற்கு, தென்மேற்கு எல்லாம் அதுதான். கிழக்குத் திசையைப் பார்த்தாலும், பொன் மணலின் நடுவே, இரு பக்கங்களிலும் பசிய மரங்களோடு, இந்தக் கறுப்புத் தார் போட்ட சாலையே தனி அழகு, பாரேன்!'' என்று காட்டினாள்.

அவள் காட்டியதைப் பார்ப்பதற்காக இந்துமதி எழுந்து வந்து ஜன்னலின் வழியே வெளியே நோக்கிய போது, சட்டெனக் கிருபாகரியின் உடல் விரைத்தது.

''ஐயோ, இது என்னதிது?'' என்று திகைத்தாள்.

நாத்தனாரின் பார்வை நிலைத்த திசையில் இந்து மதியும் நோக்கினாள்.

அங்கே, காரின் கதவைத் தயானந்தன் திறந்து விட, நர்ஸ் கோகிலா இருபுறமும் நோக்கிவிட்டு, அவசர மாகக் காரினுள் ஏறினாள்.



15

ஓரம் ஒதுக்கி நிறுத்தப்பட்டிருந்த கார், இலகுவாகச் சாலைப் போக்குவரத்தோடு இணைந்து, வேகம் எடுத்துச் செல்வதை, இந்துமதி கண் இமையாமல் பார்த்தாள்.

கார் கண்ணுக்கு மறைந்ததும், நாத்த னாரிடமிருந்து திரும்பி, ''உங்கள் தம்பி என்ன அழகாகக் கார் ஓட்டுகிறார், பார்த்தீங்களா அண்ணி? அந்தக் காரில், இப்போது அவரோடு கூடப் போக முடிய வில்லை என்று இருக்கிறது. கோகிலாவுக்குத்தான் அந்த அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது. ஆனால், நீங்கள் ஏன் அண்ணி, ஐயோ என்று கத்தினீர்கள்? நாய் ஏதேனும் குறுக்கே வந்து விழப் போயிற்றா?'' என்று விவரம் கேட்டாள்.

''அ.. அதில்லை! இந்தக் கழுதை, கோகிலாவுக்கு என்ன கார் சவாரி கேட்கிறதாம் என்று நினைத்தேன். அதிலும், ஒழுங்காக, இங்கே இருந்தே ஏறிப் போகாமல் அதென்ன பெரிய சாலை வரை சென்று, அங்கிருந்து ஒளிந்து மறைந்து, தம்பி காரில் ஏறுவது? அதுதான் மனதில் எங்கோ இடித்ததால், ஐயோ என்று விட்டேன்!'' என்று சமாதானம் சொன்னாள் கிருபாகரி.

''இடிப்பானேன், அண்ணி! கோகிலா பஸ்சுக்கு நின் றிருப்பாள். மும்பை செல்லும் தயா அவளைப் பார்த்திருப்

பார். அவளது விடுமுறை நாளில் கோகிலாவும் மும்பைக்குத்தானே ஷாப்பிங் போகிறாள். அதனால், தானே கூட்டிப் போய் விட்டு விடலாம் என்று எண்ணி அழைத்துப் போயிருப்பார். அவ்வளவுதான் விஷயம்!'' என்று சாதாரணமாக முடித்தாள் இந்துமதி.

கிருபாகரி போலவே, கருணாகரியும் முகம் சிறுத்துத் தான் தெரிந்தாள்.

ஒத்துக் கொள்ளாததைக் காட்டுவது போன்ற சிறு மௌனத்தின் பின், ''அப்படியே நீ சொல்வது போல வைத்துக் கொண்டாலும், தயா தினமும் மும்பைக்குப் போவான் என்று கோகிலாவுக்குத் தெரியும்தானே? இங்கிருந்தே அவனோடு காரில் போயிருக்கலாம் தானே? அங்கேயும், அதென்ன இப்படியும், அப்படி யும் பார்த்து, ஒளிந்து, மறைந்து காரில் ஏறுவது?'' என்று கிருபாகரி ஆத்திரத்துடன் கேட்டாள்.

ஆனால், அவளது ஆத்திரத்துக்கு நேர் விரோதமாக, இந்துமதி சட்டெனச் சிரித்தாள்.

சிரித்துவிட்டு, ''சொல்கிறேன் என்று என் மீதும் கோபப்பட மாட்டீர்களே, அண்ணி? எல்லாம் உங்களுக்குப் பயந்துதான், கோகிலா அப்படிச் செய்திருப்பாள். அங்கே போய்ப் பயந்து பயந்து காரில் ஏறியதற்கே, அவளைக் கழுதை என்கிறீர்கள். இங்கேயே ஏறினால் கையைப் பிடித்து இழுத்துக் கீழே இறக்கியே விட்டிருக்க மாட்டீர்களா? அதற்கு மேல், வேலையே நிலைக்குமோ, என்னவோ? அந்தப் பயம் வேறு இருக்கும் அல்லவா?'' என்று இந்துமதி கேட்க, ஒரு பெருமூச்சுடன் தலை யசைத்து, ''அப்படியும் இருந்தாலும் இருக்கும்!'' என்றாள் கிருபாகரி மெதுவாக.

அதன் பின் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் புத்தகம் படித்துக் காட்ட இந்துமதி மாமனார் குடிலுக்குப் போனாள்.

கதையில் வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் ஒருவர் காலை மற்றவர் வாரியவாறே, இலங்கையில் இளவரசர் அருள் மொழி வர்மரைத் தேடிச் செல்லும் பகுதி. ஆழ்வார்க்கடியான் யானையிடம் மாட்டித் தப்பும் இடத்தைப் படித்துக் காட்டிவிட்டு, "பெரிய பெரிய மர்மக் கதைகளைக் காட்டிலும், எவ்வளவு பரபரப்பாக இருக்கிறது, மாமா! வானளாவிய காடும், பெரிய காட்டு யானையும் கண் முன்னே தோன்றுகிற மாதிரி எப்படித்தான் எழுதினாரோ!" என்று இந்துமதி வியந்தாள்.

"இதைச் சொல்லுகிறாயே! பிற்பகுதியில், இரண்டு புயல் அடிப்பது பற்றி வரும் பார்! இடையில் புத்தகத்தைக் கீழே வைக்கவே மனம் வராது. எனக்கு வாசித்துக் காட்டுவதை மட்டும் விட்டுவிட்டு, மற்றதை வேண்டுமானால் கொண்டு போய்ப் படித்துப் பார்," என்றார் பாண்டுரங்கன்.

"நன்றி, மாமா! ஆனால் இப்போது வேண்டாம். அப்புறமாக, அண்ணி இருவரும் அவரவர் ஊருக்குப் போன பிறகு, கூடப் பேச ஆளின்றித் தனியாக இருப்பேன் அல்லவா? அப்போது மொத்தமாக எடுத்துப் போய்ப் படிக்கிறேன்," என்றாள் இந்துமதி.

அவளையே பார்த்தபடி, "ஆனால் புத்தகங்கள் பத்திரம், அம்மா. எல்லாம், என் பிறந்த நாளுக்காக, உன் அத்தை எனக்குப் பரிசாகக் கொடுத்தவை!" என்றார் மாமனார்.

''வாவ், என்ன அருமையான பரிசு!'' என்ற மன மாரப் பாராட்டினாள் இந்துமதி.

''ஆனால், உங்கள் அருமைப் புத்தகங்கள் என்னிடம் என்ன ஆகி விடுமோ என்று கவலையே படாதீர்கள். படித்துக் கொண்டிருக்கும் பக்கத்தைக் குறிப்பதற்காக, நான் வேறு காகிதத்தை வைப்பேனே தவிர, புத்தகத் தாளின் ஓரத்தை மடக்குவது கூட எனக்குப் பிடிக்காது!'' என்று அவள் கூற, அவர் புன்னகை செய்தார்.

கதை படித்துவிட்டு இந்துமதி கிளம்பும்போது, ''உன் வீட்டுக்காம்மா போகிறாய்?'' என்று பெரியவர் கேட்க, ''பெரியண்ணி குடிலுக்கு, மாமா. படித்து முடித்ததும் நேரே அங்கே வரச் சொன்னார்கள்!'' என்று, பெருமித மாக முறுவலித்தவளுக்கு ஒன்று நினைவு வர, ''கிரு பாகரி, கருணாகரி, தயானந்தன் என்று மூன்று பிள்ளை களுக்கும் மிக அழகாகப் பெயர் வைத்திருக்கிறீர்கள், மாமா! ஒன்றுக்கொன்று பொருத்தமாக இருப்பதோடு, பெயரைச் சொல்லும்போதே, மனம் கனிந்து போகிறது!'' என்று பாராட்டினாள்.

பலமுறை, அவள் நினைத்ததுதான். இன்று அங்கே இருக்கும்போதே நினைவும் வந்துவிட, நினைத்ததை அவரிடம் தெரிவித்தாள்.

''இந்தப் பெருமைக்கு உரியவள் உன் அத்தைதான், இந்தும்மா. அவள் கருணையின் மறு உரு. எந்நேரமும், ஏதாவது தரும காரியம் என்று அலைந்து கொண்டிருப் பாள். அவள்தான் ஆசைப்பட்டு, இந்தப் பெயர்களை வைத்தாள்!'' என்று லேசாக முறுவலித்தார் அவர். ''ஆனால் ஒன்று. பெயருக்கேற்ற குணத்தை எல்லோரிட

மும் எதிர்பார்க்கக் கூடாது!'' என்று இலகுக் குரலில் எச்சரித்தார்.

கிண்டலா என்று எண்ணி, முறுவலித்துவிட்டு, மீண்டும் ஒரு தரம் அண்ணியின் அழைப்பைப் பற்றிச் சொல்லிவிட்டுப் போனாள் அவள்.

உலகில் எத்தனை நாத்தனார்கள், தம்பி மனைவியை, வா, வா என்று அன்பாக அழைக்கிறார்கள்? அல்லது, எத்தனை அண்ணன் தம்பி மனைவியர், நாத்தனார் களிடம் இப்படிப் பிரியமாக நடந்து கொள்கிறார்கள்?

எண்ணிப் பார்த்துப் பெரியவரும் பெருமைப் படுவார் என்பதற்காகவே, இந்த விவரத்தை, அவள் அவரிடம் சொன்னது.

அன்றிரவு உணவருந்தும்போது பேச்சின் நடுவே, ''இன்று காலையில், அக்காவின் குடிலில் இருந்து வீட்டுக்கு எப்போது திரும்பி வந்தாய், இந்து?'' என்று தயானந்தன் வினவினான்.

''காலையிலா?'' என்று கேட்டு விட்டுக் கலீரென நகைத்தாள் அவன் மனைவி.

''மாமாவுக்குப் புத்தகம் படித்துவிட்டு, மறுபடியும் அண்ணி குடிலுக்குப் போனேனா? இன்னைக்குப் பரம பதம் ஆடிக்கொண்டு, அங்கேயே இருந்து விட்டேன். மதியம் அங்கேயே சாப்பிட்டேன். கடைசியாக, மாலை யில்தான் திரும்பி வந்தேன்!'' என்றாள் அவள்.

''மாலை வரையுமா? அவ்வளவு நேரம் ஏம்மா அங்கேயே இருக்கிறாய்? நம் வீட்டில் இருக்கலாமே!'' என்றான் அவன், மிருதுவான குரலில்.

''இங்கேயா? ஐயோ, இங்கே தனியாக எனக்குப் போரடிக்காதா?'' என்றாள் அவள்.

''உன் பொழுது போக்குக்கு அடுத்தவரைச் சார்ந் திருக்கக் கூடாது, இந்தும்மா. இங்கே சுற்றிச் சுற்றிப் பொழுது போக்குவதற்கு எத்தனையோ இடங்கள். அதெல்லாம் பிடிக்கவில்லை என்றால், என்னோடு மும்பைக்கு வா. சுற்றிக் காட்ட உன்னோடு ஆள் அனுப்புகிறேன். அங்கே பத்து நாட்கள் தொடர்ந்து பார்த்தாலும், இன்னும் பார்த்து ரசிப்பதற்கு, ஏதாவது இருக்கும்!'' என்றான் அவன்.

''ம்ம்ம்...'' என்று அவனை ஆவலோடு பார்த்தாள் அவள். ''என்கூட நீங்கள் வருவீர்களா?'' என்று ஆர்வமாகக் கேட்டாள்.

லேசாகத் தலையசைத்து, ''வேலைம்மா! அணுவள வும் பிசகக் கூடாத வேலை! என் வேலை இப்படி என்றால் அதற்குத் தக, நீ சமாளிக்க வேண்டாமா? உடனே, அடுத்தவர் இடத்தில் போய் இருந்து, அவர்கள் நேரத்தை வீண் பண்ணலாமா?'' என்று கேட்டான் அவன்.

வீண் பண்ணுவதா?

திகைப்புடன் நோக்கி, ''அவர்கள் செய்யும் எதிலும் நான் குறுக்கிடுவது கிடையாதே! அவர்களது எந்த வேலையும் என்னால் நின்றதும் இல்லை...'' என்றாள்.

''நீயே அறியாமல் நடக்கிறதும்மா. நீ வந்த பிறகு, செல்வம் எத்தனை நாள் படிக்கப் போயிருக்கிறான்? சும்மாவே பள்ளியில் கோட்டை விட்டு, அவன் படிப்பது டுடோரியல்தான். அதற்கும் போவது இல்லை என்றால், எப்படி? பெரியக்காவுக்கு, எப்போதுமே படிப்பில் அக்கறை கிடையாது. நாமாவது பார்க்க வேண்டும் என்றுதான் அவனை இங்கே வைத்திருப்பது.''

"ஐயோடா, எனக்கு அது தெரியாதே! முதல் பேரக் குழந்தையைப் பிரிய மனம் இல்லாமல், மாமாதான் அவனை இங்கே தன் பக்கத்திலேயே வைத்திருக்கிறார் என்று..."

"அப்படி உன்னிடம் யார் சொன்னது?"

"அது..." என்று சட்டெனப் பதில் சொல்ல வாயெடுத்தவள், உடனே ஒரு திகைப்புடன் யோசித்தாள்.

தீவிரமாக யோசிக்கும்போதுதான், இன்னோரன்ன வார்த்தைகளால் யாரும் அப்படிச் சொன்னதில்லை என்று புரிந்தது.

எனவே, "அப்படித்தான் என்று யாரும் சொல்லவில்லை. ஆனால் பொதுவாக மற்றவர்கள் பேசியதை வைத்து, நானே ஊகித்தேன்!" என்றாள் இந்துமதி.

"ஊகூம். அப்படி எதுவும் கிடையாது. பேரனின் படிப்புக் கெடுகிற அளவுக்குப் பக்கத்திலேயே வைத்துச் செல்லம் கொடுக்கிறவர் அல்ல, நம் அப்பா. ஒரே பிள்ளை என்று அக்காவும், அத்தானும், செல்வத்தின் உடம்பை வளர்த்தார்களே தவிர, படிப்பைப் பார்க்கவில்லை. பள்ளி விடுதியில் சேர்த்தால் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி வந்து விடுவான். இதற்குள் வயது கூடி விட்டது. அதனால்தான், இங்கே டுடோரியலில் சேர்த்துப் படிக்க வைப்பது. அக்கா இங்கே வந்தாலே, இந்தப் படிப்பில் பாதி கெடுவதுதான். இப்போது, அடியோடு கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறது!" என்று தயானந்தன் கூறவும், செல்வத்தோடு சேர்ந்து உட்கார்ந்து சீட்டும், கேரமும் விளையாடியதை எண்ணி, இந்துமதி குன்றிப் போனாள்.

''சாரி, தயா! நான் தப்பாக எண்ணி...''

''போகட்டும், விடும்மா. இதைப் போலவே தப்பாக நினைத்து, வேறு ஏதேனும் செய்து விடாமல் கவனமாக இரு. அது போதும்!'' என்று முடித்தான் கணவன்.

செல்வம் இருந்தால், சீக்கிரமாகத் திரும்பிவிட வேண்டும் என்ற தீர்மானத்தோடு, அன்று கிருபாகரி யின் இருப்பிடம் சென்றால், எல்லோரும் கொஞ்சம் சோர்ந்தாற்போலத் தெரிந்தார்கள்.

என்னவென்று, இந்துமதி கவலையுடன் விசாரித்தாள்.

சிங்கப்பூரில் இருந்து போன் வந்ததாம். கருணா கரியுடைய கணவருக்கு, லேசாகக் காய்ச்சலாம். பெரிதாக ஒன்றும் இல்லையாம். ஆனாலும் மனைவியை உடனே வரச் சொல்லுகிறாராம்.

''அவருக்கு உடம்பு சரியில்லை என்றால், போகாமல், இங்கேயே இருக்கவும் பிடிக்கவில்லை! அதே சமயம், உன்னை விட்டுப் போகவும் மனமே வர மாட்டேன் என்கிறது. என்னவோ, எங்கள் சின்னத் தங்கை போல, உன்னிடம் ஒரு தனிப் பிரியம் உண்டாகி விட்டதா? ஏதோ, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடி யாமல்... என்பார்களே! அது போல, இங்கே இருக்கவும் முடியாமல், உன்னை விட்டுப் போகவும் முடியாமல், இருதலைக் கொள்ளி எறும்பு போலத் தவியாய்த் தவிக் கிறேன்!'' என்று மிகவும் வருத்தப்பட்டாள் கருணாகரி.

இந்துவுக்கும் வருத்தமாகத்தான் இருந்தது.

கிருபாகரி அளவு அதிகம் பேசாவிட்டாலும், சின்ன நாத்தனாரும், அவளிடம் அன்பாகவே இருந்தாள்.

அவர்கள் இருவருமே அவளிடம் அன்பாக இல் லாமல், யாரோ போல இருந்திருந்தாலுமே, அவளைப்

பொறுத்த வரையில், அவர்கள் தயானந்தனுடைய சகோதரிகள் என்ற ஒரு காரணத்துக்காகவே அவளது அன்புக்கு உரியவர்கள்தான்.

அவளுடைய அம்மாவுக்காக, அவன் செய்யவில்லையா? அதே போலத்தானே, அவனுடைய உறவினர், அவளுக்கும்?

எனவே நாத்தனாரிடம் பிரியம்தான், அவள் இங்கே இருப்பதிலும் மகிழ்ச்சிதான்.

ஆனால், கணவருக்கு உடம்பு சரியில்லை என்றால், மனைவி அவர் அருகில்தானே இருக்க வேண்டும்?

போ என்று சொல்வதுபோலத் தோன்றிவிடக் கூடாது என்று வார்த்தைகளைக் கவனமாகத் தேர்ந்தெடுத்து, இந்துமதி பேசினாள். ''அண்ணாவுக்கு மனம் எப்படி இருக்கிறதோ? சோர்வான சமயத்தில், நீங்கள் அருகில் இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினால், நீங்கள் அங்கே போவதுதான் சரியாக இருக்கும். ஆனால் அண்ணா உடம்பு நன்றானதும், உடனேயே திரும்பி வந்து விடுங்கள், அண்ணி! வந்து இங்கே இன்னும் நிறைய நாட்கள் இருக்க வேண்டும். நான் உங்கள் வரவை ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டே இருப்பேன்!'' என்று இனிய குரலில் பிரியமாகக் கூறினாள்.

ஆனால், ''என்னது? நீ எதிர்பார்ப்பாயா?'' என்ற பதிலிலும் குரலிலுமாகத் திகைத்து விழி விரித்து நாத்தனாரைப் பார்த்தாள்.



## 16

**சொ**ல்லக் கூடாததைச் சொல்லிவிட்டவர்களிடம், 'என்னது?' என்று ஏளனமும்

கோபமுமாக அதட்டுவது போலத் தோன்றவும், இந்து மதி திகைத்துப் போனாள்.

தவறாகப் பொருள்படும் விதமாக எதையேனும் சொல்லி விட்டோமோ என்ற திகைப்பும், அப்படி எதையும் சொல்லவில்லையே, பிறகென்ன கோபம் என்ற குழப்பமுமாக அவள் நோக்குகையில், கிருபாகரி பேசினாள்.

''பின்னே, என்ன இந்து? நாங்கள் மட்டும், பிறந்த வீடு என்று, இங்கே ஓடி ஓடி வருவோம். நீ மட்டும் சொந்த பந்தம் இல்லாத அநாதை மாதிரி, இங்கேயே எங்களுக்காக விழுந்து கிடக்க வேண்டும் என்று எதிர் பார்க்கும் அளவுக்கு நாங்கள் கல்மனம் படைத்தவர் களா? இவ்வளவு நாள் பழகி உனக்கு இது தெரிய வில்லையா? நீ, உன் அம்மா வீட்டுக்கெல்லாம் போகா மல், எங்களுக்காக இங்கேயே காத்துக் கிடப்பதாகச் சொல்லுகிறாயே?'' என்று பெரிய நாத்தனார் குறைபட்ட பிறகுதான், இந்துமதிக்கு விஷயம் புரிந்தது.

இன்னும் விளக்கமாக, ''ஆமாம், இந்தும்மா! அம்மா இல்லாவிட்டால்கூட, எங்களுக்கு இங்கிருந்து போக மனமில்லை. அம்மாவே இருக்கும் போது, உனக்கு அவர்களைப் போய்ப் பார்த்து வர வேண்டும் என்று ஆசை இருக்கத்தானே செய்யும்?

''அவர்களும் உன்னைப் பார்க்க ஏங்கிக் கொண்டு இருப்பார்கள்! முடிந்தால் ஒரு தரம் போய்வாம்மா!'' என்று சின்ன நாத்தனாரும் சேர்ந்து விளக்கம் கொடுக்க, அமைதியடைந்த அவளது மனம் தாயிடம் தாவியது,

பத்மாவதிக்கு அந்த வீட்டில் எதையாவது செய்து கொண்டே இருப்பதே போதும் என்றாலும், மகளின் நினைவும் வரத்தானே செய்யும்?

மகள் கிளம்புகிறாள் என்று அன்னை பாத்திரம் பண்டம் எடுத்து வைக்க முனைந்தது ஞாபகம் வர, தாயைப் பார்க்கும் ஆவல், அவளுள் கிளர்ந்தது.

அதன் விளைவாக, "விரைவிலேயே, சின்னண்ணி சிங்கப்பூருக்குக் கிளம்புகிறார்கள். பெரியண்ணியும், டெல்லிக்குப் போவது பற்றிப் பேசுகிறார்கள். நானும் அம்மாவைப் போய்ப் பார்த்துவிட்டு வரட்டுமா?" என்று கணவனிடம் கேட்டாள்.

ஆனால், "அநியாயத்தைப் பாரேன்! இருபது ஆண்டு களுக்கு மேலாக அம்மாவோடேயே இருந்திருக்கிறாய். அது போதாதா? இரண்டே மாதங்களுக்குள்ளாக, என்னைப் பிரிந்து போகிறேன் என்கிறாயே! அப்புறம் நான் தன்னந்தனியே இந்தக் குடிலில் இருக்க வேண்டுமே, எனக்குப் பயம்மாக இருக்காதா? இது நியாயமா, இந்து?" என்று சோகமாகக் குற்றம் சாட்டும் பாவனை யில் தயானந்தன் கேட்ட தினுசில் சிரிப்பு வர, அத்துடன் அவளுக்கு ஊருக்குப் போவது மறந்து போயிற்று.

சொன்னது போலவே, கருணாகரி மூன்றே நாட்களில் தன் வீட்டுக்குக் கிளம்பிப் போய்விட்டாள்.

அங்கே, அவளுடைய கணவனுக்கு உடம்பு பரவா யில்லை என்று அவளிடம் இருந்து சேதி வரவும், இங்கே எல்லோருக்கும் நிம்மதியாக இருந்தது.

தன் புதிய தீர்மானத்தின்படி, செல்வம் கல்வி நிலை யத்துக்குச் செல்ல வேண்டிய அல்லது படிக்க வேண்டிய நேரத்தில், கிருபாகரியின் இருப்பிடத்தில் இருப்பதை, இந்துமதி நிறுத்திக் கொண்டாள்.

அதை உடனே கவனித்து, "ஏம்மா இப்போதெல் லாம் வருவதே இல்லை? என் மீது ஏதேனும் கோபமா?" என்று கிருபாகரி காரணம் கேட்டாள்.

செல்வத்தின் படிப்புக்குக் குந்தகமாக இருக்க விருப் பம் இல்லை என்று, இந்துமதி முதலில் லேசாகத்தான் சொன்னாள்.

ஆனால், பிள்ளை படிப்பைப் பெற்றவள் பார்க்க மாட்டாளா என்று தொடங்கி, மெல்ல மெல்ல விஷ யத்தைக் கிரகித்துக் கொண்டு வருத்தத்துடன் பெருமூச்சு விட்டாள்.

''புரிகிறது. நீ இங்கே வந்து என்னோடு பேசிக் கொண்டிருப்பது, தயாவுக்கு ஏனோ பிடிக்கவில்லை. ஊர் உலகத்தில், தம்பி பிரியமாக இருப்பான். தம்பி மனைவி அதைக் கெடுக்க ஏதாவது செய்வாள். இங்கே பார் எல்லாம் தலைகீழாக...'' என்று முடிக்காமலே நிறுத்தி, இன்னொரு பெருமூச்சை வெளியிட்டாள்.

அவள் முடிக்காமல் நிறுத்திக் கொண்டாலும், அர்த் தம் புரியாமலா போகும்?

புரிந்து, பிடிக்காமல், ''தயாவுக்குச் செல்வத்தின் நன்மைதான் முக்கியம், அண்ணி. அவனது படிப்புக் காகப் பார்க்கிறார் எனும்போது, அதுவே உங்களிடம் அவருக்கு உள்ள பிரியத்தைக் காட்டுவதுதானே?'' என்று; கணவனுக்காக வக்காலத்து வாங்கினாள் இந்து.

''பெற்ற எனக்கு அந்தக் கவனம் இராதா? அவனது படிப்புக் கெட, நான் விட்டுவிடுவேனா? ஒரே பிள்ளை என்று அருகில் வைத்திருந்து பாராமல், அவனைப் பிரிந்திருப்பதையும் பொருட்படுத்தாமல், இங்கே விட்டு வைத்திருக்கிறேனே,. சும்மாவா? தம்பிக்கும், கூடப் பிறந்தவன் மாதிரி, செல்வத்திடம் மிகவும் பிரியம் தான். ஏழெட்டு வயதுதானே, வித்தியாசம்? அண்ணன்

தம்பி மாதிரி அன்பு உண்டு என்று எனக்கும் தெரியும். ஏன், எனக்கே தம்பியும் ஒரு பிள்ளை போன்ற உணர்வு தான். ஆனால் நாம் இருவரும் பேசிக் கொண்டிருப் பதை ஏன்..." என்று யோசித்துவிட்டு, ஏதோ புரிந்து, "நீ சொல்வதுதான் சரியென்று, இப்போது எனக்கும் தோன்றுகிறது இந்தும்மா. ஒத்துக் கொள்கிறேன். இனி மேல் செல்வம் படிக்கப் போன பிறகு நான் சொல்லு கிறேன். அப்புறமாக நீ வா!" என்றாள் கிருபாகரி.

அப்பாடி என்று இருந்தது, இந்துவுக்கு,

தன் நிம்மதியைக் கணவனிடம் தெரிவித்துக் கொண் டாள். "முழுச் சமாதானம் இல்லை என்றாலும் எல்லாம் செல்வத்தின் படிப்புக்காகத்தான் என்பதை, ஒரு வழியாக அண்ணி ஒத்துக் கொண்ட பிறகுதான் எனக்கு நிம்மதியாயிற்று! உங்களைத் தப்பாக நினைத்து விடுவார்களோ என்று கவலையாக இருந்தது!" என்றாள் அவள்.

"தப்பாக நினைத்தாலும் பரவாயில்லை, இந்து. குறிக்கோள்தான் நமக்கு முக்கியம்!" என்றான் கணவன்.

நாத்தனார் குடிலுக்குச் செல்வது குறைந்தபோதும், மாமனாருக்குப் புத்தகங்களை அதிக நேரம் வாசித்துக் காட்டுவதிலும், அவர் கொடுத்த பல்வேறு புத்தகங் களை ரசித்துப் படிப்பதிலுமாக, இந்துமதிக்குப் போரடிக்க அவகாசம் அதிகம் இல்லை.

இதனிடையே, இன்னொரு பிரச்சினை உருவாயிற்று.

நர்ஸ் கோகிலாவுக்குச் சிங்கப்பூருக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அவளுடைய தாய் வழி உறவில், மிக முக்கிய விழாவாம். அத்தோடு சேர்த்து கோகிலாவுக்கு மாப்

பிள்ளை பார்க்கவும் ஏற்பாடாம். அதனால் அவளை உடனே அனுப்பி வைக்குமாறு, சிங்கப்பூரில் இருந்து கடிதம் வந்திருந்தது.

சும்மாவே, கோகிலா சிரித்து, இந்துமதி பார்த்தது இல்லை. முகம், இப்போது, இன்னமும் சுட்ட கத்தரிக் காய் போல இருந்தது.

அதைப் பற்றிக் கணவனிடம் இந்து தெரிவித்தபோது, அவன் தோளைக் குலுக்கினான். ''சிரிப்பதும், சிரி யாததும் அவளது சொந்த விருப்பம். நமக்கு அவள் செய்ய வேண்டிய வேலை ஒழுங்காக நடந்தால் சரி. ஆனால் இப்போது அவளுக்குப் பதிலாக வேறு ஆள்தேட வேண்டும். அதுதான் நமது தலைவலி!'' என்றான் தயானந்தன்.

''வேலைக்கு ஆள் தேடித்தரும் நிறுவனம் எதிலாவது சொன்னால், விரைவில் ஆள் பார்த்து அனுப்பிவிட மாட்டார்களா?''

''அனுப்புவார்கள். முதலில், நகரத்தை விட்டு, இவ்வளவு தள்ளி வர நிறையப் பேருக்குப் பிடிக்காது. பணத்தைக் காட்டி அழைத்து வந்தாலும், அப்பாவிடம் மென்மையாக நடப்பவர்களாக இருக்க வேண்டும். அனாவசியமாக, முன்னே முன்னே வந்து நிற்கக்கூடாது. கூப்பிட்டால் அன்றி வரக்கூடாது. எல்லாம் பொருந்திய ஒருத்தியைத் தேடியாக வேண்டும். நாளைக்கே, முதலில் அதைப் பார்க்க வேண்டும். திருமணத்துக்கு என்று கூப்பிடும் போது, நம்மால், அவளது பயணம் தாமத மாகக் கூடாது!'' என்றான் அவன்.

கிருபாகரியும், கோகிலாவின் கடுகடுத்த முகத்தைப் பற்றிக் குறிப்பிட்டாள்.

''என்ன... கல்யாணம் பண்ணத்தானே கூப்பிடுகிறார் கள்? என்னமோ, கொலைக் களத்துக்குப் போகிற மாதிரி, முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறாளே! எல்லோரும் என்ன நினைப்பார்கள்?'' என்றாள் ஆத்திரத்தோடு.

இந்துமதி புரியாமல் பார்க்கவும், ''அந்தக் கல்யாண மாப்பிள்ளை பிடிக்கவில்லை என்று எண்ண மாட்டார் களா? இவளுக்கு ஆயிரம் ஆசை இருக்கும். உச்சாணிக் கொம்பில் ஏறி நின்று, தையாத்தக்கா என்று ஆடக்கூட ஆசையிருக்கும். ஆனால், ஒரு சின்ன வீட்டுக்காரி மகளுக்கு என்ன கிடைக்கும் என்கிற முறைமை ஒன்றும் யோசிப்பது இல்லையா?'' என்று மூச்சு வாங்க, வேகமாகப் பொரிந்து கொட்டினாள் மற்றவள்.

வியப்புடன் நோக்கி, ''கோகிலாவுக்கு மாப்பிள்ளையே இனிமேல்தான் பார்க்கப் போகிறார்கள். அதற்குள் பிடிக்காமல் போவானேன்? அத்தோடு அண்ணி, இப் போதெல்லாம் சின்ன வீடு பெரிய வீடு என்றெல்லாம், ரொம்பப் பேர் பார்ப்பதே இல்லை. பெண் எப்படி என்று அவளுக்குத்தான் முக்கியத்துவம். கோகிலாவும் அழகா கவே இருப்பதால், நல்ல வரன் அமைந்து, அவளுக்கும் பிடித்துப் போகலாம்!'' என்றாள் இந்துமதி.

''அதெல்லாம் அவளுக்கு ஒரு பயலையும் பிடிக் காது!'' என்றாள் கிருபாகரி அலட்சியமாக.

''அதெப்படி நீங்கள் சொல்ல முடியும்?''

''அது...'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு, கிருபாகரி தயங்கினாள்.

ஒரு கணம் யோசித்துவிட்டு, ''இந்தச் சின்ன வீட்டுக் காரிகள் தன்மையே இதுதானே! எங்கே எவனாவது,

புளியங்கொம்பு கிடைப்பான் என்று, அலைய வேண் டியது. கிடைத்தால் ஆட்டம்போட்டு, அப்படியே வளைத் துப் பிடித்து விடுவார்கள். தாலி, வேலி ஒன்றும் பார்ப்பது இல்லை. நாம்தான், நம் பொருளைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்!'' என்று தம்பி மனைவிக்குப் பொதுவான அறிவுரை ஒன்று கூறி முடித்தாள்.

அந்த அறிவுரையில், இந்துவின் மனம் பதியவில்லை.

மாறாகக் கோகிலாவைப் பற்றியே யோசித்தபடி, ''உங்களுக்கு அந்தப் பெண் கோகிலாவை, ஏனோ பிடிக்கவில்லை என்று தோன்றுகிறது. ஏன் அண்ணி? ஒரு வகையில் பார்த்தால், அவளும் பாவமில்லை? உரிமை இல்லாத உறவில் பிறந்தவள், தந்தை வழியில் மட்டமாகவே மதிக்கப்படுகிறாள். தாய் வழியிலும், எப்படியோ நமக்குத் தெரியாது. ஏன் அண்ணி, கோகிலா விடம் துணிமணிகள் எல்லாம் நல்லதாக உண்டா? அல்லது, என்னிடம் புதிதாக இருப்பதில் ஒன்றிரண்டு கொடுக்கட்டுமா?'' என்று வினவினாள் அவள்.

திகைத்து நோக்கிவிட்டு, ''கடவுளே!'' என்று தலை யில் அடித்துக் கொண்டாள் கிருபாகரி.

''எ... என்ன, அண்ணி?''

''நீ அவளுக்கு ஒன்றுமே கொடுக்க வேண்டாம் தாயே! கொடுத்தால், அவள் அதைத் திருப்பி, உன் முகத்திலேயே விசிறி அடித்து விடுவாள். அதனால், உனக்குப் புண்ணியமாகப் போகட்டும். கையைக் கட்டிக் கொண்டு, சும்மா இரு!'' என்று அலுப்புடன் கூறி முடித்தாள் அந்த அண்ணிக்காரி.

''ரொம்பக் கௌரவம் பார்க்கிறவளா, அண்ணி? அப்படியானால், நான் எதையும் கொடுக்காமலே இருந்து விடுகிறேன்!'' என்று விட்டுக் கிளம்பிப் போனாள் இந்துமதி.

''என்னம்மா, 'இப்படி ஒரு பேக்'கா, என்று இருக்கிறதா?'' என்று கேட்டான், கல்வி நிலையத்துக்குச் செல்லக் கிளம்பிக் கொண்டிருப்பதாகச் சொல்லி, அடுத்த அறையில் படுத்துக் கிடந்த செல்வம்.

தாயார் பேசாதிருக்கவும், ''ஆனால், மாமா ரொம்ப லக்கி!'' என்று முடித்தான் அவன்.



17

**கோ**கிலா கிளம்பிச் சென்ற சில தினங்களுக்குள்ளாகத் தயானந்தனுக்கும் சிங்கப்பூர் செல்ல வேண்டிய வேலை வந்து சேர்ந்தது.

தயானந்தனின் நிதி நிறுவனத்துக்கு, வெளிநாடுகளிலும், முக்கியமாகத் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் பல கிளைகள் இருந்தன. சிங்கப்பூருக்கு நேரில் சென்று, கணக்கு வழக்குகளை மேற்பார்வையிட்டுத் திரும்புவதும், தேவைப்பட்டால் மற்ற கிளைகளையும் பார்வையிடுவதும், தயானந்தனுக்கு வழக்கமே.

இப்போதும், அதேபோல அவன் கிளம்ப, ''ஏண்டா, உனக்கு வேற நேரமே கிடைக்கவில்லையா?'' என்று முகம் சுழித்தாள் கிருபாகரி.

''ஏன் அண்ணி, அவர் வழக்கமாகச் செய்வதுதானே?'' என்று கணவனுக்காகப் பதில் கூறினாள் இந்துமதி.

''அதற்கில்லை. கோகிலாவும் இல்லை, புது நர்சுக்கு எல்லாம் கற்றுத் தருவதோடு, சரியாக வேலை செய்கி

றாளா என்று கவனிக்க வேண்டியிருக்கிறது. இந்த நேரம் பார்த்துக் கிளம்புகிறேன் என்கிறாயே!''

''இங்கே இருந்தாலும், அதையெல்லாம் நானா பார்த்துக் கொண்டிருக்கிறேன்? காலையில் கிளம்பிப் போனால், இரவு திரும்புகிறேன், பகலெல்லாம் கவனிப்பது, நீங்கள் எல்லோரும்தானே! தொடர்ந்து செய்யுங்கள்!'' என்றான் தயானந்தன்.

''எங்கே? கருணாகரி மாதிரி, எனக்கு எப்போது அழைப்பு வருகிறதோ? அத்தான் வா என்றால் உடனே ஓட வேண்டியவள்தானே, நான்! புது ஆளை வைத்து விட்டு, நான் எப்படி நிம்மதியாகப் போவது?''

''அந்தக் கவலை உனக்குவேண்டாம், அக்கா! காரியஸ்தர் கூடவே இருப்பார். இந்துவும் பார்த்துக் கொள்வாள்!'' என்று, மனைவியைப் பார்த்தபடி பதில் சொன்னான் தம்பி.

'செய்வாயல்லவா?' என்று பார்வையால் கேட்கிறான்.

சம்மதமாய்க் கண் மூடித் திறந்து, இந்துமதி முறுவலித்தாள்.

''ஓ! அப்படியானால் இந்து உன்னோடு வரவில்லையா? உன் கூட அவளும் வருவாள் என்று நினைத்தேன். அடடா! இரண்டு பேருமாகத் தேனிலவு மாதிரி, மலேசியா, சிங்கப்பூரெல்லாம் ஜாலியாகச் சுற்றிவிட்டு வருவீர்கள் என்று எண்ணினேனே!'' என்றாள் கிருபாகரி வருத்தக்குரலில்.

''ஆனால், அப்பாவை நினைத்துக் கவலையாகவும் இருந்தது!'' என்றும் சேர்த்துச் சொன்னாள்.

ஒரு கணம், இந்துமதிக்கு ஆசையாகத்தான் இருந்தது.

ஆனால், சில வினாடிகளுக்கு முன், அவன் பார்வை யால் கேட்ட கேள்வியை, அதற்கு அவள் கொடுத்த பதிலை, அதற்குள் எப்படி மறப்பது?

ஆவலை மறைத்து, ''மலேஷியாவும், சிங்கப்பூரும் எங்கே போய்விடப் போகின்றன? பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்போது, இங்கே இருப்பதுதான் முக்கியம்!'' என்றாள் சாதாரணமாகவே.

''எனக்கும், இந்த முறை அதிக வேலை இருக்கிறது. அத்தோடு, இனி இந்துவுக்கு விசா எல்லாம் எடுப்பது கடினம். அடுத்த தடவை செல்லும் போது, முதலிலேயே ஏற்பாடு செய்து கொண்டு, தாய்லாந்து, கம்போடியா எல்லா இடங்களுக்கும் போய்ச் சுற்றிவிட்டு வரலாம்!'' என்று தயானந்தன் கூறவும், இந்துவின் வருத்தம் மறைந்தது.

சற்றுத் தாமதம் ஆனாலும், பெரிய விருந்தல்லவா காத்திருக்கிறது!

''என்னவோ, இப்போது இந்துவை விட்டுப் போவது என்று முடித்து விட்டாய்!'' என்றாள் கிருபாகரி, ஒரு மாதிரிக் குறை கூறும் குரலில்.

தமக்கையைக் கேலியாக நோக்கி, ''என்ன செய்வது? நீதான் எந்த வினாடியும், அத்தானுக்குப் பாத பூஜை செய்ய ஓடி விடுவேன் என்கிறாயே! எப்படி அழைத்துப் போவதாம்? எல்லாம் உன்னால்தான் கெட்டுப் போயிற்று!'' என்று சிரித்தான் தயானந்தன்.

தமக்கையின் முகம் போன போக்கைப் பார்த்து, மேலும் நகைத்து, ''சும்மா சொன்னேன் அக்கா! வேலை நிறைய இருப்பதால்தான், நான் இந்துவைக் கூப்பிடவே இல்லை. அவளே சொன்ன மாதிரி அப்புறம் பார்ப் போம்!'' என்றான் அவன்.

கிருபாகரியின் முகமும் தெளிந்தது. ''மெய்யாகவே வேலை என்றால், அதற்கு மேலாகச் சொல்வதற்கு என்ன இருக்கிறது?'' என்றாள் அவள்.

மெய்யாகவே வேலை என்றால்... அது என்ன வார்த்தை? மெய்யாக இல்லாமல், தயா என்ன பொய்யா சொல்லுவான் என்று இந்துவின் மனம் உள்ளூரச் சிணுங்கியது.

தயவே உருவான அவளுடைய ஆனந்தன்!

தயானந்தனின் சிங்கப்பூர்ப் பயணம் நீண்ட ஏழு நாட்கள் என்றதும், இந்துமதியின் முகம் வாடிப் போயிற்று.

''ஒரே வாரத்தில் வந்து விடுவேன் என்று அப்படி நினைத்துப் பாரம்மா!'' என்றான் தயானந்தன். ''உன்னைப் பிரிகிற வருத்தம் எனக்கு இல்லையா? அடுத்த முறை, நீ கட்டாயம் என்னோடு வருகிறாய். சரிதானா?'' என்று, கொஞ்சிக் குழைந்து, அவளைச் சமாதானம் செய்தான்.

''என் வேலை முறை இப்படி என்றால், அதற்குக் தக நீ சமாளிக்க வேண்டாமா?'' என்று முன்பே ஒரு தரம் கணவன் சொல்லியிருந்தது நினைவு வர, தன்னைச் சமாளிக்க, இந்துமதி பெரு முயற்சி செய்தாள்.

கணவனைத் தான் பெரிதும் நேசிப்பதை, இந்துமதி அறிந்தே இருந்தாள். ஆனால், எந்த அளவுக்கு என்று, அவளுக்கே புரிய வைத்தது, இந்தப் பிரிவுதான்.

வெளியே காட்டிக் கொள்ளா விட்டாலும், தயானந்தனும் உள்ளூரத் தவித்தான் என்றுதான், அவளுக்குத் தோன்றியது.

வேடிக்கை விளையாட்டுகள் எல்லாம் மறைந்துவிட, அவளை அணைத்தவாறே உட்கார்ந்திருந்தான்.

''சிங்கப்பூரில் உனக்கு என்ன வேண்டும்?'' என்று அவன் கேட்டதற்கு, ''நீங்கள் பத்திரமாகத் திரும்பி வர வேண்டும்!'' என்று வழியனுப்பி வைத்தாள் மனைவி.

விமானம் புள்ளியாக மறையும் போதே, விமானக் கடத்தல், பிணையக் கைதி போன்ற வார்த்தைகள் எல்லாம் நினைவு வர, இந்து நடுநடுங்கிப் போனாள்.

சுகமாக வந்து சேர்ந்ததாக, அவன் தகவல் தெரிவிக்கும் வரை, அவளுக்குச் சரியாக மூச்சுக் கூட விட முடியாது என்று தோன்றியது.

தனியாக இருக்கப் பயந்து கொண்டு, மாமனாரின் அறையில் போய் உட்கார்ந்தாள்.

மருமகளின் நிலை புரியாமல், அவர் கதை படிக்கச் சொல்ல, வாசிக்கையிலேயே அவளுக்குக் குரல் நடுங்கியது.

''என்னம்மா?'' என்று கேட்டு, விவரம் அறிந்தவருக்கு, முதலில் சிரிப்பு வந்தது.

''பாரம்மா, 'புல் தடுக்கிச் செத்தவனும் உண்டு, யானை மிதித்துப் பிழைத்தவனும் உண்டு' என்று பழமொழி இருக்கிறது, தெரியுமா? ஆபத்து, அபாயம் இல்லாத இடம் ஏது? இன்றைக்கு எத்தனை லட்சம் விமானங்கள் பறக்கின்றன! ஒன்றிரண்டில் தப்பு நடந்திருக்கலாம். அதனால், எல்லாமே ஆபத்து என்று எண்ணக் கூடாது. தயாவுக்கு ஒன்றும் ஆகாது. பயப்படாதே!'' என்றார் பாண்டுரங்கன்.

நிதானமாக வார்த்தைகளை அவர் பேசிய விதமே, இந்துவுக்குப் பெரும் ஆறுதலைத் தந்தது.

அவள் மெல்ல முறுவலித்தபோது, ''தர்மராஜன் பேத்தி தைரியமாக இருக்க வேண்டாமா?'' என்று, அவரும் புன்னகை செய்தார்.

ஒருபுறம், சிறு மாறுபாடுள்ள அவரது முறுவலைக் காணவும், மருமகளுக்குக் கூச்சமாகிப் போயிற்று.

எப்படிப்பட்ட நோய்! அதிலிருந்து, அவர் இவ்வளவு மீண்டதற்குக் காரணம், அவரது மன உறுதிதானே!

தாத்தாவும் அப்படித்தான்.

துன்பங்களையும், துயரங்களையும் பின்னே தள்ளி விட்டு, முன்னோக்கி நடைபோடுகிறவர்கள்.

தர்மராஜனுடைய பேத்தியைப் போலவே, பாண்டுரங் கனுடைய மருமகளும் துணிவோடுதான் இருக்க வேண்டும்.

அப்படியிருக்க, வெறும் கற்பனையிலேயே பயந்து நடுங்குவது, எவ்வளவு பைத்தியக்காரத்தனம்!

''இனிமேல் இல்லை, மாமா!'' என்று மாமனாரிடம் உறுதியளித்தாள் இந்துமதி. புது நர்ஸ் பின்புறம் செல் வதைக் கவனித்துவிட்டு ''இந்த நர்ஸ் எப்படி, மாமா?'' என்று விசாரித்தாள்.

''பிரமாதம்! இவளுக்காகவே, அந்தக் கோகிலாவை வேலையை விட்டு நீக்க முடியாது. ஆனால் அவளுக்குத் திருமணமாகி, அவள் அங்கேயே தங்கி விட்டால், எவ்வளவோ நன்றாக இருக்கும்!'' என்றார் பெரியவர்.

''பரவாயில்லையே! புதிய ஆள், எப்படிச் செய் வாளோ, என்னமோ என்று அண்ணி கவலைப்பட்டுக் கொண்டே இருந்தார்கள்!''

''ஓகே! ஆனால், அவ்வளவு கவலையில், ஆளும் கொஞ்சம் குறைந்தாள் என்றால், நன்றாக இருக்கும்!'' என்று பெருமுறுவல் செய்தார் அவர்.

இதில், இந்துமதி என்ன சொல்ல முடியும்?

சிறு முறுவலோடு அவள் பேசாதிருக்கவும், பாண்டு ரங்கனே தொடர்ந்து, ''இந்த நர்ஸ் பற்றி நீ கவலைப் படாதேம்மா! கெட்டிக்காரி. உள்ளே பசுமையும் இருக்கிறது. அதனால், கோகிலா திரும்பி வந்தால்கூட, ஏதாவது காரணம் சொல்லி, இவளையும் இருக்கச் சொல்லி விடலாம் என்று வைத்திருக்கிறேன்!'' என்று கூற, புதிய நர்ஸ் பற்றி, இந்துவுக்கும் முழுமையான நிம்மதி கிடைத்தது.

''இப்போது கதை படிக்கிறாயா?'' என்று பாண்டு ரங்கன் புன்னகையோடு கேட்க, வெட்கத்துடன் புத்த கத்தை எடுத்தாள்.

படிக்கப் படிக்க, அவளுக்கும் கதையில் மனம் ஈடு பட்டுவிட, கிட்டத்தட்ட இயல்பு நிலைக்கு, அவளும் திரும்பி வந்தாள்.

சிங்கப்பூரில் காலடி வைத்ததுமே, பயணம் சுகமாக இருந்ததாகத் தயானந்தன், மனைவிக்கு ஒரு எஸ்.எம்.எஸ். அனுப்பினான்.

பிறகு, இரவில், அவள் வீட்டில் இருக்கும் நேரத்தைக் கணக்கிட்டு, அவளோடு பேசினான்.

அங்கே அலுவலகத்துக்குப் போய்ப் பார்த்தால், பத்து நாட்கள் உட்கார்ந்திருந்து பார்க்க வேண்டிய அளவு வேலை இருக்கிறதாம். ஆனால் அவனுடைய மனைவியைப் பிரிந்து அத்தனை நாட்கள் அவனால் இருக்க முடியாதாம். அதனால் இரவும், பகலுமாக உட்கார்ந்து, எவ்வளவு முடியுமோ, அவ்வளவு விரை வாக வேலையை முடித்துவிட்டுச் சீக்கிரமாக, இரண்டு

நாட்களேனும் முன்னதாகத் திரும்பி வந்துவிடப் போகிறானாம்.

அவனுடைய மனைவி, அனிச்சம்பூவை விடவும், அதி கோமளவல்லியாம். கணவன் பிரிவைத் தாளாமல், வாடித் துவண்டு விடுவாளாம். அப்படி வாடிவிடாமல், அவன் வீட்டில் இந்துமதி, இந்துமதி என்று ஒரு அழகான பெண் இருக்கிறாளாம்... அவள்தான் பார்த்துக் கொள்ள வேண்டுமாம்.

செய்வாளா என்று கேட்டான் அவன்.

இந்துமதிக்குச் சிரிப்பு பீறிக் கொண்டு வந்தது.

அவள் வாடாமல் காக்கும் பொறுப்பு, அவளுக்கேயாமா?

சற்று யோசித்துவிட்டு, அவன் பாணியிலேயே பதில் சொன்னாள்.

பொறுப்பேற்றுக் கொள்ள, அந்த இந்துமதி தயார்தானாம். ஆனால், சொன்ன நேரத்தில், அந்தக் கணவன் வந்து சேராவிட்டால், அப்புறம் மனைவியின் கதி என்ன என்று அவளைக் கேட்கக் கூடாதாம். இன்னொரு கொசுறு நிபந்தனையாக, அந்தக் கணவன், தன் உடம்பை நன்றாகக் கவனித்துக் கொள்ள வேண்டுமாம். வேலை, வேலை என்று உடம்பு ஆரோக்கியத்தைக் கோட்டை விட்டுவிட்டு வந்தால், அவனுடைய மனைவிக்கு வேதனையாக இருக்கும் அல்லவா? அதனால், அவளுக்காக, அவன் காதைப் பிடித்து, இவள் நன்றாகத் திருகி விடுவாளாம்.

அவள் சொல்லி முடிக்கவும், இருவருக்கும் சிரிப்பு வந்து விட்டது.

சிரித்து முடித்தபின், "நீ சிரிப்பதைக் கேட்க, எவ்வளவோ நிம்மதியாக இருக்கிறது, இந்து. விமான நிலையத்தில், உன் முகம் ஒரு மாதிரியாக இருந்ததா? அதே நினைவில் மனதுக்குச் சங்கடமாக இருந்தது!'' என்றான் அவன்.

''ஓகோ, அதுதான் இவ்வளவு சீ...க்கிரமாக, இரவு வரை கா...த்திருந்து ஃபோன் பண்ணுகிறீர்கள் போல!'' என்று கிண்டலடித்துச் சிரித்தாள் அவள்.

''ஏய், என்ன வாய் நீளுகிறது? அவ்வளவு தூரத்தில் இருக்கிற தைரியமா? இரு இரு. வந்து உன்னைக் கவனித்துக் கொள்ளுகிறேன்!'' என்று அவன் மிரட்டினான்.

''எப்போது வருவீர்கள்?'' என்று கேட்டாள் இந்துமதி, தாபத்தோடு.

சிறு மௌனத்தின் பின், ''வந்தாயிற்று. வேலையை வேகமாகப் பார்த்து முடித்துவிட்டு, உடனே கிளம்பி விடுவேன். சின்னக்கா வீட்டில் கூடப் பேருக்குத் தலையைக் காட்டிவிட்டுக் கிளம்பிவிட்டேன். அத்தானுக்கு வருத்தம்தான். என்ன செய்வது? உட்கார்ந்திருந்தால், வேலை நேரம்தான் வீணாகும்.... இடையில் போன் பண்ண வில்லையே என்று யோசியாதே. சீக்கிரமாக வீடு திரும்புவதற்காக அவ்வளவு தூரம் வேலையில் மூழ்கி இருப்பதாக எண்ணிக் கொள். வைக்கட்டுமா? இங்கே இப்போது, இரவு பதினொன்றுக்கும் மேல். இரவில் பார்த்து முடிப்பதற்காகக் கொஞ்சம் வேலையைக் கையோடு கொண்டு வந்திருக்கிறேன். வைக்கட்டுமா?'' என்று கேட்டு, உரையாடலை முடித்தான் அவன்.

''சிங்கப்பூருக்குப் போனவன், கருணா வீட்டில் இருந்து நாலு வார்த்தை பேசவில்லையாமே!'' என்று மறுநாள், இந்துமதியிடம் கிருபாகரி வருத்தப்பட்டாள்.

வேலை பற்றிக் கணவன் சொன்னதை இந்து தெரிவித்தபோது, அவளால், அதை ஏற்க முடியவில்லை.

''பெரிய வேலை!'' என்று முகத்தைச் சுழித்தாள். ''இவன் பார்க்கிற வேலை எனக்குத் தெரியாதா?''

''அதில்லை, அண்ணி...'' என்றவளை இடையிட்டு, ''நீ அறியாப் பெண், இந்து. உனக்கு ஒன்றும் தெரியாது. கடல் கடந்து, அவ்வளவு தூரம் சென்றிருக்கிறான். யாரோ மாதிரி எட்டிப் பார்த்துவிட்டு ஓடினால் எப்படி? உட்கார்ந்து பேசினால் பிரச்சினை வரும் என்று ஓடுவதாகச் சொல்லமாட்டார்களா?'' என்றாள் பெரியவள்.

என்ன பிரச்சினை வரும் என்று கேட்க எண்ணும் போதே, அத்தானுக்கு வருத்தம்தான் என்று தயானந்தன் சொன்னது நினைவு வர, இந்துமதி சும்மா இருந்தாள்.

ஆனால், உண்மையான பிரச்சினை என்னவென்று முழுக்க முழுக்கப் பாதிக்கப்பட்டவள் அவள் மட்டுமே.



18

தயானந்தன் வெளிநாட்டுக்குச் சென்ற பின், அடுத்த சில தினங்களை இந்துமதி பெரும்பாலும் தன்னுடைய பெரிய நாத்தனாருடனேயே கழித்தாள் எனலாம்.

மாமனாருக்கு, ஒரு வேளை இரு வேளையாகப் புத்தகம் படித்துக் காட்டிய போதும், 'தொலையாப் பகலே, முடியா இரவே' என்று, பொழுது நீண்டு கிடந்தது. ''கஷ்டப்படுவதற்கு, இங்கே என் குடிலுக்கு வந்துவிடு. செல்வத்தின் படிப்புக்குப் பாதகம் இல்லாதபடி, நாமே எப்படியாவது பொழுதைப் போக்கலாம்,'' என்று கிருபாகரி, அவளைத் தன்னுடன் கூட்டி வைத்துக் கொண்டாள்.

அதே போல, ஒரு நாள் பரமபதம் விளையாடினார்கள்.

பாம்பில் சறுக்குவதும், ஏணியில் ஏறுவதுமாக, விளையாட்டு முதலில் நன்றாகத்தான் இருந்தது.

போரடிக்கும் போல இருக்கும்போது, இருவருமாக உலாவப் போவார்கள்.

செல்வம் வந்துவிட்டால், கேரம், சீட்டு என்று விளையாட்டு மாறும்.

இரவு உணவின் பின், இந்துமதி தன் குடிலுக்குப் போவாள். என்னவோ, கணவனுக்கு, அவள் தங்கள் வீட்டில் தங்க வேண்டும் என்று விருப்பம் இருப்பதாக அவளுக்குத் தோன்றியிருந்ததால், கிருபாகரி, அவளது இடத்தில் தங்கும்படி கூறியும்கூட, அதைத் தட்டிக் கழித்துவிட்டு, இங்கேயே வந்து விடுவாள்.

ஆனால், "உன்னை விட்டால், பட்டினியாகவே படுத்துவிடுவாய்.. அதனால், எங்களோடு சாப்பிட்டு விட்டுப் போ!" என்று எதையாவது சாப்பிட வைத்து, அதன் பிறகே கிருபாகரி, தம்பி மனைவியை அனுப்பி வைப்பாள்.

நாத்தனாருக்காக, யார் இப்படிப் பார்ப்பார்கள் என்று அந்த நன்றியும், இந்துமதியின் மனதில் நிறைந்திருந்தது.

எப்படியோ மூன்று தினங்கள் மெல்ல மெல்ல நகர்ந்து மறைந்தன.

நாலாவது நாள், இரவு உணவு வந்ததை வேண்டாம் என்று விட்டு, சித்தி வீட்டு மீட் பிரட்டல்தான் வேண்டும் என்று செல்வம் பிடிவாதம் பிடித்தான்.

தேவைப்பட்டதைக் கொண்டு வரச் சொல்லி, அருமை மகனுக்காகக் கிருபாகரி அடுப்படியில் நின்றாள்.

அருகில் நின்று, ''சித்தி செய்யும்போது, இப்படித் தான் இருக்கும்! வெங்காயம் இப்படி வதங்கும் போது...'' என்று செல்வம் செய்முறை சொல்லித் தாயைச் செய்ய வைத்துக் கொண்டிருந்தான்.

இந்துமதியும் அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந் தாள்.

அப்போது முன்னறையில் டெலிபோன் மணி ஒலித்தது.

''அம்மா, அம்மா, இப்போது விட்டு விடாதீர்கள். ருசி கெட்டுவிடும்!'' என்று அடுப்பை அணைக்கப் போன தாயைத் தடுத்தான் செல்வம்.

''அப்படியானால், நீயாவது போய் எடு!'' என்று கிருபாகரி சொல்லிக் கொண்டிருந்த போதே, மூன்று முறை ஒலித்து, டெலிபோன் மணி நின்றுவிட்டது.

''பார்! யாரோ? எதற்காகக் கூப்பிட்டார்களோ? என்ன அவசரமோ? என்னவென்று தெரியாமல் போய்விட்டதே!'' என்று குறைப்பட்டாள் தாயார்.

''கிண்டுவதை நிறுத்தாமல் பேசுங்கள், அம்மா! அப்படித் தலை போகிற அவசரம் என்றால், திரும்பவும் முயற்சிப்பார்கள். அதை நினைத்து, நீங்கள் என் சாப்பாட்டைக் கெடுத்துவிடாதீர்கள்!'' என்றான் பையன்.

அவன் சொல்லி முடிக்கும் போதே, மீண்டும் டெலிபோன் ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

''சொன்னேனே!'' என்று அவனும், ''நீயாவது போய் எடுடா!'' என்று தாயும், ஒரே நேரத்தில் பேசினார்கள்.

''நான் போய்விட்டால், நீங்கள் தப்பாகச் செய்து விடுவீர்கள்!'' என்றான் அவன் அசையாமல்.

''நான் வேண்டுமானால்...'' என்று இந்துமதி அடுப் பருகில் வருமுன், ''ஐயையோ! வேண்டாம்!'' என்று பதறினாள் பெரியவள், ''அப்புறம், உன்னை இவன் ஆட்டிப் படைத்து விடுவான். அதை விட, நீ போய் ஃபோனை எடுத்துப் பேசு. என்ன விஷயம் என்று கேட்டுக் கொள். சீக்கிரமாகப்போ. திரும்பவும் வைத்து விடப் போகிறார்கள்!'' என்றாள் வேகமாக.

என்ன சேதியோ, என்னவோ என்ற பதற்றத்தில், நாத்தனாரின் குரல், அதட்டுவது போலக்கூட இருந்தது.

அவளது அவசரம் உணர்ந்து, அதட்டலைப் பொருட் படுத்தாமல், இந்துமதி வேகமாகச் சென்று ரிசீவரை எடுத்தாள்.

எதிர்ப்புறமும் மிகுந்த அவசரம் போலும். ஹல்லோ என்று இந்து விளிக்கு முன்பாகவே, படபடவென்று பொரியத் தொடங்கி விட்டார்கள்.

''இவ்வளவு நேரமாக மணியடிக்க விட்டுவிட்டு எங்கே போனாய்?'' என்று எரிச்சலாகப் பேசியது, இரண்டாவது நாத்தனார் கருணாகரிதான்.

தன் தமக்கை என்று எண்ணிப் பேசுகிறாள்.

எதிர்முனையில் நிற்பது யார் என்று சொல்லிவிடும் எண்ணத்தோடு திறந்த இந்துமதியின் வாய், அவள் பேசி யது, தயானந்தனைப் பற்றி. அதுவும், கொதிப்போடு.

''அக்கா, இந்த தயா என்னக்கா, இவ்வளவு மோச மாக நடந்து கொள்கிறான்? அவனைத் தம்பி என்று சொல்லவே எனக்கு அருவருப்பாக இருக்கிறதே!

‘‘முன்பானாலும், திருமணம் ஆகாமல் இருந்தது. கோகிலா தாய் வீட்டிலும் கண்டு கொள்வார் இல்லை. அவளோடு, விருப்பம் போலக் கூத்தாடித்தான். அங்கே உடம்பு சரியில்லாத அப்பா கண்ணயரும் போதெல்லாம், தனியே போய்ப் பூட்டிக் கொண்டு, என்னமோ பண்ணித் தொலைத்தார்கள். இப்போது திருமணம் ஆனபிறகும், அவளை இங்கே அனுப்பிவிட்டுப் பின்னோடு, அவனும் இங்கே வந்து இருந்துகொண்டு, ஆட்டம் போடுவதனால், என்னக்கா அநியாயம் இது?

‘‘அவளுடைய தாய் எப்படிப்பட்டவளாக இருந்தாலும், தகப்பனார் இவருக்குச் சொந்தம் அல்லவா? இங்கே வந்து கத்த மாட்டாரா?

‘‘இந்தக் கேவலம் எல்லாவற்றையும் விடு. கூடப் பொறந்த பாவம்! பட்டுத் தொலைக்கிறேன். ஆனால் இந்து?

‘‘பாவம்! வெகுளிப்பெண். இந்தப்பாவியை இப்படி நம்பிக் கொண்டு கிடக்கிறதே! அதை நினைத்தால்தான் நெஞ்சு கொதிக்கிறது. இன்னொருத்தி என்றால், எப்போதோ கண்டுபிடித்திருப்பாள். முகத்தில் காறித் துப்பி, கண்ணில் விரலை விட்டு ஆட்டியிருப்பாள். அவ்வளவு துணிச்சல் இல்லாதவள் என்றாலும், அவன் முகத்தில் விழிப்பதே பாவம் என்று கண் காணாமலாவது போயிருப்பாள்.

‘‘ஆனால், இந்துவுக்கு, அதற்கும் மனம் வராது என்று நினைக்கிறேன். தம்பி என்னதான் கெட்டவன் என்றாலும், அந்த விஷயம் தெரிந்து போனால்கூட, அவனைப் பிரிந்து போக, அவளால் முடியாதாம். நமக்குத் தம்பி

யாகப் பிறந்த பாவி, நாக்கூசாமல் பெருமையடிக்கிறான். அவ்வளவுக்கு அவனிடம் பைத்தியமாக இருக்கிறாளாம்!

"அந்த அப்பாவிப் பெண்ணை நினைக்கவே நெஞ்சைப் பிசைகிறதேக்கா! அவள் தெரிந்ததாகக் காட்டிக் கொண்டால்கூட, தயா, அவளை அங்கேயே சிறை வைத்துவிடுவான் போலத் தெரிகிறதுக்கா! இந்துவாகப் பிரிய நினைத்தால்... என்று அவனைத் தனியே போய்ப் பிடித்து நான் கேட்டதற்கு, அப்படித்தான் சொல்லுகிறான். அப்பா விரும்பியது போலப் பிள்ளைகள் வேண்டுமாமே! அவளை மயக்கியே வைத்துக்கொள்ள அவனால் முடியுமாம். அசிங்கம் பிடித்தவன்!

"இன்னும் திமிராக என்னென்னவோ! என்னக்கா, நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன், நீ ஒன்றும் பேசாமல்... ஐயோ! யாரோ வருகிறார்கள். கோகிலாவுடைய அப்பா மாதிரி இருக்கிறது. என்னென்ன களேபரம் நடக்கப் போகிறதோ? வைத்து விடுகிறேன், அக்கா! பிறகு, யாரும் இல்லாத நேரம் பார்த்துப் பேசுகிறேன்!" என்றதோடு, டெலிபோன் கருவி வழியே வந்த பேச்சொலி நின்று போயிற்று.

கவனத்துடன் சத்தமின்றி ரிசீவரைத் தாங்கியில் வைத்த இந்துமதிக்குச் சற்று நேரம் மூச்சுவிடக் கூட முடியவில்லை.

அவள் காதில் கேட்டது எல்லாம் உண்மைதானா?

டெலிஃபோன் கருவி மூலமாகக் கூடத் தலையில் இடி விழ முடியுமா?

விழுந்திருக்கிறதே!

இதில் சோகம் என்னவென்றால், காதில் விழுந்ததை, இன்னமும், அவளால் முழுமையாக நம்ப முடிய வில்லை என்பதுதான்.

அது உண்மையாக இருக்க முடியுமா?

இல்லை. யோசிக்க வேண்டும். அவள் தனியாக இருந்து யோசிக்க வேண்டும். யாருடைய குறுக்கீடும் இல்லாமல், யார் முகத்தையும் பாராமல்... ஐயோ!

யோசனைக்கு முதல் தடையாக, "ஃபோனில் யார், இந்தும்மா?" என்று கிருபாகரியின் குரல் அன்புக் கனிவுடன் கேட்டது. "ஏதேனும் பொருளுக்கு விளம் பரமா? இந்த நேரத்தில் கூடவா, ஆனால், நீ பதில் பேசிய சத்தமே கேட்கவில்லையே?"

இல்லை! இங்கே இருந்து யோசிக்க முடியாது. நெஞ்சுக்குள் பூகம்பம் அதிர்கையில் யோசிப்ப தெங்கே? ஆனால், தயானந்தனின் கேவலத்தைப் பற்றி இவர்களிடம் அவள் வாயால் தெரிவிப்பது அவளால் முடியாத காரியம். அதைப் பற்றி, எல்லோருமாக விலாவாரியாகக் கலந்து பேசுவதை நினைக்கவே அவருவருப்பாக இருந்தது. விஷயமே தெரியாதது போலக் காட்டிக் கொள்வதுதான் நிம்மதி.

எனவே, நாத்தனாரிடம் 'அது தப்பு எண்' என்று சொல்ல எண்ணி, "அது..." என்று தொடங்கிய இந்துமதி உடனே திகைத்தாள். திரும்பவும் பேசுவதாகக் கருணா கரி சொன்னாளே! தான் பொய் சொன்னது அப்போது தெரிந்து விடுமே! மரத்துப் போன மூளையைக் கசக்கி யோசித்து, "அண்ணி, நான் எடுத்ததுமே தொடர்பு விட்டுப்போய்விட்டது. அண்ணி! கொ... கொஞ்ச நேரம்

காதிலேயே வைத்துப் பார்த்தேன்.. ஒன்றுமே கேட்க வில்லை. அதனால் வைத்து விட்டேன். வந்து... அண்ணி... எனக்கு வந்து, எனக்கு வயிறு கொஞ்சம் உப்புசமாகத் தெரிகிறது. எனக்குச் சாப்பிட ஒன்றும் வேண்டாம்! நான் படுக்கப் போகிறேன்... என்ன?'' .அவள் வந்து விடை கொடுக்க முன்னரே, ஓட்டமும் நடையுமாகத் தன் குடிலுக்கு விரைந்தாள்.

கிருபாகரி நிதானமாக வாயிலுக்கு வந்து பார்க்கும் போது, அவள் பாதி தூரம் தாண்டியிருந்தாள்.

தன் வீட்டை அடைந்த பிறகும், அவளைக் கண்டதும் எழுந்து வந்த மரியாவைப் படுத்துக் கொள்ளச் சொல்லி விட்டு, அறைக்குள் சென்று கதவைச் சாத்திய பிறகே, இந்துவுக்கு மிகவும் தேவைப்பட்ட தனிமை, அவளுக்குக் கிடைத்தது.

ஆனால், தனிமை கிடைத்து என்ன செய்ய? 'ஹோ' வென்று, நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தபோது, எதுவுமே அவளுக்குச் சாத்தியமாகப்படவில்லை.

தன்னை மீறிச் சற்று நேரம் கண்ணீர் வடித்தவள், மிகுந்த பிரயாசைப்பட்டுத் தன்னை அடக்கினாள்.

அவள் தனிமையை நாடி வந்தது, தயானந்தன் தப்பு செய்திருப்பானா என்று யோசித்து அறிவதற்கு.

அதை விட்டுக் கண்ணீர் வடித்தால், அவனைக் குற்ற வாளியாகவே கருதி விட்டதாக அல்லவா, அர்த்தம்.

இல்லை. இதில் ஏதோ தப்பு இருக்கிறது. தப்பு இருக்கக் கூடும்.

தயானந்தன்! எவ்வளவு அன்பானவன்!

கைப்பிடிப்பு இல்லாமல், கௌரவமான முறையில் அவளுடைய தாயாரின் செலவு நடக்க, எவ்வளவு கெட்டிக்காரத்தனமாக உதவியிருக்கிறான்!

அவளிடம் அன்பு காட்டியதுகூட, அவனது கெட்டிக் காரத்தனத்தின் ஒரு செயல்பாடுதானோ?

நேசம் என்று நினைத்தது, இல்லையோ என்று நினைக்கும்போதே, அவள் மனம் மீண்டும் கசங்கியது.

இல்லை யில்லை, நேசம்தான் என்று, பிடிவாதமாக யோசித்துப் பார்த்தாள்.

நேசம் இல்லையென்றால், அவளை, அவன் மணக் கவே தேவையில்லையே! அவனது உயர்நிலைக்கு, அவன் யாரை வேண்டுமானாலும் மணம் புரிந்திருக்க லாமே... என்று எண்ணுபோதே, செல்வம் சொன்னது மிகவும் அசந்தர்ப்பமாக நினைவு வந்தது.

'உடனே ஒரு பெரிய இடத்துப் பெண்ணை மணந்து ஒரு வருஷத்துக்குள் பேரக் குழந்தையைப் பெற்றுக் கொடுக்கவில்லை யென்றால், சொத்தில் ஒரு பைசா கிடைக்காது!

தயானந்தனிடம் தாத்தா சொன்னதைக் கேட்டதாகச் சத்தியமே செய்தானே! கணவனிடம் கொண்டிருந்த அன்பிலும், நம்பிக்கையிலுமாக, அவள் எதையும் பெரிதாக எண்ணவில்லை.

இப்போது யோசித்தாள்.

அவன் சத்தியம் செய்வதைத் தொடர்ந்து நடந்த பேச்சும், வார்த்தை பிசகாமல், அவளுக்கு நினைவுக்கு வந்தது.

அப்போது புரியாத பல உட்குறிப்புகள் இப்போது உள்ளங்கை நெல்லிக் கனி என்பார்களே, அதுபோலத் தெள்ளத் தெளிவாகத் தெரிய வந்தன.

பிறப்பில் தவறு இருந்த கோகிலாவை மகன் மனைவியாக்கிக் கொள்ளாமல் தடுப்பதற்காகப் பாண்டுரங்கன் போட்ட திட்டம், அந்தப் பயமுறுத்தல்!

அதில் கொஞ்சமும் ஐயமின்றி மாட்டிக் கொண்ட பெரிய குடும்பத்து அசட்டுப் பெண், இந்துமதி.

என்ன அநியாயம்!



19

தயானந்தன் என்ன சொன்னதாகக் கருணாகரி சொன்னாள்?

மனைவியை மயக்கியே வைத்துக் கொள்ள அவனால் முடியும் என்றானாமே!

கிட்டத்தட்ட சரியாகத்தான் சொல்லியிருக் கிறான்!

அவனிடம் அவ்வளவு மயங்கிக் கிடந்திராவிட் டால், என்றைக்கோ அவளுக்குச் சந்தேகம் வந்திருக்க வேண்டுமே!

மாறாக, ஐயம் கொள்ள வேண்டிய தருணங்களில் கூட, அவ்வப்போது அசட்டு விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டிருந்ததை எண்ணுகையில், அவளுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

முதல் நாளே, 'தாத்தா தூங்கும்போது, நர்சுடன் மாமா தனியாகப் பேசுவார்,' என்று செல்வம் சொன் னான். கருணாகரி சொன்னதுபோல, தந்தை கண்ண யர்ந்ததும், நர்சோடு ஆட்டம் போட்டிருக்கிறான்.

ஆனால், அதிலும் ஒரு நல்லதைக் கண்டுபிடித்துத் தன் அயோக்கியக் கணவனை உன்னத புருஷனாக்கியதை எண்ணுகையில், இப்போது அவளது உள்ளம் கூசியது.

கோகிலா அவள் கண்ணில் படாமல் ஒதுங்கியது, அவளுக்கு உன்னை எப்படிப் பிடிக்கும் என்று வாய் தவறிச் சொல்லிவிட்டு, அதற்கு ஏதோ ஒரு விளக்கத்தை அண்ணிமார் கொடுத்தது, மாமனார் குடிலுக்கு முன்னறி விப்புக் கொடுத்து விட்டுப் போக வேண்டும் என்றது, அதற்கு நாத்தனார்கள் ஆச்சரியப்பட்டது, நேரில் கண்டபோது கோகிலாவின் முக பாவம், கடவுளே, எத்தனை?!

தூரப்போய்க் கள்ளத்தனமாகக் கோகிலா, தயானந் தனின் காரில் ஏறியதைக்கூட, அவளுக்குச் சந்தேகப் படத் தெரியவில்லையே!

இதெல்லாம், பேச்சுவாக்கில், எப்படியாவது வெளி வந்துவிடுமோ என்றுதான், அக்கா வீட்டுக்கு மனைவி போவதையே தடுக்க முயன்றிருக்கிறான்.

பெரிதாகக் குறிக்கோள்தான் முக்கியம் என்றானே. எப்பேர்ப்பட்ட குறிக்கோள்!

ஆனால், அவன் அஞ்சியது போலவே, விஷயம் வெளியிடப்பட்டுவிட்டதே! இதைத்தான் விதி என்பதா?

கெட்டவர்கள் எவ்வளவுதான் திட்டமிட்டுக் குற்றம் செய்தபோதும், ஏதாவது ஒரு சிறு விஷயத்தில் மாட்டிக் கொள்வார்கள் என்பது சரிதான் போல.

ஆனால், இன்னமும் கணவனைக் கெட்டவனாகக் கருத முடியாமல், அவளது பேதை மனம்தான் தவி யாய்த் தவித்தது.

ஆனால், அவள் மனம் என்னதான் தவித்த போதும், அவன் கெட்டவன்தான் என்பது, சர்வ நிச்சயமாக உறுதிப்பட்டுவிட்ட ஒன்று!

ஏனெனில், மற்ற அனைத்திலும், அவளது விளக்கங் களே சரியாக இருக்கக் கூடும் என்று ஒரு மெல்லிய சந்தேகம், இன்னமும் இந்துவுக்கு இருந்தபோதும், கருணாகரியின் அந்தக் கடைசிப் பேச்சுக்கு எந்தவித விளக்கமும் சொல்வதற்கில்லை.

அந்தப் பேச்சு, அவளது காதுகளுக்காகப் பேசப் பட்டது அல்ல! செய்கையறியாத தவிப்பில், தம்பியின் நடத்தை பற்றிய கொதிப்பில், அவளுடைய தமக்கை யின் காதுகளுக்காக மட்டுமே பேசப்பட்டவை. அந்த இடத்தில் இந்துமதி இருப்பாள் என்றோ, அப்படி இருந்து டெலிபோனை அவள் எடுப்பாள் என்றோ, கருணாகரி எதிர்பார்க்க வழியில்லை.

சகோதரிகளுக்குள் நடந்த ஒளிவு மறைவற்ற பேச்சின் மூலம், கடவுள் இந்துமதிக்கு உண்மை தெரிய வைத்திருக்கிறார். அவ்வளவுதான்.

ஆனாலும், எப்படி முடியும்?

தயானந்தனின் கொஞ்சல், குலவல், அணைப்பு!

கண்ணால் சிரித்தபடி, எதையாவது சொல்லுவானே!

அவனது கைகளுக்குள் அடங்குவதற்காகவே பிறவி எடுத்திருப்பதாக நினைப்பாளே!

அதே கைகளுக்குள் அந்தக் கோகிலாவும் இருந் திருக்கிறாளே!

இந்த வினாடியில்கூட, அவர்கள் இருவரும்... அதற்கு மேல், இந்துவால் எண்ணிப் பார்க்கக்கூட முடியவில்லை.

அப்படியிருக்க, இனியும் அவனோடு எப்படி வாழ முடியும்?

கணவனைப் பிரிவது, உயிரையே இழப்பது போல வேதனைதான் என்பதையும் அவள் அறிந்தே இருந்தாள்.

அந்த வேதனைக்கு ஒரே மாற்று மருந்து இருந்தது.

அருவருப்பான இந்த உண்மை தெரியாத ஏமாளியாக இதுவரை இருந்த மாதிரியே, இப்போது தெரிந்து விட்டதைக் காட்டிக் கொள்ளாமல், இப்படியே இருக்கலாம்.

மாமனார் விருப்பம் போல, கௌரவமான வாரிசுகளைப் பெற்றுப் போட்டுக் கொண்டு, இதே அசட்டு விளக்கங்களைச் சொல்லிக் கொண்டு, இப்படியே இருந்து, காலத்தை ஓட்டி விடலாம்.

அவனைப் பிரியும் அந்த வேதனையை அனுபவிக்கத் தேவையிராது.

ஆனால், இப்போது அவளுக்கு உண்மை தெரியுமே!

இன்னொருத்தியைத் தொட்ட கையால், அவன் தன்னைத் தொடுவதை, அவளால் எப்படிச் சகிக்க முடியும்?

நினைப்பே குமட்டும்போது, நிஜத்தை எப்படி ஏற்பாள்?

அதைவிட, அவனைப் பிரியும் வேதனையை அனுபவிப்பது எவ்வளவோ மேல்!

குறைந்த பட்சமாகத் தன் மதிப்பேனும் மிஞ்சும். இவ்வளவுக்கு இழிந்து விட்டோமே என்று, தன்னுள் தானே குன்ற நேராது!

பிரிவது என்பது, உள்ளூர உறுதியான பிறகு, அதைச் செயல்படுத்துவது பற்றிச் சிந்திப்பதில், சிரமப்பட்டேனும் மனதை ஈடுபடுத்த முடிந்தது.

எப்படிப் பிரிவது? எப்போது பிரிந்து போவது? எங்கே போவது?

யோசிக்கும் போது, விஷயம் தெரிந்தால்கூட, அவளை இங்கேயே சிறை வைப்பது என்று தயானந்தன் ஏதோ சொன்னதாகக் கருணாகரி கூறியது நினைவு வந்தது.

இந்தக் காலத்தில் அது முடியுமா என்று யோசித்தால், இப்படித் தனி இடத்தில் முடியும் போலவும் தோன்றிற்று.

எப்படியும், முதலைக்குத் தண்ணீரில் பலம். இது அவனது இடம்.

கணவனை முதலைக்கு ஒப்பிடுகிறோம் என்று, அது வேறு நியாயமற்று வலித்தது.

அது எப்படியாயினும், தயானந்தனின் முகத்தில் விழிப்பதற்கு, அவளுக்கு வெறுப்பாகவே இருந்தது. நம்பி நேசித்தவளை ஏமாற்றியவன் அல்லவா?

அத்தோடு, நேரில் வந்து, ஏதாவது கதை சொன்னால், அவன் மீதுள்ள ஆசையில் அதை நம்பத் தோன்றிவிடுமோ என்று தன்னிடமே அவளுக்குப் பயமாகவும் இருந்தது.

எனவே, தயானந்தன் சிங்கப்பூரில் இருந்து திரும்பி வருமுன் இங்கிருந்து கிளம்பி விடுவது அவளுக்கு, முக்கியமாக அவளது தன்மானத்துக்கு நல்லது.

அதன் பிறகு?

அது அவளுக்கே மலைப்பாகத்தான் இருந்தது.

தயானந்தனை மீண்டும் சந்திக்கவே நேராதபடி, எங் கேனும் கண் மறைந்து போகத்தான் அவளுக்கு விருப் பம். எவ்வளவு வருத்தமாக இருந்தாலும், போய்த்தான் ஆக வேண்டும்.

ஆனால், அவளைப் பெற்றவளை ஒருதரம் பாராமல், அவள் எப்படி இருக்கிறாள் என்று அறிந்து கொள்ளாமல், அப்படிச் செல்வது தப்பு என்று நினைத்தாள்.

பண விஷயம் பற்றிப் பிரச்சினை இல்லை என்று அவளுக்குத் தெரியும்.

ஆனாலும், அன்னையை நேரில் பார்த்துவிட்டு, மகள் மகிழ்ச்சியோடு இருப்பதாக ஒரு மாயையை உண்டு பண்ணிவிட்டு, தேவகியிடம் மட்டும் உண்மையைத் தெரிவித்துவிட்டு, அதன் பின் கண் காணாமல் போய் விடுவதாகத் தெளிவற்ற திட்டம் ஒன்று அவளுக்குத் தோன்றியிருந்தது.

எல்லா வகையிலும், இனித் தாயைத் தேவகி மட்டுமேதான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று, தேவகியிடம் கூறுவது முக்கியம் என்று இந்துமதி எண்ணினாள்.

அந்தக் கடமை முடிந்துவிட்டால், அப்புறம் இந்தப் பரந்த பாரத நாட்டில், தயானந்தனின் கண்ணுக்கு மறைந்து, அவள் வாழ இடமோ, வழியோ இல்லாமலா போகும்?

‘எங்கே போவது? என்ன செய்வது?’ போன்றவற்றையெல்லாம், போகப் போக யோசித்து முடிவு செய்யலாம் என்று எண்ணி, ஒதுக்கி வைத்தாள்.

எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் போட்டுக் குழப்பக் கூடாது.

முதலில் இங்கிருந்து வெளியேறுவதை, மாமனார், மற்றவர்கள் தடுக்காத விதத்தில், விசித்திரமாக எண்ணாத வகையில், செயல் படுத்த வேண்டும்.

தீவிரமாக யோசித்து ஒரு வழியையும் கண்டுபிடித்து வைத்தாள்.

கண்ணீரைத் தட்டிவிட்டபடியே, தேவையான பொருட்களை எடுத்து வைத்தாள்.

ஃபோன் செய்து, சில வேலைகளை முடித்தாள்.

மறுநாள் காலையில், பாண்டுரங்கனின் குடிலுக்குச் சென்றாள்.

காலை உணவு, மருந்து மாத்திரைகள் எல்லாம் முடித்து, அவரது வாயைத் துடைத்துவிட்டுக் கொண்டிருந்தாள் நர்ஸ்.

வீட்டு மருமகளைக் கண்டதும், இனிமையாக முறுவலித்துவிட்டுப் பயன்படுத்திய பாத்திரங்களை எடுத்துக் கொண்டு அகன்றாள்.

நர்ஸ் விலகிச் சென்றதும், ''என்னம்மா விஷயம்?'' என்று பாண்டுரங்கன் மருமகளிடம் வினவினார்.

அன்பாகக் கேட்பவரிடம் பொய் சொல்வது, கொஞ்சம் கடினமாகத்தான் இருந்தது. ஆனால், அவருடைய மகன் செய்திருக்கும் வேலைக்கு, வேறு வழி இல்லையே!

ஒரு பெரிய மூச்சை எடுத்துக் கொண்டு, ''அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று, இரவு ஃபோன் வந்தது மாமா. நான் போய்ப் பார்த்துவிட்டு, அப்புறமாக, முடிகிறபோது வருகிறேன். விமானத்தில் டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்து விட்டேன். டிராவல் ஏஜென்சியே காரும் கொண்டு வந்து விடுகிறார்கள்! இதோ கொஞ்ச நேரத்தில் வந்துவிடும். உங்களிடம் சொல்லத்தான் வந்தேன்!'' என்றாள் அவள்.

பலமுறை சொல்லி, உருப்போட்டு வைத்திருந்ததால், ஒரு சிறு தடுமாற்றம் தவிர, இந்துமதியால் கோர்வையாகவே பேச முடிந்தது.

இனி, கிருபாகரியிடமும் விடை பெற்றுக் கொண்டால், வேலை முடிந்தது.

ஆனால், மகளை அழைத்து வரக் காரியஸ்தரை அனுப்பிவிட்டு, "இரவு அண்ணி வீட்டில் வைத்து ஃபோன் வந்ததாம்மா? இரண்டு மூன்று தரம் அங்கே ஃபோன் மணி அடித்துக் கொண்டே இருந்ததாக மணி சொன்னான்," என்றார் பாண்டுரங்கன்.

மணிவாசகம் காரியஸ்தரின் பெயர். பாண்டுரங்கன் மட்டும் அவரை ஒருமையில் விளிப்பார்.

அதிகம் பேசப் பிடிக்காமல், இலகு வழியாக ஆமாம் என்று சொல்ல வந்ததை இந்துமதி அடக்கிக் கொண்டாள்.

நாத்தனாருக்கே இனிமேல்தான் விவரம் தெரியும் என்கையில், அவள் வீட்டுக்கு ஃபோன் வந்ததாக எப்படி ஒப்புவது?

"இல்லை மாமா, அங்கிருந்து, நான் எங்கள் குடிலுக்குப் போன பிறகு வந்தது!" என்றாள் மரத்த குரலில்.

உரையாடலை விரும்பாத குரல். வருத்தமாக எடுத்துக் கொண்டு, பேசாதிருக்க மாட்டாரா என்றிருந்தது அவளுக்கு.

அவள் விரும்பியது போலவே, அவரும் மேலே பேசவில்லை.

டிராவல் ஏஜென்சியின் கார் வந்து வாயிலில் நிற்க, கிருபாகரியும் ஓடி வந்தாள்.

"பாரேன்! தயா இல்லாத சமயத்தில், இப்படி திடீர் என்று கிளம்பும்படி ஆகிவிட்டதே!" என்று திரும்பத் திரும்பச் சொல்லி வருத்தப்பட்டாள். எப்படியும், இரண்டு, மூன்று நாட்களில் தயா வந்து விடுவான். அவ்வளவு

வேகமாக வேலையைப் பார்த்து முடித்துக் கொண்டு இருக்கிறானாம். வந்ததும், உன்னைத் தேடி, நேரே அங்கேதான் வந்து நிற்பான். எனக்கு நன்றாகத் தெரியும். அப்படியே உன்னைத் திரும்ப அழைத்துக் கொண்டும் வந்துவிடுவான். நீ வேண்டுமானால், பார். நான் சொல்வது போலத்தான் நடக்கும்!'' என்றாள் தொடர்ந்து.

இரண்டு மூன்று நாட்களுக்குள்!

அப்படியானால், இந்த இரண்டே நாட்களுக்குள், கோவையிலிருந்து கிளம்பிவிட வேண்டும் என்று, மனதிற்குள் குறித்துக் கொண்டாள் இந்து.

ஆனால் நல்ல வேளையாக யாரும் அவளைத் தடுத்து நிறுத்தவில்லை.

''ஜாக்கிரதையாகப் போம்மா!'' என்று உருகி வழியனுப்பினாள் கிருபாகரி.

பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தார் பாண்டுரங்கன்.

எல்லோரும், அவரவர் வேலையாகக் கலைந்து போனபின், ''கோவை நிர்வாகிக்கு ஒரு ஃபோன் போடு மணி!'' என்றார்.



## 20

மும்பையில் விமானத்தில் ஏறும் வரை, இந்துமதி திட்டமிட்டபடியே எல்லாம் நடந்தது.

யாரும், எதற்காகவும், அவளைத் தடுக்கவில்லை. பயணத்தை நிறுத்தவுமில்லை. விமானம்கூட, எந்தவிதமான பழுதுமின்றி, குறித்த நேரத்தில் கிளம்பி வானில் பறக்கத் தொடங்கி விட்டது.

தயானந்தனின் பிடியிலிருந்து தப்புவது, இவ்வளவு எளிதாக இருக்கும் என்று எதிர்பார்க்கவே இல்லையே என்று, ஒருவித ஏமாற்றம் கலந்த நிம்மதியோடு அவள் இருக்கையில் சாயும்போது, ''அட நீ தர்மராஜன் சாருடைய பேத்தியில்லை? உன் பெயர் இந்துதானே? நல்லவேளை, தெரிந்த ஆளாய் நீ கிடைத்தாய். பயணம் போரடித்துப் போகுமோ என்று எனக்கு ஒரே கவலை யாக இருந்தது!'' என்று உரைத்தவாறு, ஒரு பெண்மணி அவள் அருகே வந்து அமர்ந்தாள்.

தன் துக்கத்தில் மூழ்கிக் கிடந்த இந்துமதிக்கு, அந்தப் பெண்மணி அப்படி வந்து உட்கார்ந்தது கொஞ்சமும் பிடிக்கவே இல்லை. நிம்மதியாக வேதனைப் படக்கூட முடியாதா என்று, வெறுப்பாக வந்தது.

அத்தோடு, அடுத்துச் செய்ய வேண்டியதைப் பற்றி யோசித்துத் திட்டமிடவும் அவள் இந்தப் பயணத்தைத் தான் நம்பியிருந்தாள்.

ஆனால், முகத்தில் அடித்தாற்போல யாரிடமும் பேசிப் பழக்கம் இல்லாததால், அந்தப் பெண்மணியின் முகத்தைப் பார்த்து, அவளை அடையாளம் கண்டுகொள்ள முயன் றாள்.

பார்த்த முகம் என்பதற்கு மேல் புரியாது போகவும், ''நீங்கள்... சாரி... உங்களுக்கு என்னைத் தெரிகிறது. எனக்கு உங்களைத் தெரியவில்லை, பாருங்கள்,'' என்று இழுத்தாள்.

''இதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை,'' என்றாள் அந்தப் பெண்மணி. ''நீ தர்மராஜன் சாருடைய பேத்தி. அந்த ராஜ்ஜியத்துக்கு அரசகுமாரி. நான் 'தர்மா'

விளம்பரங்களுக்குச் சமையல் குறிப்பு எழுதிய ஒரு சாதாரண அன்னம்மா. அவ்வளவுதானே? என் சமையல் குறிப்புகள் எல்லோருக்கும் தெரியுமே தவிர, என்னைத் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லைதானே?'' என்று எளிதாக நிலைமையை ஒப்புக் கொண்டவளின் முகம் சட்டெனப் பிரகாசமுற்றது.

''இனிமேல், அந்த நிலைமை மாறப் போகிறது. பட்டி தொட்டிக்குப் போனாலும், மக்கள் என்னை அடையாளம் கண்டு கொண்டு மொய்க்கப் போகிறார்கள், பார்!'' என்று தொடர்ந்து மகிழ்ச்சியோடு கூறினாள்.

வியப்புக்குரிய விஷயம்தான்.

ஆனால், அதை என்னவென்று கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆர்வம், இந்துமதிக்குக் கொஞ்சமும் வரவில்லை.

ஒரு மரியாதைக்காக, ''அப்படியா?'' என்று மட்டும் கேட்டு வைத்தாள், அவள்.

ஆனால், அன்னம்மாவுக்கு ஒப்புக்காக இந்து கேட்ட அந்த ஒரு சொல்லே போதுமானதாக இருந்தது.

மடமடவென்று, தன் வாழ்க்கைச் சரித்திரத்தையே சொல்லத் தொடங்கிவிட்டாள்.

''நானும் ஒரு பெண்ணாகத் தலை நிமிர்ந்து வாழ்கிறேன் என்றால், அதில் முதல் அடி எடுத்து வைக்க உதவி செய்தது, தர்மராஜன் சார்தானம்மா. ஒன்றும் இல்லாமல், தன்னந்தனியே திகைத்து நின்ற போது, என் சமையல் குறிப்புகளை, அவரது தயாரிப்புகளின் உறையில் அச்சடித்து வெளியிட்டார். எனக்கு, அப்போது ரொம்பவும் தேவைப்பட்ட பணத்தோடு, கொஞ்சம் புகழும் கிடைத்தது. அடுத்து, இங்கே மும்பையில், ஒரு

பெரிய மசாலாத்தூள் தயாரிப்பு நிறுவனத்தில் வேலை கிடைத்தது. இப்போது, சென்னையில், ஒரு டீவி சேனலில் சமையல் குறிப்பு சொல்வதோடு, அது முடியுமுன், நான் மிகவும் பிரபலமாகி விடுவேன் அல்லவா?'' என்று மகிழ்ச்சியோடு விவரித்தாள்.

அன்னம்மாவைப் பொறுத்தவரையில், மிக நல்ல வாய்ப்புதான். அவள் மனமகிழ்வதில் நியாயம் இருந்தது.

இன்னொரு சமயம் என்றால், இந்துமதியும், இந்த மகிழ்ச்சியில் முழு மனதோடு பங்கேற்றிருப்பாள்.

ஆனால், மனதை அழுத்திக் கொண்டிருந்த துன்பம், வேறு எதையும் உணர விடுவதாக இல்லை.

''ஆமாம், மேடம்! வந்து... எனக்குக் கொஞ்சம் தலைவலி..'' என்று நெற்றிப் பொட்டை அழுத்தி விடும் சாக்கில், கண்களில் அரும்பியிருந்த நீர்த்திரையையும் துடைத்துக் கொண்டாள் அவள்.

அக்கறையே உருவாகிப் போனாள் அன்னம்மா. "அடடா! தலைவலிக்கு ஏதாவது மாத்திரை வேண்டுமா? என்னிடம் கோடாலித் தைலம் கூட இருக்கிறது. தடவிக் கொள்கிறாயா?'' என்று அவள் கைப்பையைத் திறக்கவும், இந்துவுக்கு ஒருமாதிரியாகி விட்டது.

இரவில் தூங்காததும், அழுததுமாகத் தலைவலி இருக்கத்தான் செய்தது.

ஆனால், அவள் பேச்சைத் தவிர்ப்பதற்காக அல்லவோ, தலைவலி என்றாள்.

கழிவிரக்கம் மிகுந்தவளாக, ''லேசாகத்தான் இருக்கிறது. தானாகச் சரியாகி விடும். அப்புறம், நீங்கள் சொல்லுங்கள். இங்கே சென்னையில், டீவி நிறுவனம்,

உங்களுக்குத் தங்குமிடம் எல்லாம் தருகிறார்களா?'' என்று பெரு முயற்சி செய்து அன்னம்மாவின் முன் னேற்றத்தில் தன் மனதை ஈடுபட வைத்தாள்.

''எல்லா வசதிகளும் தருகிறார்களே!'' என்றாள் அவள் மகிழ்ச்சியோடு.

''வீடு எல்லாம் இப்போதே தயார். உதவிக்கு ஓர் ஆள் வைத்துக் கொள்ளலாம். எனக்கும் தேவைதான். தனி ஆளாகக் கிடைத்தால், கூடவே தங்கிக் கொள்ளச் சொல்லலாம். கொடுக்கப்படும் நேரத்துக்குள் முடிக் கும்படியாக, நல்ல தமிழில் எழுதக் கூடிய ஒரு பெண் கிடைத்தால் நல்லது. உனக்கு யாராவது தெரிந்தால் சொல்லுகிறாயா? சம்பளம் நன்றாகத்தான் தருவார்கள்!''

தன் பிரச்சினைகளைச் சிரமப்பட்டு ஒதுக்கி வைத்து விட்டு, ஒரு மனிதாபிமானத்துக்காகத்தான் அன்னம்மா வின் பேச்சை இந்துமதி கவனித்தது.

ஆனால், இப்போது, தன் பிரச்சினைக்கும் இதில் ஒரு தீர்வு இருப்பது போல அவள் உணர்ந்தாள்.

இந்த அன்னம்மாவுடைய உதவியாளாக, அவளோடு போய்த் தங்கிக் கொண்டால், அதுவே, அவளுக்கு நல்லதொரு மறைவிடம் ஆகிவிடாதா?

அவளுக்குத் தமிழ் நன்றாக எழுத வரும்.

இந்த அன்னம்மாவுக்கும் தாத்தாவிடம் நன்றி, மரி யாதை இருக்கிறது. அவருடைய பேத்தி என்பதாலேயே, தனக்கு அந்த வேலையைத் தந்து உதவக்கூடும்.

அவளுக்கும் உணவு, உடை, உறைவிடத்துக்குப் போதுமான அளவு ஏதோ வந்தால் போதும். மற்ற ஆசைகள் எல்லாம்தான் நசித்துப் போயினவே!

ஓர் இரண்டு நாட்கள், அந்த வேலைக்கு வேறு ஆட்கள் வைத்து விடாமல் பொறுத்து இருக்கும்படி, அன்னம்மாவிடம் இந்துமதி கேட்கவும், அவளும் உற்சாகத்துடன் சம்மதித்தாள்.

"யாரோ உனக்குத் தெரிந்த பெண் இருக்கிறாள். அதுதானே? தெரிந்த நல்ல பெண் என்றால் நிம்மதியாய் இருப்பேன்!" என்று மகிழ்ச்சியோடு தன் விசிட்டிங் கார்டை இந்துவிடம் கொடுத்தாள்.

திடுமென வந்து நின்ற மகளைப் பார்த்ததும், பத்மாவதி ஆனந்தத்தில் பூரித்துப் போனாள்.

"பார்த்தீர்களா அண்ணி, இன்றைக்குக் காலையில் இருந்தே காக்காய் கத்திக் கொண்டே இருக்கிறதே, யார் வரப் போகிறார்களோ என்று யோசித்து யோசித்துப் பார்த்தேன். கடைசியாக, நம் இந்துக் குட்டி வந்திருக்கிறது. இன்றைக்கு, அவளுக்குப் பிடித்த அவியல், மொச்சைக் குழம்பு எல்லாம் செய்யச் சொல்லி விடுங்கள். இந்தும்மா! நம் தோட்டத்தில், மஞ்சளும் ஆரஞ்சுமாகப் பந்து பந்தாக மாரிகோல்டு எப்படிப் பூத்திருக்கிறது, தெரியுமா? வா! வந்து பார்!" என்று அழைத்தாள்.

திருமணமாகிக் கணவனுடன் சென்ற பெண், முன்னறிவிப்பின்றித் தன்னந்தனியாக வந்திருக்கிறாளே என்று, அவளுக்குத் தோன்றவே இல்லை.

மகள் வந்திருக்கிறாள். அதுவே சந்தோஷம்.

அந்த அளவில், அவளது அன்பு நின்றுவிட்டதில், மகளுக்கும் நிம்மதியே. ஆனால், அன்னைக்குத் தோன்றாதது, அத்தை தேவகிக்குத் தோன்றியிருந்தது.

எனவே, தாய் மகள் குலாவல்கள் எல்லாம் முடிந்து, இந்துமதி தனியாக இருந்த நேரத்தில் வந்து, அவளோடு பேசினாள்.

இந்துமதியும் இதை எதிர்பார்த்தே இருந்தாள். அவளுக்கும் தன் அத்தையிடம் பேச வேண்டியிருந்ததே!

சுற்றி வளைத்துப் பேசாமல், அவள் நேராக விஷயத்துக்கு வந்தாள்.

"அத்தை, என் திருமண வாழ்வு முடிந்து விட்டது. இனிமேல் தயானந்தனின் முகத்தைப் பார்க்கக்கூட எனக்கு விருப்பம் இல்லை. எனவே, ஒரு வேலை தேடிக் கொண்டு தனியாக வாழப் போகிறேன். இது பற்றி, அம்மாவிடம் எதுவும் சொல்ல வேண்டாம். நான் இங்கே இருப்பதாகவே எண்ணிக் கொண்டு, இப்போது போலவே அம்மா எப்போதும் நிம்மதியாக இருக்கட்டும். இத்தனை ஆண்டுகளாகச் செய்துவரும் பேருதவி போலவே, இனியும் நீங்களேதான் அம்மாவைப் பார்த்துக் கொள்ள வேண்டும், அத்தை! க... கடைசிவரை!" என்றாள்.

பலமுறை மனதில் ஒத்திகை பார்த்ததுதான் என்றாலும், குரல் கடைசியில் தழுதழுப்பதை, அவளால் தடுக்க முடியவில்லை.

தேவகி அதிகம் பேசுகிறவள் அல்ல. எனவே நடந்தது என்ன, ஏது என்று தூண்டித் துருவிக் கேட்கவில்லை.

மருமகளை ஒரு தரம் கூர்ந்து பார்த்துவிட்டு, "பத்மா என் தங்கையைப் போல! அவளை இதுவரை, யாரும் சொல்லி, நான் பார்த்துக் கொள்ளவில்லை. ஆனால், கடைசிவரை என்றால், நீ எங்கே போவதாக உத்தேசம்?" என்று வினவினாள்.

ஒரு கணம் தயங்கியவள் தலை நிமிர்ந்து, பெரிய வளை நேரே பார்த்து, "கண் காணாமல்!" என்று பதில் சொன்னாள். "யாருக்கும் தெரியும்படி எங்கே இருந் தாலும், நான் மீண்டும் அங்கே திரும்பிச் செல்லும்படி நேர்ந்துவிடும்! அங்கே போக நேர்ந்தால், தற்கொலை தவிர, எனக்கு வேறு வழியில்லை, அத்தை! அதனால் தான் இந்த முடிவை எடுத்தேன்!" என்று முடித்தாள்.

"ஆனால், உணர்ச்சி வசப்பட்ட சமயங்களில் எடுக்கும் முடிவுகள் பெரும்பாலும் சரியாக இருப்பது இல்லை, இந்து! நாலுநாள் ஓய்வாக இருந்துவிட்டு, அப்புறமாக யோசித்துப் பாரேன்!" என்று தேவகி ஓர் ஆலோசனை சொன்னாள்.

நாலு நாளா? இரண்டு நாட்களுக்குள், அவள் இங் கிருந்தே போயாக வேண்டுமே!

மடியில் கோத்திருந்த கைகளைப் பார்த்தபடி, "இல்லை, அத்தை! அது சாத்தியம் இல்லை!" என்றாள் இந்துமதி தெளிவாக.

"எல்லோரையும் போலச் சொல்லுகிறேன் என்று நினைக்காதே. தயானந்தனைப் பற்றித் தப்பாக யாரும் சொல்லி, நான் கேட்டதில்லை. உனக்குக் கிடைத்த தகவல் தவறாகவும் இருக்கலாமே. அந்தக் கோணத்தில் யோசித்தாயா?"

"தயாவுக்காக, என்னை விட அதிகமாக யாராலும் வாதாட முடியாது, அத்தை! அந்த அளவுக்கு அவரிடம் அன்பு வைத்திருப்பவள், நான் இன்னமும். அவருக்காக எவ்வளவோ, யோசித்துப் பார்த்துவிட்டேன். ஒன்றும் பயனில்லை. ப்ளீஸ்! வேண்டாம் அத்தை. தயவு பண்ணி,

அவர் பேச்சு வேண்டாம். நாளைக்கு நான் கிளம்பும் வரையேனும், என்னை நிம்மதியாக இருக்க விடுங்கள்,'' என்றாள் பெண், களைத்த குரலில்.

அந்தக் களைப்பில் இருந்த சோகம் புரிந்து, தேவகி யும், அத்தோடு அந்தப் பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

ஆனால், செல்லும் இடத்தையேனும் சொல்லுமாறு அவள் எவ்வளவோ கேட்டபோதும், இந்துமதி அதைச் சொல்ல மறுத்து விட்டாள்.

''நான் இங்கே வந்தது, எல்லோருக்கும் தெரியும். சொல்லி விட்டுத்தான் வந்தேன். இல்லாவிட்டாலும், என்னைத் தேடி, இங்கேதான் வருவார்கள். அவர் கட் டாயம் வருவார். அவருக்கு இது வேறு விதமான பிரச்சினை என்பதால் வந்தே தீருவார். உங்களுக்குத் தெரிந்த பின், அவரிடம் மறைப்பது கடினம். அதனால், தெரியாமல் இருப்பதே நல்லது. நான்தான் சாகமாட் டேன் என்கிறேனே!'' என்றாள்.

''எனக்கே என்னவாகிலும் ஆகலாம்!'' என்றாள்.

''அத்தை!''

''உன்னிடம் தகவல் சொல்லவேனும் உன் முகவரி வேண்டாமா?''

''உங்களுக்கு ஒன்றும் ஆகாது. நானும், அவ்வப் போது, ஃபோன் செய்து பேசி, நிலவரம் தெரிந்து கொள்வேன். அதுபோதும்!'' என்றாள் இந்துமதி, பிடி வாதமாக.

''நான் ரயிலில் போகப் போகிறேன். அப்படி யானால்தான், எங்கே இறங்குகிறேன் என்று யாருக்கும் தெரியாது. முன் பதிவு செய்யாமல் ஏறப்போகிறேன்...''

இந்துமதியின் திட்டங்களைச் செய்கையற்ற கலக்கத்துடன் தேவகி பார்த்துக் கொண்டிருந்தாள்.

தோட்டத்தில் சுற்றிவிட்டு வந்த பத்மாவதி, மகள் துணிகளை மடித்துப் பெட்டியில் எடுத்து வைப்பதைப் பார்த்துவிட்டு, ''இன்றே கிளம்புகிறாயா? அப்படி யானால், இந்துவுக்குப் பிடித்த பலகாரங்கள் எல்லாம் செய்யச் சொல்லுங்கள், அண்ணி! மாப்பிள்ளைக்குப் பிடித்ததும் செய்தால், கொண்டுபோய்க் கொடுப்பாளே, அதையும் செய்யச் சொல்லுங்கள். அவருக்கு என்னென்ன பிடிக்கும், இந்து? சீக்கிரமே சொல்லிவிடு. அப்போதுதான் கிளம்புவதற்குள் இரண்டு, மூன்று தினுசு செய்து வைக்க முடியும், சொல்லு,'' என்று கேட்டபடி, கூடச் சேர்ந்து துணி மடித்தாள்.

மகள் பேசாமலேயே வேலையில் ஈடுபட்டிருக்கவும், ''கேட்கிறேனில்லை? சொல்லேன்! மாப்பிள்ளைக்கு என்ன பிடிக்கும்? அண்ணி, நீங்களாவது கேளுங்கள்!'' என்று அவள் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, மாடிப் படியில் உடையவன் போல, அழுத்தமான காலடிச் சத்தத்துடன் ஆள் வரும் அரவம் கேட்டது.

திகைப்புடன் திரும்பிப் பார்த்தால், வந்தவன் தயானந்தன்.



21

**கா**லடிச் சத்தம் கேட்கையிலேயே, இந்துமதிக்குக் குழப்பங்கள்தான்.

கணவனின் காலடி ஓசை போல இருக்கிறதே என்று நினைத்த அதே வேகத்தில், அவனையே நினைப்பதால் வந்த பிரமை

என்று அதை ஒதுக்கியும் விட்டுக் குனிந்து, கையிலிருந்த துணியைப் பெட்டியினுள் வைத்தாள்.

ஆனால், அதற்குள் மற்ற இரு பெண்களும் எழுந்து விட்டார்கள் - "வாருங்கள், மாப்பிள்ளை!" என்று வரவேற்புடன்.

அவனேதான்!

எப்படி வந்தான்? ஏன் வந்தான்? கிளம்புமுன் வந்து விட்டானே... என்று என்னென்னமோ மனதில் வேகமாக ஓடியபோதும், கணவன் வந்துவிட்டதில் ஓர் ஆறுதலையும் உணர்ந்து, அந்த ஆறுதல் உணர்ச்சிக்காகத் தன்னையே வெறுத்தபடி, இந்துமதி அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

ஆனால், அவளுக்கும் சேர்த்துப் பத்மாவதி பேசினாள். "மாப்பிள்ளை! நீங்கள் இந்துவைக் கூட்டிப் போவதற்காக வந்தீர்களா? அது தெரியாமல், உங்களுக்குக் கொண்டு போவதற்காக, உங்களுக்குப் பிடித்த பலகாரம் என்னதெல்லாம் என்று அவளைக் கேட்டுக் கொண்டிருந்தேன். நீங்களே வரப்போகிறீர்கள் என்று சொல்லாமல், இந்த அசட்டுப் பெண், சும்மா உட்கார்ந்திருக்கிறாள். இப்போது, நீங்களே சொல்லுங்கள் மாப்பிள்ளை, உங்களுக்கு என்னென்ன பிடிக்கும்?"

"உங்கள் மகளுக்கு என்னென்ன பிடிக்குமோ, அதெல்லாம்தான் எனக்கும் பிடிக்கும் என்பது, அவளுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். அத்தை! நீங்கள் இவளுக்குப் பிடித்ததைத் தயார் பண்ணச் சொல்லுங்கள். அதுவே சரியாக இருக்கும்!" என்று தலை நிமிராமல் அமர்ந்திருந்த மனைவியையே பார்த்தபடி மாமியாருக்குப் பதிலளித்தான் மருமகன்.

அசைவற்றிருந்த இந்துவிடம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு, 'பாவம்! அவ்வளவு தூரப் பயணம் செய்து வந்திருக்கிறார்! இங்கே இருந்து ஓய்வெடுக்கட்டும். நாம் போய்ச் சமையலைப் பார்ப்போம், வா பத்மா!' என்று தம்பி மனைவியை அழைத்துக் கொண்டு, தேவகி கிளம்பினாள்.

இருவரும் படியிறங்கிச் செல்லும் வரை பார்த்திருந்துவிட்டு, கட்டிலின் ஓர் ஓரமாக அமர்ந்தபடி, "என்னை எதிர்பார்க்கவில்லை அல்லவா?" என்று கேட்டான் தயானந்தன்.

"எ...எப்படி வந்தீர்கள்?" என்று கம்மிய குரலில் கேட்டாள் மனைவி.

"எப்படி என்று நீ நினைக்கிறாய்?" என்று பதில் கேள்வி கேட்டான் அவன்

"அண்ணியா?"

"பிரியத் தூண்டியவர்களே, இணைய விடுவார்களா?"

பிரியத் தூண்டியவர்களா? யாரைச் சொல்லுகிறான்? அண்ணிகளையா?

அவர்கள் இருவரும் பிரியும்படி, ஒரு வார்த்தை சொன்னதில்லையே! அந்த டெலிபோன் பேச்சுக்கூட அவர்களுக்குள் மட்டுமாக என்ற நோக்கத்தில்தானே சொல்லப்பட்டது?

அத்தோடு, அது இவனுக்கு எப்படித் தெரியும்?

அதை அவர்களே சொன்னாலன்றி, இவன் எப்படி அறிய முடியும்?

இவனானால், பிரியத் தூண்டியவர்கள், இணைய விடுவார்களா என்கிறானே?

எதையோ செய்வது போன்ற பாவனையுடன், பெட்டிக்குள்ளேயே நோண்டியபடி, ''புரியவில்லை!'' என்றாள் சுருக்கமாக.

அதற்குப் பதில் சொல்லாமல், ''பரவாயில்லை. என் முகத்தைப் பார்த்துக்கூடப் பேசலாம்!'' என்றான் அவன்.

திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தால், அவனது சிவந்திருந்த கண்களும், ஷேவ் பண்ணாத முகமும், அவளைக் கலங்கடித்தன.

அவனை அறிந்ததிலிருந்து, ஒரு நாள் கூட, அவனை இப்படி அவள் பார்த்தது இல்லையே. வேலை முடிந்து வரும் போதுகூடப் பளிச்சென்று இருப்பானே! உடம்பு ஏதும் சரியில்லையோ? காய்ச்சலோ? தலைவலியால் கண் சிவந்திருக்கிறதோ...

பதறி, இளகத் தொடங்கிய மனதை, அடக்கிக் கட்டுப்படுத்தினாள் அவள்.

இப்படிக் கலங்குவாள் என்றுதான் முகத்தைப் பார்க்கச் சொன்னானோ?

கண்ணைக் கசக்கி விட்டால் சிவந்துபோகும். ஒரு நாள் தாடி, மீசை மழிக்காவிட்டால் ஆண்முகம் சோர்ந்து தெரியும்.

உடனே பார்வையை அகற்றிக் கொண்டு, 'இன்னமும் நீங்கள் சொல்லவில்லையே!' என்றாள் அவள்.

''நீ ஒன்றும் முட்டாள் இல்லையே! யோசி. யார் என்று, இன்னமும் யோசி!''

''மாமா.''

''ஆமாம்! உன் மாமனாரேதான்! உன்னைப் பொறுப்புள்ளவள் என்று எண்ணினேனே! அப்பாவை அப்படியே விட்டுவிட்டுக் கிளம்பிவிட்டாயே!'' என்று அது

தான் பெரிய பிழை போலக் குற்றம் சாட்டினான் தயானந்தன்.

''புது நர்ஸ் பற்றி மாமா மிகவும் திருப்தியாகச் சொன்னார்! அதன் பிறகுதான் கிளம்பினேன்.''

''அப்படியானால், மும்பை திரும்பியதும், முதல் வேலையாக அவளை விரட்ட வேண்டும்,'' என்றான் அவன் கடுமையான குரலில்.

''ஏன்?''

''அப்படியானால்தானே, நீ திரும்பி வருவாய்?''

கண்ணில் சிரிப்புடன் அவன் கூறியது, அவளது கொதிப்பைக் கிளப்பிவிட்டது.

இப்படி இவன் சிரித்துப் பேசினால், நாய்க்குட்டி மாதிரி வாலை ஆட்டிக் கொண்டு, அவனோடு திரும்பிப் போய் விடுவாள் என்று எண்ணினானா?

ஆத்திரம் மிக, ''கோகிலா கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டாள் என்று எனக்குத் தெரியும். அங்கே உங்களுக்கு நான் எதற்கு?'' என்று சீறினாள் அவள்.

புருவம் சுருக்கி, அவளைக் கூர்ந்து பார்த்துவிட்டுத் தயானந்தன் சொன்னான். ''இந்த இரண்டு விஷயங்களுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. ஆனால், நாம் இருவரும் மனம் விட்டு, நிறையப் பேச வேண்டியிருக்கிறது என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது. கவனி, இந்து. என் விஷயம் சொல்கிறேன். நேற்று நீ வீட்டை விட்டுக் கிளம்பியதும், அப்பா எனக்கு ஃபோன் செய்தார். உன் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று பொய் சொல்லிவிட்டு, நீ மும்பையிலிருந்து கிளம்பியிருப்பதாகச் சொன்னார்.''

திகைப்புற்று, ''பொய்யென்று மாமாவுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள் இந்துமதி.

''இடிந்து போன மாதிரி இருந்த உன் முகம், அவருக்குச் சந்தேகத்தை உண்டு பண்ணியிருக்கிறது. உடனே, இங்குள்ள நிர்வாகியிடம் கேட்டிருக்கிறார். அத்தை ஆரோக்கியமாக இருப்பது தெரிந்ததுமே, அப்பா என்னைக் கூப்பிட்டுப் பேசினார். கையில் என்ன வேலை இருந்தாலும், அப்படியே போட்டுவிட்டு, உடனே கோவைக்கு வந்து, உன்னைச் சந்தித்துப் பேசச் சொன்னார்!

''நீ கோவையில் இருக்கக் கூடியதும் மிஞ்சி மிஞ்சி இரண்டே நாட்களே. அதற்கு மேல், இங்கே தங்காமல் கிளம்பி விடும்படி, பெரியக்கா உன்னைத் தூண்டி விட்டிருப்பதாகவும் சொன்னார்!''

''இல்லையே. அண்ணி ஒன்றும் என்னைத் தூண்டி விடவே இல்லையே!'' என்று மறுத்தாள் இந்துமதி.

''பின்னே, அக்கா சொன்னதற்கு என்ன அர்த்தமாம்? இரண்டே நாட்களில், தயா திரும்பி விடுவான். வந்ததும், உன்னைத் தேடி அங்கே வருவான் என்று அழுத்தி, அக்கா சொன்னதன் பின்னே இருந்தது, இன்னுமா உனக்குப் புரியவில்லை? இரண்டுநாட்களில் உன்னைப் பிடித்து இழுத்து வருவதற்காகத் தயா அங்கே உன்னைத் தேடி வருவான். அதற்குள் அங்கிருந்து விலகி ஓடிவிடு என்று சொல்லாமல் சொல்வதுதானே? அப்பாவுக்கு மனதில் பட்டு, உடனே வா என்றார். தொழில் பேச்சுக்களை இடையில் விட்டுவிட்டு நான் வந்ததால், நமக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டம் எவ்வளவு தெரியுமா? சுமார் முப்பது லட்சங்கள்!''

''என்னது? இருந்து வேலையை முடித்துவிட்டே வந்திருக்கலாமே!'' என்றாள் மனைவி.

எவ்வளவு பெரிய தொகை!

''என்ன செய்வது? அடுத்த இரண்டு நாட்களுக்குள் உன்னை வந்து பாராவிட்டால், அதன் பின் உன்னைக் காண்பதே முடியாமல் போய்விடும் என்று அப்பா வுக்குத் தோன்றிவிட்டது. அவரது வார்த்தையை ஏற்று, உடனே வந்தேன்.''

அப்பாவின் வார்த்தை!

தீப் பார்வை பார்த்து, ''அப்பா வார்த்தைக்காக, நீங் கள் என்ன வேண்டுமானாலும் செய்வீர்கள் என்றுதான், எனக்கு நன்றாகத் தெரியுமே!'' என்று கொதிப்புடன் கூறியவளை, வியந்து நோக்கினான் தயானந்தன்.

''தந்தை சொல்படி நடப்பதில் என்ன தப்பு?''

''தப்பு என்று யார் சொன்னார்கள்? பெரிய குடும்பத்துப் பெண்ணை மணந்து, ஓர் ஆண்டுக்குள் பேரக் குழந்தை பெற்றுத்தராவிட்டால், சொத்தில் ஒரு பைசா தர மாட்டேன் என்றால், முன்பின் அறியாத பெரிய வீட்டுப் பெண்ணை, அக்காமார் வரவுக்காகக் கூடக் காத்திராமல், அவசரக் கல்யாணமே செய்ய லாமே! யார் கூடாது என்பார்கள்? தந்தை சொல் தட்டாத தனயன் என்று பாராட்டத்தான் வேண்டும்!'' என்றாள் அவள் எகத்தாளமாக.

''அப்பா அப்படிச் சொன்னதாக, உனக்கு யார் சொன்னார்கள்?''

''அதைக் கூடவே இருந்து கேட்டுக் கொண்டிருந்த செல்வம்.''

"என்னது? செல்வமா? கடவுளே! என்ன இது? கூடப் பிறந்தவர்கள் என்று என் கண்கள் மூடியிருந்தன. ஆனால், பெற்ற என் தந்தைக்கு எல்லாமே தெரிந்திருக்கிறது. அக்காமாரோடு, நீ அதிக நேரம் கழிக்காமல் நிறுத்த வேண்டும் என்று, அவர் சொன்னது ஏன் என்பதுகூட, இப்போதுதான் நன்றாகப் புரிகிறது. இந்துமதி, இதை நீ நம்ப வேண்டும். அக்கா இருவரும் வருமுன் நம் திருமணத்தை நடத்திவிட வேண்டும் என்றது, அப்பாதான். அவர்கள் வந்துவிட்டால், திருமணமே நடக்காது என்றார். வேடிக்கையாகச் சொல்லுவதாக அப்போது நினைத்தேன். அப்புறமும், அப்பா சொன்னதை நான் ஒத்துக்கொள்ளவில்லை! இபபோது பார்த்தால்... சொல்லும்மா. என்ன நடந்தது? எதற்காக மும்பையிலிருந்து கிளம்பி வந்தாய்?" என்று ஓர் அவசரத்துடன் தயானந்தன் வினவினான்,

அவள் எண்ணியது போலவே, கதை சொல்லத் தொடங்கிவிட்டான் என்று வெறுப்புடன் எண்ணினாள் இந்துமதி.

அவள் கல்லாக இறுகி அமர்ந்திருப்பதைக் கண்ட தயானந்தன் ஒரு கணம் யோசித்துவிட்டு, "இந்து!" என்று, மென்மையாக அழைத்தான்.

ஒரு நீண்ட மூச்சை எடுத்து விட்டு, "இருபுறமும் தீட்டிய கத்தி போல, இதை நான் இப்போது சொல்வது, எனக்கே எதிராகக்கூட முடியலாம். ஆனால், சொல்லாமல் ஒன்றுமே நடக்காது. பாரம்மா, ஏழு ஆண்டுகளுக்கு முன்னதாக உன் தாத்தா எனக்குக் கொடுத்த ஆலோசனை, ஒரு பெண்ணைப் பற்றி! என்னை வளைத்துப் பிடித்து, அதைக்காட்டி என்னிடம் பணம் பறிக்கத் திட்டம் போட்டவளை, நிலைமை மீறுமுன், எனக்குக்

காட்டித் தந்தார். அன்றிலிருந்து, முதல் முதலாக உன்னைப் பார்க்கும் வரை, நான் எந்தப் பெண்ணையும் மனதால்கூட நினைத்தது இல்லை.

''உன் தாத்தாவின் அலுவலகத்தில் உன்னைப் பார்த்ததுமே, நீ என் மனதில் பதிந்துவிட்டாய். ஆனால் அவரோ, 'வருங்கால மாமியாருக்காக' என்று உனக்குத் திருமணம் நிச்சயமாகி விட்டதைச் சொன்னார்! இருப்பினும், வெளியே விசாரித்தேன். அந்த சுரேசனைவிட, நான் உயர்ந்த மாப்பிள்ளை இல்லையா என்று கேட்கக் கூட ஆசை. ஆனால், ஒரு பெண்ணின் விஷயத்தில் அவ்வளவு மூடனாக நடந்துவிட்டுப் பேத்தியைக் கொடு என்று, அவரிடமே எப்படிக் கேட்பது?

''அதுவும் நிச்சயித்த திருமணத்தை நிறுத்திவிட்டு?

''ஆனால், நீ அடிக்கடி நினைவில் வந்தாய், முக்கியமாக, உன்னை மறக்கத்தான், நான் ஆழ்கடல் மூழ்கலுக்குப் போனது.

''திரும்பி வந்தால், என் அதிர்ஷ்டம், உன் தாத்தாவே உன்னை மணப்பது பற்றி என்னிடம் பேசினார். அவருக்கு மகிழ்ச்சியோடு வாக்குக் கொடுத்தேன்.

''திருமணத்தை அவசரமாக நடத்த இன்னொரு காரணம் சுரேசன் குடும்பம். 'தர்மா' நிமிர்ந்துவிட்டது தெரிந்து, மீண்டும் உள்ளே வந்துவிழ, அவர்கள் முயற்சிப்பார்களோ என்ற பயம்! ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்டவன் என்பதால், உன் மனம் அவனிடம் சாய்ந்து விடாது என்று என்ன நிச்சயம்?

''அப்பா எப்போதுமே, பேரக் குழந்தை பற்றி, விளையாட்டாக என்னை மிரட்டுவது வழக்கம்தான்.

நாலைந்து ஆண்டுகளாகவே, உள்ளூர அவருக்கு மிகுந்த ஆசை. ஆனால், நீ சொன்ன அந்தப் பெரிய குடும்பத்துப் பெண் 'முழுக்க முழுக்கக் கற்பனையே!'

"இந்து, உனக்குப் புத்திக் கூர்மை நிறையவே உண்டு. அன்று அப்பாவின் உடம்பு பற்றிச் சொன்னதும், உடனேயே, அதை உன் தாத்தாவின் உடம் போடு இணைத்துப் பேசவில்லை? அவ்வளவு புத்திசாலி, என்னைப் பற்றித் தவறாக, எப்படி எண்ணினாய்?

"இந்து, இந்த ஏழு ஆண்டுகளாகப் பெண்கள் விஷய மாக, நான் சிறு தவறும் செய்தது இல்லை என்பது, எனக்கு நிச்சயம். அது உனக்கும் நிச்சயமாகி, நம் வாழ்வு நல்லபடியாக அமைய வேண்டும் என்பதற்காகக் கேட்கிறேன். என்னைத் தவறாக நீ நம்பும்படி அப்படி என்ன நடந்தது? சொல்லு!" என்று ஆழ்ந்த குரலில் தெளிவான உச்சரிப்புடன் தயானந்தன் விசாரித்தான்.

என்னவோ, அதற்கு மேல், இந்துமதிக்கு எதுவும் மறைக்கத் தோன்றவில்லை.

மூன்று பிள்ளைகளுக்கும் பெயர் வைத்தது பற்றிக் குறிப்பிட்டு, அவள் பாராட்டியபோது, வேடிக்கை போலவே பாண்டுரங்கன் சொன்னதும் நினைவு வந்து உந்த, நடந்தவை, அவற்றின் விளக்கங்கள் எல்லாவற்றையுமே கணவனிடம் தெரிவித்தாள்.

சொல்லும்போதே, ஒவ்வொரு சம்பவத்திலும், நாத்த னார், நாத்தனாருடைய பிள்ளை என்று, அவர்கள் யாரா வது சம்பந்தப்பட்டிருப்பது, அவளுக்கே புரிந்தது.

கோகிலா வேறுபாடாக நடந்தாள் என்றால், அவளும் காருணாகரியுடைய உறவினள்தானே!

அவள் புத்திசாலி என்று கணவன் கூறியதற்கிணங்க, சிக்கலைத் தானே தீர்த்துவிட்டதாக இந்து மகிழ்ச்சியோடு

நினைத்தபோது, அந்தக் கடைசி ஃபோன் கால் 'ணங்' கென்று அவள் தலையில் ஒரு குட்டு வைத்தது.

அதுவும் நாத்தனார்கள் சம்பந்தப்பட்டதுதான்.

ஆனால், டெலிபோனை இந்துமதி எடுப்பாள் என்று, கருணாகரிக்கு எப்படித் தெரியும்? அந்த நேரத்தில்...? அவளுடைய அக்கா வீட்டில்!

இப்போது, இருவருமாகச் சேர்ந்து யோசித்தார்கள்.

சற்று நேரம் யோசித்த பிறகு, "இப்படி யோசித்துப் பார், இந்து! இது முழுக்க, முதலிலேயே திட்டமிட்டதாக இருந்தால்? அன்று பார்த்துச் சாப்பாடு வந்த பிறகு அது வேண்டாம் என்று செல்வம் நூடுல்ஸ் செய்து தரச் சொல்லிக் கேட்பானேன்? ஃபோன் மூன்று தரம் அடித்து நின்றதாகச் சொன்னாயே, அது அவர்களிடையே ஏதாவது, அடையாளக் குறிப்பாக இருக்கலாம் அல்லவா? அப்புறமும் ஃபோனை எடுக்கும்படி அக்கா உன்னை விரட்டி இருக்கிறாள்! அவளது வீட்டு ஃபோன், அடுப்பை நீ பார்த்துக் கொள், நான் ஃபோனை எடுக்கிறேன் என்றல்லவா சொல்லியிருக்கவேண்டும்? அதை விட்டு, நீ பேசு என்று உன்னை வற்புறுத்தி அனுப்பினால், அது எங்கேயோ இடிக்கவில்லை?" என்று கேட்டான் தயானந்தன்.

இருந்த இடத்தை விட்டு எழுந்து, ஓடியே போய், அவனைக் கட்டிக் கொண்டாள் இந்துமதி.

"ஐயோம்மா! அப்படியேதான் நடந்திருக்க வேண்டும்! தயா, தயா, யோசித்துப் பாராமல், எவ்வளவு துன்பத்தை இழுத்து வைத்துவிட்டேன்! நானும் வேதனைப் பட்டு, உங்களையும் கஷ்டப்பட வைத்து... கடவுளே நஷ்டம் வேறு! முப்பது லட்சம்!" என்று வருந்தினாள்.

''பணத்தை விடும்மா! ஒன்றில் விட்டால், இன்னொன்றில் பிடித்துக் கொள்ளலாம், ஆனால், நல்ல நேரத்தில் கஷ்ட நஷ்டத்தைப் பற்றி யாராவது பேசுவார்களா? ஐந்து நாட்களாக ஏங்கிக்கிடந்தேன்! இங்கே வந்தால், கையெட்டும் தூரத்தில் உன்னை வைத்துக் கொண்டு, கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருக்க வேண்டியதாயிற்று. தொட்டால், செக்சை வைத்துப் பணிய வைக்க முயற்சியா என்று சீறி விடுவாயோ என்ற பயம்! நடுக்...கம்! நல்ல வேளையாக, நீயாக வந்து அணைத்தாயப்பா!'' என்று சிரித்துக் கொண்டே அவளைக் கைச்சிறைக்குள் அடக்கினான் தயானந்தன்.

சிறு அமைதியின் பின், ''தயா! எனக்கு இன்னொரு சந்தேகம்!'' என்றாள் இந்துமதி.

''இன்னுமா? கடவுளே! வேண்டாம்மா!'' என்று வருத்தம் காட்டிக் கெஞ்சினான் அவன்.

''ச்சு... விளையாடாதீர்கள். இந்த அண்ணி இருவரும், உங்கள் கூடப் பிறந்தவர்கள்தானே? நீங்கள் அவர்களிடம் அன்பாக இருக்கிறீர்கள். அவர்கள் மட்டும், உங்கள் திருமணத்தைத் தடுப்பது, நம்மைப் பிரிப்பது என்று ஏன் இப்படிச் செய்தார்கள்?'' என்று வினவினாள் அவள்.

''சொத்து ஆசை என்கிறார் அப்பா. இருவருக்கும் பிறகு,ரொம்ப வருஷம் கழித்துப் பிறந்தேன் அல்லவா? எல்லாச் சொத்துக்கும் அவர்களே வாரிசு என்பதுபோல எண்ணியே வளர்ந்துவிட்டார்கள். பிறகு, திருமண எண்ணமே இல்லாமல் நான் இருந்தது வேறு. நானும் நிறையச் சம்பாதிக்கிறேனா? இந்தப் பணமும், முழுசாகத் தங்களுக்கே சேர்ந்து விடாதா என்ற, அசட்டுப் பேராசை!

கார், நகை, வீடு,நிலம் என்று எவ்வளவு கொடுத்தாலும், திருப்தியில்லாமல் போய்விட்டது. போகிறார்கள், விடு. இதற்காக, அவர்களை விரட்டி விடப் போகிறோமா? கொஞ்சம் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். அவ்வளவுதான்!'' என்று முடித்தவன், ஓரக் கண்ணால் மனைவியை நோக்கினான்.

''சும்மாவா சொன்னார்கள், ஆசைதான் பாவத்துக்கு வித்து என்று? மண்ணாசை, பொன்னாசை, பெண் ணாசை...''

''ஆமாம்ப்பா... பெரியவர்கள் சொன்னால் சரியாகத் தான் இருக்கும். பெண்ணாசை ரொம்பப் பொல்லாதது என்றுதான் எல்லோரும் சொல்லுகிறார்கள். அதனால், இனிமேல், உங்களிடமிடருந்து, கையெட்டும் தூரம் தள்ளியே இருந்து கொள்கிறேன்!'' என்று அவனிட மிருந்து நகர முற்பட்டாள் இந்து.

அவளை விடாமல் பற்றி, ''ஆனால், தந்தை சொல் மிக்கதோர் மந்திரமில்லை' என்று பெரியவர்கள் சொல்லி வைத்திருக்கிறார்களே! என் அப்பா, அரை டஜன் பேரப் பிள்ளைகளாவது வேண்டும் என்கிறார்! எப்படியோ, என் அப்பாதான் எனக்கு முக்கியமாகப் பெரியவர். அதனால், அவரது சொல்லை நிறைவேற்றத்தான் நான் முழு மூச்சோடு பாடுபடப் போகிறேனாக்கும்! என்ன செய்வது? நம் குடும்பத்துப் பெரியவர் வார்த்தை!'' என்று சாதுவாய் முகத்தை வைத்துக் கொண்டு, அவன் கூற, அவள் சலங்கையாய்ச் சிரித்தாள்.


காதல்
கொண்டது
மனது
ரமணிசந்திரன்